முரசொலி

அண்ணா மலர் - 1975 விலை ரூ. 1

கலைச் செல்வங்களை காப்பது நமது கடமை

எழில்மிகு சிற்பங்கள், சிலைகள்,
கலை நுணுக்கமிக்க ஒப்புயர்வற்ற
கவினுறு சரித்திரச் சின்னங்கள்
தமிழகமெங்கும் இருக்கின்றன.
தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பின்
சான்றுக நிற்கும் இக்கலைச்
செல்வங்கள் அழிந்து போகாமல்
காப்பது நமது கடமையன்றே!

நம் பழம் பெரும் கலைச் சிறப்பை
கட்டி காத்திடவும், தமிழகம் வரும்
சுற்றுலா பயணிகள் கண்டு
களித்திடவும் இக் கலைச்
செல்வங்களைப் பேணிக்காப்போம்!

தமிழகத்தின் சிறப்பியல்புகளை
யாவரும் கண்டுகளித்திடப்
பணிபுரிவோம்.

இயக்குநர், சுற்றுலாத்துறை
தமிழ்நாடு அரசு சென்னை-600009.

COVER PRINTED BY LOTUS OFFSET PRINTERS MADRAS - 13

ORWO Films have years of research and experience behind them. Made in Wolfen, a town in the GDR dedicated for the last 60 years to the research and production of all types of films, they have earned a name for excellence through sheer, consistent high quality.

When it comes to Photo, Cine and X-ray films, remember ORWO. They are respected and trusted all over the world.

ORWO Film

VEB FILMFABRIK WOLFEN, FOTOCHEMISCHES KOMBINAT

GERMAN DEMOCRATIC REPUBLIC

Distributors:
ORWO FILMS EASTERN UNIT
Madras and Calcutta.

RESPECTED AND TRUSTED ALL OVER THE WORLD

JAISONS-3186

ORWO PHOTO — CINE — X-RAY FILMS

தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம்

அரிசன முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசின் ஆக்கப்பணிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் விருப்பத்திற்கிணங்க, சமுதாயத்தின் அடித்தளத்தில் அல்லலுறும் அரிசன மக்கள் வீட்டு வசதி பெறுவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, 1974ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள், தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழ் நாட்டிலுள்ள சுமார் 75 லட்சம் வீடில்லா ஏழை அரிசனங்களுக்கெனக் குறைந்தது 10 லட்சம் வீடுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. இதனை மனதில் வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1974-76 ஆம் ஆண்டுகளுக்குள் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தினைச் செயலபடுத்த ஆணை பிறப்பித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக, 30,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

இதைத்தவிரக் கீழ்க் காணும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் அரிசனங்களுக்கெனச் செயல்படுத்தப்படுகின்றன.



- 1976 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏழை அரிசனங்களுக்கு ஒரு லட்சம் வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுத்தல்
- 1975-76 ஆம் ஆண்டுக்குள் அரிசன, பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கென 150 விடுதிகள் அமைக்கும் திட்டம்
- 1975 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகளுக்கென 50 காப்பகங்கள் கட்டும் திட்டம்.
- அரிசன கிராமங்கள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளித்தல், இணைப்புச் சாலைகள் அமைத்தல் மற்றும் மின்சார இணைப்புத் தருதல்
- கறவை மாடுகள் வாங்க உதவுதல்
- கோழி வளர்ப்புப்பண்ணை அமைத்துக் கொடுத்தல்
- ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கப் பண உதவி அளித்தல்
- செங்கல் சூளை, சுண்ணாம்புச் சூளை அமைத்தல்
- பாய் முடைதல், தோல் பொருட்கள் உற்பத்தி, ஆட்டு ரோம ஏற்றுமதி போன்ற கைத்தொழில்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்
- தோடர் பெண்மணிகளுக்குத் தையல் பூ வேலை நுங்கலைப் பயிற்சிக் கூடம் அமைத்தல்
- நரிக்குறவர்களுக்கு மணிமாலை உற்பத்தி நிலையம் அமைத்தல்
- ஏழை அரிசன குழந்தைகள் பாராமரிப்புக்கென நல வேலைகள் செய்தல்

ஆர்.ஏ. சீதாராமதாஸ் I.A.S.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம்
சென்னை-600020



பெரியாருடன் இணைந்து பணி யாற்றியவர் பற்பலர்.

அவருடன் மற்ற பலரையும் விட இடை விடாது இருந் திடும் வாய்ப்பைப் பெற்றி ருந்தவன் நான்.

அந்த நாட்கள் எனக்கு மிக இனிமையான நாட்கள்.

இன்றும் அதை நினைவிலே கொண்டு வரும் போது இனிமை பெறுகின்றேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாட லின் மூலம் தந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார்.

பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும் அகமகிழ்வும் மன நிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பல ரிடம் பேசிடக் கேட்டிருக் கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; உன்னை எனக்கு தெரியும் போ! என்று உரத்த குரலில் கூறியதையும் கேட்டிருக் கிறேன்.

ஒரு நாள் கூட என்னிடம் அவர் அவ்விதம் நடந்து கொண்டதில்லை.

எப்போதும். ஒரு கனிவு எனக்கென்று தனியாக வைத்திருப்பார்.

என்னைத் தமது குடும்பத்தில் பிறவாத பிள்ளையெனக் கொண்டிருந்தார். நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவனைத்தான்.

—அண்ணை

தந்தை பெரியார் அவர்களின் 86-வது பிறந்த நாள் மலரில் எழுதிய கட்டுரையிலிருந்து.

அண்ணனே! எங்கள் இதயமே!

அண்ணனே! எம்மை இதயமே
உன் பிரிவு தரும், துயரம்
எழுதவும் இயலா பேரிடம்
பிரிவு தரும். இயற்கையின்
உரிமை வேண்டல் நோய்
பிரிவு தரும். துயரங்களுக்
கேற் புதிய வாழ்வு பிரிவு
தரும். விதியின் மாயலை
மதிக்கவே பண்பாடு பிரிவுதரும்

எம்மை தூண்டி, உன் வீர
உரைப்பில் ஏற்பதாய்க் கூடத்
தொடாத உயர்வுகள்
தந்தாய். உன் இனக் கொள்கையே
எதை எனை நெருப்பின் நடுவே
வாழவே தன் இன்பம் கண்ட
உன்னதம் தந்தாய். அப்பாற்
கொள்கை எழுச்சி மொழிதொட
உன்னுள் சேர்ந்து உயிர்ப்பை
இழந்தாயே நீ.

இதே பயணம் தான் வாழ
வென்றோம் உன்னுள் இருந்த
தான் தன்னம்பிக்கை தேன்பாகாய்
இனித்த பயணம் தான்!

எத்தனை இரவுகள் உன்
னுடன் உரையாடியதுண்டு.
உரையாடலா அது? நீ நடித்த
எழுதிய - பொழுதுகளா - வீரியம்
ஏற்படுத்தின அல்லவா?
இன்று நான் தான் தூண்டி விட்டேன்
தூண்டினேன் என்று சொல்
லுவதும். இல்லை. நீ தான்



நடித்து கொண்டிருக்கிறேன்.
எல்லையும் தேர்ந்து தான்
கொண்டிருக்கிறேன்.
"தம்பி வா! தமிழை என்னுடன்
உன் தோளுக்குத் தோள் நின்று
நடத்தலாம், வா!"
என நீ நாவலனை வழிமொழிந்து, ஈழநாடகத் தாயகத்தை
ஒளிவிட தாய்தான் மகிழ்ந்து
போனாளா?
"இயக்க வாலாற்றின் ஏடுகளில்
என் நான் எழுதிவிட்டேன்.
தொடர்ந்து எழுதத் தம்பி இருக்கின்றான்"
என, மண்ணில் பொதுத் தொண்டில் நீ முதலில் சேர்ந்துவிட்ட
என்ன திருத்தும் சேர்த்தொன்றி
விட்டுப் போனாயே; தாய் உன்
நம்பிக்கை இயக்கம் இந்தத்
தம்பிகள் நாடகப்போதைத் தொடர்ந்து, என்றும் அவர்களை
அணைவும் நீ இருப்பதால்தானே!
நீ உருவாக்கிய நடிகன் -
நீ உயர்த்திய கொடி -
நீ முடிக்கிய கொள்கை
என்றும் தேக்கமுறாது வளர்ந்து
விட்டனை! அனைவரும் உன்
பாதம் உன்னையே தினந்து
நின்று கோதமாகத் தாய்தான்
கொண்டு வேண்டுவோம்;
எதிர்த்து வெற்றி
தன்னிலை கொள்ளவேண்டும். என்று
நீ அமைத்த நடிகன், தின்று
தினந்தோறும் தென்னோடு தொடர்பு கொண்டிருக்கிறது.
அதன் பொறுப்பில் தலைமை
என்னிடம் பிரியமானவனே!
உன் தோற்ற விழிகள்தான்
தெரிகின்றன. அந்த வெளிச்
சத்தில் நமது இயக்கப்
பயணத்தின் வெற்றி என்ப
னையே தொடரவும் என்று உறுதி
எடுத்துக் கொண்டோம்.
அதனை நிறைவேற்றி
முடிப்போம். நிச்சயம்! நிச்சயம்!
நீ, என்றும் நடித்துக் கொண்டிருப்பாய்!

வாழ்க நின் கீர்த்தி!
வாழ்க நின் நியமம்!
வாழ்க எம்மினம்!



18/9/15

"தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு!"

மாறன்

"ஆரியர்களின் வருகைக்குப்பிறகுதான் இந்தியாவில் வரலாறு துவங்குகிறது. தென்னிந்தியாவிலும் அப்படித்தான்!"

— என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியும் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரும் எழுதியுள்ளனர்.

ஆனால், உண்மை அது வல்ல.

இதோ பேராசிரியர் இரத்ன சாமி கூறுகிறார்:

"வரலாறு இந்தியாவில் தெற்கில்தான் துவங்கியது. உலகத்தின் பிற பகுதிகளில் — ஐரோப்பாவில், அமெரிக்காவில், ஆசியாவில் தெற்கில்தான் சரித்திரம் துவங்கியது. ... நல்ல சீதோஷ்ணநிலை, மரமும் தண்ணீரும் அபரிமிதமாகக் கிடைப்பது, கடலுக்கு அருகாமை ஆகியன காரணமாக தெற்குதான் ஒருநாட்டின் நாகரிக கலாச்சார ஏணியின் முதற்படியாகும். இந்தியாவிலும் அப்படித்தான்!"*

அப்படி ஒரு உன்னதமான வரலாற்றிற்கும் கலாச்சாரத்திற்கும் சொந்தக்காரர்கள் திராவிடர்கள்!

நிக் வேதத்தில் உள்ள பாடல்கள் தங்களது எதிரிகளான திராவிடர்களின் மாபெரும் நகரங்களைப் பற்றியும், அவர்களது அளப்பரிய செல்வம் பற்றியும் கூறுகின்றன!

அந்த நாகரிகத்தைப் பற்றி அவர்கள் பொருமைப்பட்டனர்! தங்களுக்குக் கிடைக்கவில்லையே — என்று ஏங்கினர்!

பழந்திராவிட மக்கள் அதிக நாகரிகமும், கலாச்சாரமும் பெற்றவர்கள் மட்டுமல்ல; வீரதீரத்திலும் போர்க் குணத்திலும் அவர்கள் நிகரற்றவர்கள்!

அவர்களை எதிர்த்துப் போரில் வெற்றிபெற வேண்டுமே என்கிற கவலை வேத பாடல்களில் எங்கும் காணக் கிடைக்கின்றன!

இந்திரனைக் குறித்தும், அக்னியைக் குறித்தும் அவர்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறார்கள்; தோற்றுவிட்டால் என்ன ஆகுமோ? — என்கிற கவலை எப்படி அவர்கள் நெஞ்சைப் பிழிந்திருக்கிறது என்பதை அந்த வேத பாடல்கள் விளக்குவதாகப் பேராசிரியர் இரத்னசாமி கூறுகிறார்.

— உலகத்தில் வேறு எந்த மக்களும் எதிரிகளைக் கண்டு அஞ்சி நடுங்கி, வெற்றி தோல்வி நெறிகளையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். "மண" முறை அவர்களிடையே இடம்பெற்றிருந்தது. தகரம், ஈயம், தூத்தநாகம் இம்மூன்றும் நீங்கிய உலோகப் பொருள்களை அவர்கள் அறிந்திருந்தார்கள். கோள்களில், பழங்கால உலக மக்கள் அறிந்திருந்த, புதனும், சனியும் நீங்கிய கோள்கள் அனைத்தையும் அவர்களும் அறிந்திருந்தார்கள்; அருநோய் போக்கும் "மருந்து" அவர்களுக்குத் தெரியும்; "சிற்றூரும்" "பெருநகரும்" அங்கு இருந்தன; மீன் பிடிக்க உதவும் "திமில்" "கட்டுமரங்"களும், பெருங்கடல் ஓடவல்ல "கலங்களும்" "நாவாய்"களும் அவர்களின் உடமையாய் இருந்தன. தீவு, கண்டங்களை உணர்த்தும் சொற்கள் மட்டும் அவர்கள் மொழியில் ஆட்சியில் இல்லை.

"உழவு"த் தொழிலை நன்கு உணர்ந்திருந்தார்கள். "போர்" என்றதும் பூரித்தன அவர் தோள்கள். "வில்", "கணை", "வேல்" "வாள்" முதலாம் படைக் கலங்களில் பயிற்சி மிகுந்திருந்தனர். நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாத துணைத் தொழில்களாய், "நூல் நூற்றல்", "நெய்தல்", "வண்ணம் ஊட்டல்" ஆகிய தொழில்களை அவர்கள் அறிந்திருந்தார்கள்."*

தமிழ் மொழியிலிருந்து சமஸ்கிருதச் சொற்களை அறவே நீக்கிவிட்டு எஞ்சி நிற்கும் சொற்களை வைத்து டாக்டர் கால்டுவெல் தீட்டியிருக்கும் பழந்தமிழர் 'உயிரோவியம்' இது!

இந்தி இலக்கியம் 12-ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றவில்லை.

வங்கமொழி இலக்கியம் 11-ஆம் நூற்றாண்டில் துவங்கியது.

மராத்தியிலும், பஞ்சாபியிலும் இலக்கியங்கள் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றின.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் — ஆகிய மொழிகளில் 8-ஆம் நூற்றாண்டிற்குப்

தொடர்ச்சி 27-ம் பக்கம்

அந்த 'உயிரோவியம்' பற்றி இதோ டாக்டர் கால்டுவெல் சுவைபடக் கூறுகிறார்:

"(தமிழ்) மொழியின் பழம்பெரும் சொல்லுவங்கள், சமஸ்கிருதத் தளைகளிலின்றும் விடுபட்ட நிலையில் விளங்கி நிற்கும் பண்டைத் தமிழரின் மன வளம், வாழ்க்கை வளம், வழிபாட்டு வளம் ஆகியன வற்றை மட்டும் ஈண்டு, சுட்டிக்காட்டிச் சொல்ல விரும்புகின்றேன்.

"பண்டைத் தமிழ நிடையே வழக்கிலிருந்த சொற்கள் அளிக்கும் சான்றுகளிலிருந்து, கீழ்க்காணும் வரலாற்றுண்மைகளை நாம் அறிகிறோம். காவல்மிக்க அரச இல்லங்களாகிய "அரண்"களில் வாழ்ந்து, சிறு சிறு மாவட்டங்களை உள்ளடக்கிய "நாடு"களில் கோலோச்சி, "கோ" எனவும், "கோன்" எனவும் பெயர்பூண்ட அரசர்கள் அவர்களிடையே இருந்தனர். "விழா"க் காலங்களில் "இசை" இசைக்கும் "பாணர்"* அவர்களிடையே இருந்தனர்; "பனை" யோலைமீது "எழுத்தாணி"யில் எழுதிய "அ" கரம் முதல் "ன" கரம் ஈறுகக்கொண்டு முப்பது "எழுத்து" உருவங்களை அவர்கள் அறிந்திருந்தார்கள். பனையோலையால் ஆன அவ்வேடுகள் பலவற்றைக் கொண்ட கட்டிற்கு அவர்கள் "நூல்," எனும் பெயர் சூட்டியிருந்தனர். கடவுள் உண்மையை ஏற்று அதற்குக் "கோ" எனும் பெயரிட்டு வழிபட்டு வந்தனர். அவ்விறைவனுக்குக் "கோயில்" கட்டிச் சிறப்பித்தார்கள். "அறநூல்" "ஒப்புரவு" என்பனவும் அழைக்கப்பெறும் உலகியல் நெறிகளையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். "மண" முறை அவர்களிடையே இடம்பெற்றிருந்தது. தகரம், ஈயம், தூத்தநாகம் இம்மூன்றும் நீங்கிய உலோகப் பொருள்களை அவர்கள் அறிந்திருந்தார்கள். கோள்களில், பழங்கால உலக மக்கள் அறிந்திருந்த, புதனும், சனியும் நீங்கிய கோள்கள் அனைத்தையும் அவர்களும் அறிந்திருந்தார்கள்; அருநோய் போக்கும் "மருந்து" அவர்களுக்குத் தெரியும்; "சிற்றூரும்" "பெருநகரும்" அங்கு இருந்தன; மீன் பிடிக்க உதவும் "திமில்" "கட்டுமரங்"களும், பெருங்கடல் ஓடவல்ல "கலங்களும்" "நாவாய்"களும் அவர்களின் உடமையாய் இருந்தன. தீவு, கண்டங்களை உணர்த்தும் சொற்கள் மட்டும் அவர்கள் மொழியில் ஆட்சியில் இல்லை.

"உழவு"த் தொழிலை நன்கு உணர்ந்திருந்தார்கள். "போர்" என்றதும் பூரித்தன அவர் தோள்கள். "வில்", "கணை", "வேல்" "வாள்" முதலாம் படைக் கலங்களில் பயிற்சி மிகுந்திருந்தனர். நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாத துணைத் தொழில்களாய், "நூல் நூற்றல்", "நெய்தல்", "வண்ணம் ஊட்டல்" ஆகிய தொழில்களை அவர்கள் அறிந்திருந்தார்கள்."*

தமிழ் மொழியிலிருந்து சமஸ்கிருதச் சொற்களை அறவே நீக்கிவிட்டு எஞ்சி நிற்கும் சொற்களை வைத்து டாக்டர் கால்டுவெல் தீட்டியிருக்கும் பழந்தமிழர் 'உயிரோவியம்' இது!

இந்தி இலக்கியம் 12-ஆம் நூற்றாண்டிற்கு முன் தோன்றவில்லை.

வங்கமொழி இலக்கியம் 11-ஆம் நூற்றாண்டில் துவங்கியது.

மராத்தியிலும், பஞ்சாபியிலும் இலக்கியங்கள் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றின.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் — ஆகிய மொழிகளில் 8-ஆம் நூற்றாண்டிற்குப்

தொடர்ச்சி 27-ம் பக்கம்



இப்படி உருக்கமாகவும், அடிக்கடியும் பாடியதில்லை என்கிறார், அந்தப் பேராசிரியர்!

அத்தகையோர் நாகரிகம் எப்படி இருந்தது?

"தமிழ் மொழியிலிருந்து சமஸ்கிருதச் சொற்களை அறவே நீக்கிவிட்டு நோக்கினால், எஞ்சி நிற்கும் பழம் பெரும் சிறப்பு வாய்ந்த திராவிடச் சொற்கள், ஆரியக் கலப்பற்ற திராவிட நாகரிக வாழ்க்கை முறைகளை விளங்க உணர்த்தவல்ல உயிர் ஓவியம் ஒன்றை வனப்புற வரைந்து காட்டும்."

---

* M. Ruthnaswamy "India from the Dawn"

---

* டாக்டர் கால்டுவெல், "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்", (தமிழில் புலவர் கா. கோவிந்தன்) பக்: 146—147

தாங்குகநீ!

கவிஞர் ஆனந்தம்



ஆய்ந்தெடுத்த வெற்றிலையின் நுனியுங் காம்பும்
அகற்றிவிட்டுத் தொடை வேட்டி மேல்து டைத்துக்
காய்ந்திருக்கும் சுண்ணம்பை ஈரமாக்கிக்
கவனமுடன் வெற்றிலையின் புறத்தில் நீவிச்
சாய்ந்தறியாக் கமுகுமரக் காயின் தூளைச்
சரியான அளவெடுத்து வாயி லிட்டால்
தோய்ந்து வரும் பவளநிறம் இதழோ டன்றித்
தூய வெள்ளைப் பற்களிலும் படர்ந்த தண்ணே!

வெற்றிலையை மெல்வது போல் நிதானத் தோடு
மிகப் பெரிய பிரச்சினைகள் மென்று தின்று
நற்றிறத்தால் தீர்வு கண்ட நினது பாணி
நாட்டோரால் புகழ்ந்துரைக்கப் பட்ட தன்றே?
சொற்றிறத்தால் மாப் பெரிய விந்தை கூட்டிச்
சொற்கோட்டை கற்கோட்டை எனச்சா தித்தாய்!
சுற்றிவரும் பகைமையினை உமிழ்நீர் போலச்
சுலபமாகத் துப்பிவிட்டாய்; ஐயோ பாவம்!

தக்காரும் தகவிலரும் அவர வர்கள்
தங்கவிட்ட எச்சத்தாற் காண்போம் என்பர்.
அக்காலம் கதிரவன்போல் நீம றைந்தாய்;
அந்தகாரம் சூழ்ந்துவரத் திகைப்பில் நின்றோம்!
முக்காலம் உணர்ந்தவன் நீ– முறையோ டன்று
மொய்ம்புடனே வழித்தோன்றல் படைத்துச் சென்றாய்!
இக்காலச் சிலந்திவலை சிக்கிடாமல்
ஏறிவரும் வண்ணத்துப் பூச்சி போன்றார்!

நீயுறங்கச் சென்றதனால் நினது தம்பி
நேர்மையினுல் தன்னுறக்கம் தான்ம றந்தார்!
பேயுறங்கும் வேளையிலும் இராம னுக்குப்
பின்சென்ற இலக்குவனுய் விழிப்போ டுள்ளார்!
"போயுறங்கு மகனே!" என் றுரைக்குந் தாயும்
போய்விட்ட தால், அந்தோ, யாரு ரைப்பார்?
ஆயிரந்தான் சொன்னலும், எங்கள் பேச்சை
அவரெங்கே கேட்கின்றார்; ஐய்வு கொள்ள!

இரவுமுற்றும் உன்னுடனே அளவ ளாவி
எழுங்கதிரை வணங்கியபின் தொடங்கு வாரோ?
இரவலர்கள், நோயாளர், கைம்பெண், பாலர்
யாருமற்றோர், விழியிழந்தோர், செவிடர், ஊமர்,
உறவுசொல்ல ஒருவரின்றி வாடும் பேதை
உருப்படியாய் உயிர்வாழ ஒன்றி ரண்டா—
துறவியரும் பாராட்ட நிறையத் திட்டம்
தொய்வின்றித் தருகின்றார் நாள்தோ றுந்தாம்!

உனக்கிருந்த பெருவாய்ப்பொன் றிவருக் கில்லே!
உன்கண்ணின் ஒரு பார்வை ஆணை யாக்கித்
தனக்குற்ற பேறென்று தம்பி மார்கள்
தாந்தாமுன் ஓடிடுவர் பணிமு டிக்க!
மனக்கவலை அளிப்பவரே மிகுந்து போக
மாற்றுகின்ற ஆற்றலுள்ளார் குறைவே யாக-
எனக்கென்ன என்றிருக்க மாட்டார் அன்றே?
ஏங்குகின்றார்; தாங்குகநீ இதயத் தாலே!

தலைவன் திசை செல்வோம்!

மட்டிலா மடமைச்சேற்றில்
மாற்றூர்க்கு அடிமைத் தொண்டில்
பட்டழி வெய்தி நின்ற
பைந்தமிழ்ச் சமுதாயத்தைத்
தட்டியெ மூப்பிவிட்ட
தலைவனும் அறிஞர் அண்ணு!
'எட்டி நில் பகையே!' என்ற
இனக்காவ லரும் அண்ணு!

ஏட்டினில் சிறையிருந்த
இலக்கியத் தமிழை; இன்பம்
கூட்டிடும் எதுகை மோனை
கொஞ்சிடும் தமிழை அண்ணு
பாட்டியல் கற்றிடாத
பாமரர் நாவிலெல்லாம்
தாட்டினில் ஒலிக்கச் செய்தார்
நற்றமிழ் செழிக்கச் செய்தார்!

வெள்ளம்போல் தமிழர் இங்கே
விழிப்பெய்தச் செய்து எல்லோர்
உள்ளமும் கவர்ந்த அண்ணன்
உள்ளத்தை மட்டும் இங்கோர்
செல்வனி டத்தில் தந்து
சென்றனன்! கலைஞராம் அத்
தெள்ளுதமிழ்த் தலைவன்
திசைவழிச் செல்வோம் நாமே!

—கவிஞர் தனசேகரன்

முடிவில்லா வான் வெளியே!

தென்புலத்துக் கதிரவனே! தமிழர் நாட்டின்
தலைக்கின்ற உயிர்மூச்சே! தென்றல் மேவும்
மண்புகழும் பொதிகைமலைப் புகழே! தேனே!
மடமைக்குத் தியிட்ட அறிவுச் சுடரே!
தன்னுடலே தன்பொருளே பண்பு தன்னைத்
தாய்நாட்டுக் கீந்திட்ட ஒளிச் சுடரே!
தென்னாட்டின் முடிசூடா மன்னர் மன்னு
தேனருவித் திருவருவே! மழையே வாழ்க!

சித்திரையின் முழுநிலவே! செங்கு ரும்பில்
சிரிக்கின்ற வெள்ளைப்பூ உள்ளத் தாரே!
இத்தரையில் வந்துதித்த இளம்பி றையே!
இனியதமிழ் முழங்கிட்ட இதயப் பூவே!
அத்திப்பூ பூத்ததைப்போல் தமிழர் நாட்டில்
அரிதாகப் பூத்திட்ட குறிஞ்சிப் பூவே!
முத்தொளியே! முடிவில்லா வான் வெளியே!
மோனத்தில் வளர்கின்ற தலைவா வாழ்க!

— நபி பியாரா

அண்ணு..... அண்ணு!

அண்ணுநின் விரலசைந்தால் அசையும் நாடு
அறிஞர்க்குத் திலகம் நீ! நாட்டு மக்கள்
எண்ணத்தில் தெய்வம் நீ! நினது பேச்சு
இனிக்குநறுஞ் செந்தமிழ்த் தேன்! இதயம் மீட்டும்
பண்ணுக்கு நல்லிசை நீ! நாளும் நாளும்
பாடுகின்ற கவிதைக்குக் கருப்பொ ருள்நீ!
எண்ணுகின்றேரும் நின்பெருமை இவ்வா றுகி
ஏங்குகின்றேரும் மறுகணமே துயரில் மூழ்கி!

—தங்கவயல் கலியரசன்

ஒற்றர்கள் ஜாக்கிரதை!

'சி.ஐ.ஏ.' – என்பது குறித்து கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது.

அது அமெரிக்காவின் உளவறியும் ஸ்தாபனம்.

எப். பி. ஐ. (F. B. I.) என்பது அமெரிக்காவில் உள்நாட்டில் நடைபெறும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சி. ஐ. டி. அமைப்பாகும். Federal Bureau of Investigation-என்பது அதன் முழுப்பெயர்.

சி. ஐ. ஏ. (Gentral Intelligence Agency) என்பது அமெரிக்காவிற்காக வெளிநாட்டில் உளவறியும் அமைப்பாகும்.

சீலிநாட்டிலே அலெண்டே படுகொலை, மற்றும் வியட்நாம் நிகழ்ச்சிகள்-போன்றவை சி.ஐ.ஏ. வேலை என்று கூறப்படுவதுண்டு.

சி.ஐ.ஏ. இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் – என்றுகூட இந்தியாவில் இருக்கிற 'முற்போக்காளர்கள்' அவ்வப்போது கோரிக்கை எழுப்பி வருவதும் தெரிந்ததே.

சேர்வியத் நாட்டில் ஒரு உளவறியும் அமைப்பு உண்டு. அதன் பெயர் கே.ஜி.பி. (K. G. B.) அது உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் சோவியத் அரசிற்காக உளவறிகிறது.

சோவியத் நாட்டில் பிறப்பு முதல் இறப்புவரை ஒவ்வொரு குடிமகனும் அரசினாலும், கே.ஜி.பி.யாலும் கண்காணிக்கப்படுகிறுன்.

சோவியத் நாட்டு மக்கள் அரசாங்கக் குடியிருப்புகளில் வாழ்கிறூர்கள்.

ஒவ்வொரு குடியிருப்பிலும் (அடுக்குமாடிக் கட்டிடங்கள்) ஒரு இயக்குநர் இருப்பார். அவர்தான் அந்தக் குடியிருப்பிற்கான வாடகை வசூலிப்பவர்: ஒற்றர்.

குடியிருப்பவர்களைப்பற்றிய ஒவ்வொரு விபரத்தையும் அவர் போலீசிற்கும் கே.ஜி.பி.க்கும் தெரிவித்து விடுவார்.

உதாரணமாக பிரஜை ஒருவர் இரவு இரண்டு மணிக்குமேல் வீடு திரும்பினுல் அந்த இயக்குநர் அநேகமாக அதைப் பொருட்படுத்த மாட்டார்.

ஆனல், அந்த நபர் மாதத்தில் இரண்டு மூன்று நாட்கள் அப்படி வந்தால் இயக்குநர் உடனே சம்மந்தப்பட்டவர்களுக்கு அந்த 'சந்தேகத்திற்குரிய' நடவடிக்கையைத் தெரிவித்து விடுவார்.

ஒவ்வொரு இயக்குநரும் ஒரு ரிஜிஸ்தர் புத்தகத்தை எழுதி வருகிறூர்கள். ஒவ்வொரு குடிமகனுடைய ஜாதகமும் அதில் அடங்கியிருக்கும்.

யாராவது ஒரு 'விருந்தாளி' 72—மணி நேரத்திற்கு மேல் யாருடைய இல்லத்திலாவது தங்கியிருந்தால், அந்த இயக்குநர் அந்த விபரத்தை போலீசிற்கும், கே. ஜி. பி.க்கும் தெரிவித்துவிடுவார்.

பிள்ளைப்பேற்று விடுதியிலிருந்து ஒரு தாய், குழந்தையைப் பெற்றுக்கொண்டு குடியிருப்பிற்குத் திரும்பினுல் அந்த விபரம் ரிஜிஸ்தரில் ஏறிவிடும். அந்தக் குழந்தைக்காக ஒரு 'பைல்' (File) திறக்கப்பட்டு, அவ்வப்போது விபரங்கள் எழுதப்பட்டுவரும்.

—இப்படித்தான் சோவியத் பிரஜைகள் – குழந்தைகள் உட்பட – யார் எங்கு என்ன செய்துகொண்டிருக்கிறூர்கள் என்பது கே. ஜி. பி. மூலமாக சோவியத் அரசிற்குத் தெரிந்துவிடும்.

இப்படிப் பிரஜைகளைப் பற்றிய ஆராய்ச்சி தொட்டில் முதல் சுடுகாடுவரை தொடர்கிறது.

16—வயதில் ஒவ்வொரு சோவியத் பிரஜைக்கும் உள்நாட்டில் பயணம் செய்ய ஒரு 'பாஸ்போர்ட்' வழங்கப்படுகிறது.

அது இல்லாமல் எந்த சோவியத் குடிமகனும் தனது நாட்டிற்குள் பிரயாணம் செய்ய முடியாது. 72—மணி நேரத்திற்கு அதிகமாக அவன் எங்கு தங்க நேர்ந்தாலும் காவல் துறையில் பதிவு செய்ய வேண்டும்.

அந்த 'பாஸ்போர்ட்'டைப் பறிமுதல் செய்து கே.ஜி.பி. ஒரு நபரை ஒரு வட்டாரத்திலிருந்து நகராமலிருக்கச் செய்யமுடியும்.

1971-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி பிரிட்டிஷ் அரசு 105 சோவியத் உளவாளிகளை நாடு கடத்தியது.

கே.ஜி.பி. விஷயத்தில் இவ்வளவு சுறுமையாக நடந்து கொண்டு, இத்தனேபேரை நாடு கடத்தியது இதுதான் முதல் தடவை!

—இப்படித்தான் சி.ஐ.ஏ. மூலம் அமெரிக்காவும், கே.ஜி.பி. மூலம் சோவியத் நாடும் வெளிநாடுகளில் தங்கள் நாடுகளுக்காக உளவு வேலைகள் செய்கின்றன!

பிறப்பு முதல் இறப்பு வரை சோவியத் நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் அரசினலும் கே.ஜி.பி. யாலும் கண்காணிக்கப்படுகிறுன்!

கிளிக்குப் பச்சை பூசுவதா?

.....நானே, பலதடவைகளில, பேசியானபிறகும், எழுதியான பிறகும், இன்னின்ன சொற்களுக்கு இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே — தவறிவிட்டோமே என்று ஏண்ணி வருத்தமுறுவதுண்டு. எனினும், தம்பி, எங்கள்மூலம் நீ இவ்வளவுதான் பெறலாம் — அதிகம் எதிர்பார்க்காதே — ஆனல் உன்னுலே முடியும் இந்தக் குறைகளையும் கூளைய —நாடு உன்னிடம் நிச்சயமாக அதிகம் எதிர்பார்க்கிறது.

ஆரிய மதக் கற்பனைகளுக்கு நிரம்ப இடமளித்துவிட்டதால், தமிழ் மொழிக்குரிய இயல்பு எத்துணை கெட்டொழிந்தது என்பதனை அறிய, வேறெந்தத் துறையினையும் விட 'உவமை' கூறுகிறேமே, அந்தத் துறையினைப் பார்த்தால் மிக மிக விளக்கமாகத் தெரிந்துவிடும்.

சனியனே! உயிரை வாங்காதே.
எமன் போல வந்து தொலைத்தான்.
பெரிய **அரிச்சந்திரன்**தான், வாயை மூடுடா
துர்வாசர் போலச் சிறுகிறுன்.
போதும், போய்ப் படுத்துத் தூங்கடா,
அனுமாரே!
துரோபதை போலக் கதறுகிறுள்.
கலியுக **பீமசேனன்** என்று அவனுக்குப் பெயர்.
ஆசாமி, **அர்ஜுனன்**தான்!
அவள், **ரம்பையே**தான்.
அமிர்தம் போல இனிப்பான பானம்.
குபேரபட்டினம் போலக் காட்சி அளித்தது.

நிரம்பப் பேசுகிறேம்; இது போல மேடைகளிலும், வீடுகளிலும், பழமை விரும்பிகள் மட்டுமல்ல, நாம்கூட.

கொல்லிமலேப் பாவை! என்று கூற நமக்கும் தோன்றுவதில்லே; கூறிடின், புரிந்துகொள்வோரும் புலவர் அவையிலே மட்டுமே கிடைப்பர்; மக்கள் மன்றம் மறந்தேவிட்டது.

கொல்லிமலேயில் ஓர் சித்திரப் பாவை செதுக்கப்பட்டிருந்ததாம்.

அத்துணை எழிலாம், அப்பாவைக்கு.

தொலேவிலிருந்து காண்போர், அழகால் ஈர்க்கப்பட்டு, அருகே செல்வராம், காண்பராம், உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு நிற்பராம், அந்த அழகு அவர்தம் உயிர் குடித்திடும்வரையில் நிற்பராம்.

மயக்கி மாய்த்திடும் பொலிவு, கொல்லி மலேப் பாவைக்கு! ஆனல், நாம் இதனே 'உவமைக்குக் கையாண்டதுண்டோ? இல்லே; ஏன்? நமது எண்ணத்திலேயே பிறமொழிக் கருத்துக் கலக்கப்பட்டு விட்டதால், அழகு பற்றியோ, அதனுல் வந்துறும் அவதிபற்றியோ எடுத்துரைக்க நீனைக்கும் போதெல்லாம் மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, இவர்களே நமது நாவில் நின்றுவிடுகிறுர்கள். தமிழ் மொழியில் காணக்கிடைக்கும் கொல்லிமலேப் பாவையை மறந்தே விட்டோம். இயற்கைப் புருவத்தை எடுத்தான பிறகு, கூட்டுப் புருவம், மிரட்டும் புருவம் எல்லாம் அமைத்துக்கொள்கிறேம்.

எனவேதான், தம்பி! தமிழ் மொழியில் காணக் கிடைக்கும், 'ஓசை நயம்' போன்ற எந்த எழிலேயும் இழந்துவிடக்கூடாது என்று கூறி வருகிறேம்; அதேபோது, அந்த எழில் வேண்டும் என்பதற்காகவே, 'இட்டுக் கட்டியும்' 'இழுத்துக் குழைத்தும்' தரக்குறைவு எற்பட்டு விடும் படியும் செய்துவிடக்கூடாது என்கிறேம். தமிழ் எழிலும் பயனும் அளித்திடும் இன்மொழியாகத் திகழ்வதன் பொருட்டு முந்தை நாளில் புலவர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள் பலப்பல.

செதுமொழி சித்த செவி செறுவாக
முதுமொழி நீராப் புலன் நாஉழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ்
புனலூர

செவியில் பொல்லாத சொற்களே புகுவதில்லே. செவிகளின் வழி பாய்வது சான்றோர் செய்யுட்களாம்!

நாவினேயே ஏராகக் கொண்டு புலவர் உழுதுண்டனர்.

அவர்தம் மொழிகள் பழங்கதைகளாக இல்லே; புதுமொழிகள் தந்தனர் — அவைதமை மக்கள் கொள்ளே கொண்டு உண்டனர்.

இத்துணேச் சிறப்புடன் புலவரும் அவர்தம் உழவின் பலனே உண்டு களித்த மக்களும் வாழ்ந்திருந்ததனுல் நாம் இன்று ஓர் உயர்தனிச் செம்மொழிக்கு உரிமையாளராஞேம்! உலகிலே எத்துணே தேயங்கள், 'இத்தகு மொழிபெற்றேமில்லேயே' என்று வாடிக் கிடந்திடுவதனேயும், பிற மொழிகளின் துணேயினேத் தேடி அலேவதனேயும் காண்கிறேம்.

கருத்தினே விளக்கிட எழுத்து ஒன்று போதும், ஈரெழுத்து மட்டும் போதும் பொருளளிக்க, சிறு சிறு எழுத்துமாற்றங்கள் மூலமே, பொருள் மாற்றம்பெரிதும் காட்டிட இயலும்! அதனேயும் அழகுபட, ஓசை நயத்துடன் எடுத்துக் கூற முடியும் என்ற இத்துணேச் சிறப்புடன் தமிழ்மொழி இருந்திடக் காண்கிறேம், எனினும் அதற்கென்று ஓர் தனி இடம், உயிரிய இடம், உரிமையான இடம்-பெற்றளிக்கும் திறனுமற்றுக் கிடக்கிறேம்.

...''கானவன் யானேமீது வீசிய கவண்கல் வேங்கையின் பூவைச் சிதறி ஆசினி மென்பழத்தை உதிர்த்து, தேனின் இருலேத் துளேப்படுத்தி, மாவின் குலேயை உழக்கி, வாழையின் மடலேக் கிழித்து, பலாவின் பழத்துச் சென்று தங்கும்!''

குறிஞ்சிக் காட்சியினேக் கூறுகிறுர் புலவர். இவ்வளவுதானே, உமது புலவர் பெருமகனுரால் கூறமுடிகிறது; இதோ கேளும் எமது புராணீகர் கூறுவதை: 'எம்பெருமான் ஸ்ரீராமச்சந்திரருடைய கோதண்டத்திலிருந்து கிளம்பிய 'அஸ்திர'மானது, புயற்காற்றெனக் கிளம்பிச் சென்று, இராவணன் மார்பைத் துளேத்து, உயிரைக் குடித்து, அவன் உள்ளத்தில் எங்கெங்குச் சீதாதேவி மீது காமக் கருத்து இருக்கிறது என்று தேடிப்பார்ப்பதுபோல உள்ளத்தைச் சல்லடையாகத் துளேத்து, பிறகு காரியம் வெற்றிகரமாக முடித்தான களிப்புடன், கடலிற் சென்று குளித்துக் கறை போக்கிக்கொண்டு, மீண்டும் பறந்து வந்து காகுத்தன் அம்பருத் தூணியில் சேர்ந்தது'-என்கிறுர் நம்பெருமாள் ஐயங்கார்!

மொழி, வரி வடிவத்தால் மட்டுமல்ல, மொழிமூலம், தரப்படும் கருத்துக்களின் வகைமூலம், ஒன்றுக்கொன்று எவ்வளவு மாறுபட்டன என்பது, குறிஞ்சியைக் காட்டிய நந்தமிழ்ப் புலவர் தரும் பாவுடன், இராமனின் வீரத்தை விளக்கிடப் புராணீகன் தரும் ஆரியத்தினே ஒப்பிட்டுப் பார்த்தாலே விளங்கிவிடும்.

புராணீகனின் கருத்தினே மறுத்திடாமல், ஆய்ந்து பாராமல், ஏற்றுக்கொள்வதாயினும், இராமனுடைய 'தெய்வீகம்' வேண்டுமானுல் விளங்குமே தவிர, பாநயமோ, இயற்கை உண்மையின் அழகோ அதிலே துளியும் கிடைக்காது. இராமனுடைய 'அஸ்திரம்' மட்டுமே புராணீகன் சொன்னபடி செய்யமுடியும்! குறிஞ்சி குறித்துப் பாடிய புலவன் காட்டும் கவண்கல் இருக்கிறதே தம்பி, அது நீயும் நானும், எடுத்து வீசினுலும் செய்யுளிலே காட்டப்படும் செயலேத்தான் முறைப்படி செய்யும்; அவ்வளவு இயற்கையோடு ஒட்டியதாகக் கருத்தினேத் தந்துள்ளார் புலவர்! பெரிதும், சுண்ட காட்சிகளேக் காண்பதால் ஏற்படும் கருத்துடன் இணேத்துத் தருவதற்கே பண்டைத் தமிழ்ப் புலவர்கள் விரும்பினர்.

காடுகளேயும் காளுறுகளேயும், ஓடைகளேயும் அவைதமில் துள்ளும் மீன்களேயும், குவளேயையும் தாழையையும், யானேயையும் பெடையையும், செங்கால் நாரையையும் கருங்குயிலேயும், கடுவனேயும் மந்தியையும், உதிர்ந்த பூக்களேயும் உலர்ந்த தருக்களேயும், பாய்ந்தோடும் அருவிகளேயும், பட்டுப்போனமொட்டுக்களேயும் காணும் போதெல்லாம் அவர்கட்குக் கருத்து ஊற்றெடுத்திருக்கிறது, அத்துணேக் கருத்தும், உண்மையோடு ஒட்டியவையாக, கேட்போர் மறுக்கொணுவகையினதாக, கேட்டு இன்புறத்தக்கதாக அமைகின்றன. இந்தச் சிறப்பு புலவர் தேடிந்தந்தது; புராணீகன் தேடித்தருவது அஞ்தன்று.

கானவன் கவண் வீசுகிறுன் தம்பி! துவக்கத்திலேயே, புலவர் கானவனேக் கவண் வீசச் சொல்கிறுர், ஏனெனில் வீசவேண்டிய முறைப்படி

அதற்கேற்ற பயிற்சிபெற்ற நிலேயிலுள்ளவன் வீசினுல்லவா, கவண்கல் செய்ய வேண்டியதைச் செம்மையுறச் செய்யும்.

தாக்க வந்தவனே, ஆட்டுக் குட்டியைத் தூக்கி எறிவதுபோல எறிந்தான் — என்ற கருத்தை அளிக்க முற்பட்டால் மல்லன் என்ற சொல்லேக் கோத்தாக வேண்டுமல்லவா? ஏனெனில் மல்லன் செய்யக்கூடிய காரியமல்லவா, அது; அதுபோலத்தான், யானேமீது வீசவேண்டும் கல்லினே — எனவே புலவர், கானவனேத்தான் ட்காடுகிறுர்.

கானவன், கவண்கல் வீசுகிறுன் யானேமீது!

புராணீகனுடைய கல் அல்ல அது; எனவே யானே சாகவில்லே, விரண்டோடிவிட்டது; வீசப்பட்ட கல்லோ வேங்கை மரத்தின்மீது உராய்ந்து செல்கிறது. வேகமாகச், செல்வதால், பூத்துக் கிடக்கும் பூ சிதறுகிறது, கல் சென்று கொண்டிருக்கிறது, ஆசினிப் பழத்தை உதிர்க்கிறது, தேன் அடை துளேக்கப்படுகிறது, மாவின் குலே தாக்கப்படுகிறது, வாழை மடலேக் கிழிக்கிறது, இறுதியாகப் பலாப் பழத்துச் சென்று தங்கிவிடுகிறது.

கல் செல்லும் வழியெலாம் ஒருமுறை கருத்தைச் செலுத்திப் பார் தம்பி, சுவையுள்ள இடம் சேருவாய். கல்லே, சுவைமீகும் பலாப் பழத்தை அல்லவா சென்று சேருகிறது?

வீசப்பட்ட கல்லின் வேகம், படிப்படியாகக் குறையும். வேகம் குறையக் குறைய, அதன் செயல் படும் வலிவும் குறையும் என்ற உண்மையை, யானேமீது வீசப்பட்ட கல், வேங்கை மரத்துப் பூக்களேச் சிதறச் செய்து, ஆசினிப் பழத்தை உதிரச் செய்து, தேன் மடையைத் துளேத்து, வாழை மடலேக் கிழித்து, இறுதியில் பலாவிடம் அடைக்கலம் புகுந்துவிடுவதாகக் கூறி விளக்கும் அழகினேப் பார். யானேமீதே கல் பட்டிருந்தால், கல் பிறகு யானே மீது மோதுண்ட காரணத்தால், மேலால் செல்லாது, கீழே தடும்' என விழும்; பிறகு வேங்கையும் ஆசினியும், மாவும் பிறவும், புலவர்தம் பாவினிலே வரத் தேவை ஏற்பட்டிராது.

வேங்கையின் மலர், ஆசினிப் பழம் இவற்றினேச் சிதறவும் விழவும் செய்தாரே தவிர, இதற்குள் கவன் வேகம் குறைந்துபோயிருக்கும் என்ற இயற்கை உண்மையை உணர்ந்தவராத வால் மாங்குலேயின் மீது கல் பட்டபோது, உலுக்கி விடும் அளவுக்கும், பிறகு வேகத்தால் கிடைக்கும் வலிவு கல்லுக்குக் குறைந்துவிடுவதால், வாழை மடலேக் கிழித்திட மட்டுமே இயலுமாகையால், அதனே மட்டும் கூறி, வேங்கை உயரத்துக்கு வேகமாக மேலெழுப்பிய கவண்கல், பிறகு ஆசினி, மா, வாழை என்ற அளவுக்குக் கீழே இறங்கி, கடைசியில் பலாவில் சென்று தங்குகிறது — பழம் எனவே, கல் புக முடிந்தது. பலாப்பழம் எனவே அதற்குள்ளேயே ஒட்டிக் கொண்டுவிட்டது—என்றுர் தம்பி! இவ்வளவு இயற்கையோடினேந்ததாகக் கவிதை தருகிறுர்; செய்யுட் சுவையுடன் கூடவே செந்தமிழ் நாட்டு வளமும் தெரிந்திடச்செய்கிறுர்.

யானே உலவும் காடுகள்; அங்குத் துணிவுடன் உலவும் கானவர்; அவர்கள் கவண் வீசும் திறம்; ஓங்கி வளர்ந்த வேங்கை மரம்; கனி தரும் மாவும் வாழையும் பலாவும், கானகத்தில்! இவ்வளவு வளம் தமிழகத்தில்; குறிஞ்சி மட்டு மல்ல, எந்த நிலம்பற்றிப் பாடினுலும், இதே முறை — உண்மையை அழகு பட உரைத்திடுவது; இல்லே, தம்பி, உண்மையை உரைக்கிறுர், அதிலே அழகு தவழ்ந்து வருகிறது!

இந்தத் 'தமிழ்' இனிமை பெற, 'இரவல்' எற்றுக்குப் பெறவேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு, வான்கோழிச் சிறகான தோகை தரவேண்டுமா! இனி அழகு பெற, அதற்குப் பச்சை வண்ணம் பூசவேண்டுமா?... எண்ணிப்பார், அதுபோதும்!!

அன்புள்ள,

அண்ணுதுரை

18-3-1956

PALLAVAN TRANSPORT CORPORATION LIMITED

(An Undertaking of the Government of Tamil Nadu)

MADRAS-600002.

BUY MONTHLY ECONOMY SEASON TICKETS

Usable on City and Suburban Routes from stage to stage,

Available at all Depots, Transport House,

Mandavalli, T. Nagar and Express Bus Stands,

and at Secretariat and Ezhilagam

Further particulars can be had on

Telephone: 24940: 29071 (Exten. No. 36) and 21835.

R. THILLAINAYAGAM

MANAGING DIRECTOR.

பேரறிஞர் அண்ணா வோடு சில நிமிஷங்கள்...

ஆ.கா.அ. அப்துல் சமது எம்.பி.

தொல்லின் திறத்தாலே, சொல்லரிய சிறப்பைப் பெற்றுச் சிறந்தவர், பேரறிஞர் அண்ணா.

பெற்ற ஆற்றலையெல்லாம் பெற்றெடுத்த நாட்டின் பெருஞ் சிறப்புக்கு ஒருசேர வழங்கிய வள்ளலாக அவர் விளங்கினர்.

அரசியலிலே கொள்கையின் வழியிலே ஒன்றுபட்டு, தோழமை உணர்விலே செவ்வடைக்கூடிய மரபைத்தான் பொதுவே கண்டிருக்கிறோம்.

அண்ணா அவர்கள், அழுக்காறு மிக்க அரசியல் துறையில் குடும்பப் பாசத்தின் அடிப்படையிலும், உடன் பிறந்தார் என்ற ஒட்டுறவின் கூட்டுறவிலும் செயல்படக் கூடிய ஒரு கொந்தத்தை ஏற்படுத்தியவரானார்.

''அண்ணதுரை'' என்பது அவர் பெயர். வாழ்வில் அவர் உயர்ந்த பிறகு, ''துரை அவர்களே!'' என்று குறிப்பிடப்பட்டிருக்குமானால் அது பொருத்தமாகத்தான் இருந்திருக்கும். ஆனால், ''அண்ணா அவர்களே!'' என்று அழைக்கப்படுவதில் ஒரு சிறந்த வழிமுறையாக ஆக்கப்பட்டதற்குக் காரணம், அவர் வினைத்துவிட்ட சகோதர உணர்வேயாகும்.

அரசியல் தலைவராக விளங்கிய பலர், தாம் ஏற்றி வைத்த கொடியைத் தூக்கிப் பிடித்து, அவர் கட்சியில் பின்னிப் பிணைந்தவர்களிடம் மாத்திரம் பேன்பு செலுத்துவதை இயல்பாகக் காண்கிறோம்.

ஆனால், அண்ணா அவர்கள் அரசியல் தலைவர் என்று அறியப்பட்டிருந்தாலும், இன்னும் சொல்லப்போனால் முழுக்க முழுக்கப் புதிய தோர் அரசியல் இயக்கத்தின் தோற்றரவாளராக இருந்து அதை அரசு பீடத்திலே அமர்த்தியவரானாலும், அவருடைய அன்பு எல்லாவித வரம்புகளையும் தாண்டி, வேறு பல அரசியல் இயக்கங்களிலே ஈடுபட்டிருந்தவர்களையெல்லாம் ஈர்க்கக் கூடிய சக்தி படைத்ததாக அமைந்திருந்தது.

என்னைப் பொறுத்தவரை, என்மீது அவர் செலுத்திய அன்பு, காட்டிய பரிவு, ஊட்டிய உற்சாகம் இவையெல்லாம் எதன் அடிப்படையில் என்று நான் எண்ணிப் பார்க்கும்போது, அவருடைய பெருந்தன்மையைத்தான் நான் நன்றியுடன் நினைவு கூர வேண்டியவனாக இருக்கிறேன்.

அவர் பேச்சைக் கேட்க வேண்டுமென்று ஆவலோடு கூட்டத்திலே சென்று அமர்ந்தால், என்னையும் மேடைக்கு அழைத்து அவர் அருகிலே உட்கார வைத்தபோதெல்லாம் நான் உள்ளம் சிலிர்த்திருக்கிறேன்.

கூட்டம் ஆரம்பித்து கொஞ்ச நேரம் ஆன பிறகு தான் அவர் கூட்டத்துக்கு வருவார். ஆனால், மேடை மீது வந்து அமர்ந்தவுடனே, தம்முடைய அகண்ட அந்தக் கண்களால் கூட்டத்தை ஒரு நோட்டமிடுவார். அங்கிருக்கும் அத்தனைபேரையும் ஒரு நொடியிலே அறிந்து கொள்வார். மேடையிலே பேசிக் கொண்டிருப்பவருடைய பேச்சை ஒரு பத்து நிமிடம் கூர்ந்து கேட்பார். அதை வைத்தே அதற்குமுன் அந்த மேடையிலே என்னென்ன நடந்தது, பேசப்பட்டது என்ற அத்தனையையும் புரிந்து கொண்டு அவர் பேசத் தொடங்கினால், கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே இருந்து கேட்டவர்கள் கூட வியந்துரைக்கும் வண்ணம் அவர் விமரிசனம் அமைந்திருக்கும்.

''அண்மைக் காலத்தில் வாழ்ந்த ''அறிஞர்கள்'' என்று ஒரு நீண்ட பட்டியல் தயாரிக்க முடியும். ஆனால், ''நுண்ணறிவாளர்கள்'' என்ற பட்டியல் தயாரிக்கப்படுமானால் ஒருசிலபேர்கள்தான் அதில் இடம் பெறும். அதன் தலைப்பிலே அண்ணாவின் பெயர்தான் அழகுறக் குறிக்கப் பெறும் என்பதில் ஐயமேயில்லை.

முப்பது ஆண்டு காலம் தமிழகத்தின் பட்டிதொட்டிகளிலெல்லாம் அவர் பேசினார். அத்தனையும் எதிர்நீச்சல். மக்கள் ஏற்றுக் கொண்டிருந்த கருத்துக்கு விளக்கவுரை தந்து கொண்டிருந்தவரல்ல அவர். மக்கள் எந்தக் கொள்கையை ஏற்க வேண்டுமோ அதை எடுத்துரைத்த பேராசிரியராக விளங்கினார்.

அண்ணாவின் அரசியல் வட்டத்திலேஇணைந்தமிகப்பெரும் பாலாரை நாம் ஆய்ந்து பார்த்தால், முதலில் அவர்கள் சொல்லால் கவரப்பட்டு, பிறகு கருத்தால் ஈர்க்கப்பட்டவர்களாக இருப்பதைப் பார்க்கலாம். அப்படி ஈர்க்கப்பட்டவர்கள் காலப் போக்கிலே அவருடைய அன்பால் கட்டுண்டவர்களாக மாறி, நீலித்ததையும் காண முடிகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தின பெரு விழாக்களில் கலந்து கொள்ளுமாறு அழைத்து எனக்கு முகந்தெரியாத பலர் வருவார்கள். எனக்கிருக்கும் வேறு நிகழ்ச்சிகளைச் சொல்லி தட்டிக் கழிக்க எண்ணும் நேரத்தில், ''அண்ணா அவர்கள் இந்த விழாவில் பேச ஒப்புதல் தந்திருக்கிறார்கள் அவர்கள் தான் உங்களையும் அழைக்கச் சொன்னார்கள்'' என்று சொல்லும்போது, நான் ஆச்சரியப் பட்டுப் போவேன்.

கோவை மாநகரில் இப் படித்தான் ஒரு நிகழ்ச்சி சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அந்த நிகழ்ச்சியில் என்னுடைய பேராசிரியர் அல்லாமா அப்துல் வஹ்ஹாப் புகாரி அவர்கள் தலைமை தாங்கினார்கள். நாங்கள் பயணங்கள் விடுதியில் தனித்தனி அறைகளில் தங்கியிருந்தோம். பேராசிரியர் அவர்கள், ''அண்ணாவைப் பார்க்கலாம், வா'' என்று என்னையும் அழைத்துச் சென்றார்கள். அண்ணா அவர்கள், பேராசிரியர் மீது பெருமதிப்பு வைத்திருந்தார்கள். பேராசிரியர் புகாரி ஸாஹிப் அவர்களைக் கண்டதும், அகமும் முகமும் மலர எழுந்து அவர்களை வரவேற்று என் பக்கம் திரும்பி, ''என்ன வேலை செய்தாய்? நானல்லவோ அவர்களைப் போய் பார்த்திருக்க வேண்டும்?'' என்று ஆங்கிலத்திலே சொல்லி, செல்லமாகக் கடிந்தார்கள். இதைக் கேட்ட புகாரி ஸாஹிப் அவர்கள், ''அது சரியல்ல. நான் தான் உங்களை வந்து காண வேண்டும் என்று வந்தேன். ஏனென்றால், இலட்சோப லட்சம் மக்கள் உங்களை மதிக்கிறார்கள். நான் உங்களுக்கு மதிப்பளித்தால் அந்த இலட்சோப லட்சம் மக்களுக்கும் மதிப்பளித்ததாகும்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

அண்ணா அவர்கள் என்னையும் கூட்டத்துக்கு அழைக்கச் சொன்னார்கள் என்று சொல்லப்படும்போதெல்லாம், பேராசிரியர் புகாரி ஸாஹிப் அவர்கள் கூறியதுபோன்று இலட்சோப லட்சம் மக்களால் பேச, கேட்க, விரும்பப்படும் ஒருவர், நானும் பேசவேண்டும் என்று சொல்லும் பெருந்தன்மையை நினைத்து உடனே ஒப்புக்கொள்வது என்னுடைய வழக்கமாக இருந்தது.

அண்ணா அவர்கள், ''பேச்சுக்கலையின் சாம்ராட்'' என்று சொல்ல வேண்டும். எங்கு வது கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, அவர் வந்து மேடையிலே அமர்ந்து விட்டாரென்றால், அதற்குப் பிறகு வேறு எவருடைய பேச்சும் அந்த மேடையிலே எடுபடாது.

விழுப்புரத்தில் ஒரு மீலாது விழா ஏற்பாடாகி இருந்தது. அண்ணா வருவதில் வழக்கத்துக்கு மேலான தாமதம் ஏற்பட்டது. எப் பொழுதும் அவர் வந்த பிறகு பேசுவதை விரும்பும் நான், வேறு பேச்சாளர் இல்லாததால் என் பேச்சை துவங்கி ஒரு அரைமணி நேரம் ஆன பிறகு அண்ணா அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அவர் மேடையிலே வந்து அமர்ந்ததும், சுற்று வட்டாரங்களிலே நின்று கொண்டிருந்தவர்களும் பரப்பரப்புடன் கூட்டத்துக்கு உள்ளே வந்து அமர முற்பட்டார்கள். கூட்டத்தில் அமைதி குலைந்தது. நானும், அதற்கு மேல் பேசுவது கூடாது, முடியாது என்பதை உணர்ந்து என் பேச்சை ஐந்து நிமிடங்களிலே தொகுத்துச் சொல்லி அமர்ந்துவிட்டேன்.

அடுத்து, அண்ணா அவர்கள் பேசுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். வழக்கத்துக்கு மாறுக, அண்ணா அவர்கள்கொஞ்சம் சுடுகடுத்த முகத்தோடு எழுந்து, மைக் முன்னால் வந்து, ''தோழர்களே!'' என்று அழைத்துப் பேச ஆரம்பித்தார்கள்.

''மற்ற இடங்களில் நடக்கும் பொதுக்கூட்டங்களுக்கும் இங்கே நடந்து கொண்டிருக்கும் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த தின விழாவுக்கும் வேறுபாடு உண்டு. இந்த விழாவிலே கூடியிருப்பவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய சில ஒழுக்க முறைகளும் உண்டு. நான் இத்தகைய விழாக்களிலே கலந்து கொள்வதற்குக் காரணம், நான் பேச, பலர் கேட்க வேண்டும் என்பதற்காக அல்ல. இஸ்லாமிய மார்க்கத்தை நன்குணர்ந்தவர்கள், நபிகள் நாயகம் அவர்களுடைய வாழ்வைக் கற்றறிந்தவர்கள் பலர் பேச, நான் கேட்க இத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்வதை ஒரு வாய்ப்பாகக் கருதுகின்றேன். நான் வரும்போது ஆரம்பத்திலிருந்தே என் தம்பி லமத் அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டே வந்தேன். அவர் சொல்லி வந்த கருத்துக்களை அமைதியாகக் கேட்டுப் பயன்பெற வேண்டிய நீங்கள், நான் வந்த பிறகு தேவையற்ற பரபரப்புகாட்டியதின் காரணமாக, அவர் பேச்சை இடையிலே நிறுத்த வேண்டிய தாயிற்று. இன்னும் ஒரு அரைமணி நேரமாவது அவர் பேசிய பிறகுதான் என்னுடைய பேச்சு இருக்கும்'' என்று சொல்லிவிட்டு, என்னை அழைத்து ''பேசு'' என்று ஏவினார்.

இதைக் கொஞ்சமும் எதிர்பாராத நான் வாயடைத்துப் போனேன். எனக்கு ஒன்றும் ஓடவில்லை. ''நான் பேசி முடித்து விட்டேன் அண்ணா'' என்று எவ்வளவோ சொன்னேன். ''இன்னும் ஒரு பத்து நிமிடமாவது நீ பேசினால் தான் நான் பேசுவேன்'' என்று சொல்லிவிட்டார். கூட்டத்திலோ அற்புதமான அமைதிஎழுந்துநின்றுஒருபத்து நிமிடம் பேசினேன். எனன பேசினேன்என்றுஎனக்கே தெரியாது. ஆனால், அந்தப்பேச்சை விளக்கிப் பேசுவது போல என்னுடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து அண்ணா அவர்கள் ஒரு மணி நேரம் பேசினார்கள் ''இவ்வளவு சிறந்த கருத்துக்களையா சொன்னேம்?'' என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

அண்ணா அவர்கள் காட்டிய இந்தப் பெருந்தன்மையை எண்ணிப்பார்க்கும் போதெல்லாம் என்னுடைய கண்களிலே நீர் பனிப் பதுண்டு.

இந்தக் கூட்டம் நடந்த மறுமாதமே காஞ்சிபுரத்தில் நடந்த மீலாது விழாவில் என்னைப் பேசச் செய்து ஊக்குவித்தார். அண்ணாவோடு மீலாது விழாக்களிலே கலந்து கொள்ளும் போதெல்லாம் நான்பேசமுவதற்குமுன்னர், ''இன்று என்ன பேச வேண்டும்?'' என்று அவர்களிடத்திலே கேட்பதுண்டு. ''இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நபிகள் நாயகம் அவர்களின் தோழர்களுக்கு செய்யப்பட்ட கொடுமைகளை எடுத்துக்கூறு. அவர்கள் கொள்கையிலேகொண்டிருந்த பிடிப்பை விளக்கிச் சொல். ஜாதி பேதமற்ற சமுதாயம் எப்படி உருவாக்கப்பட்டது என்பதை எடுத்துக் கூறு'' என்பதாகக் கோடிட்டுக் காட்டுவார்கள்.

நான் பேசும்போது லஹராபாக்கள் (பெருமானாரின் பிரிய தோழர்கள்) பட்ட துன்பங்களை விவரிக்கும்போது, அண்ணா அவர்களைக் கண்ணோட்டமிட்டுப் பார்த்தால், அவர்கள் கண்களில் நீர் படிந்திருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.

அதன்பிறகு அவர்கள் பேசுவதைக் கேட்டால், நம் முடைய உடம்பெல்லாம் புல்லரிக்கச் செய்வதாக அவருடைய உரை அமைந்திருக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுக்கூரத் தலைப்படும்போது, மீலாது மேடைகளிலே அவர்களைச் சந்தித்து, அவர்களோடு உரையாடிய, அவர்களுடைய உரையைக் கேட்ட அந்த நினைவுகள் தான் அலை அலையாக எழுந்து வரும் ஆயிரம் எண்ணங்களுக்கு முன்னே பளிச்சிட்டு நிற்கின்றன.

இன்று, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆற்றல் உருவாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்— முதல் முதலாக அண்ணா அவர்களை திருவாரூரிலே நடந்த மீலாது விழாவில் கலந்து கொள்ள வந்தபோது தான் சந்தித்தார்கள் என்ற வரலாற்று உண்மையை நினைக்கும்போது என்னுடைய எண்ணம் இனிக்கிறது.

1938-

நான் உதிர்த்த முத்துக்கள்!

கி.ஆ.பெ.விசுவநாதன்

ஆம். இன்றைக்கு 37 ஆண்டுகளுக்கு முன்பு பயங்கரமான ஆண்டு 1938.

சென்னை மாகாண தமிழர் இயக்கத்திற்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கும் நாவலர் ச. சோ. பாரதி அவர்கள் தலைவர். இவை இரண்டுக்கும் நான் பொதுச் செயலாளன்.

சுயமரியாதை இயக்கத்திற்கு பெரியார் தலைவர். நான் பொதுச் செயலாளன், ஆந்திர, கேரள, கன்னட, தமிழகம் ஆகிய நான்கு மாநிலங்கள் ஒன்று சேர்ந்த நீதிக்கட்சிக்கு பெரியார் தலைவர்.

நான் பொதுச்செயலாளன்; நான்கு மாநிலத்திற்கும் நான்கு துணைச்செயலாளர்கள். தமிழகத்தின் துணைச் செயலாளர் பதவிக்குப் பலர் போட்டியிட்டனர். கடைசியில் அப்பதவி அன்பர் சி. என். ஏ. அவர்களுக்கு கிடைத்தது.

மிகச்சிறிய வயது என்றாலும் என் பணிகளுக்கு பலவகைகளில் உதவி புரிந்து வந்தார்.

உடைந்த உண்டியல்

சென்னையில் நடக்கும் கூட்டங்களுக்குறைந்தது 20,000 மக்களும், கடற்கரை கூட்டங்களுக்கு 80,000க்கு மேற்பட்ட மக்களும் கூடுவது உண்டு.

ஒருநாள் திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடிய கூட்டத்தில் லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர்.

உணர்ச்சியுள்ள தொண்டர்கள் 50 பேர்கள் கூட்டத்தில் உண்டியல் குலுக்கி பொருள் திரட்டினர். கடைசியாக உண்டியல்களை எண்ணிப் பார்த்தபொழுது அக்காலத்து காலணா, அரையணாவாக 322 ரூபாய்கள் சேர்ந்திருந்தது.

அன்றைய கூட்டத்திற்கு, அறிவிப்பு, மேடை அமைப்பு, விளக்கு, ஒலிபெருக்கி ஆகியவைகளின் செலவு 360 ரூபாய்க்கு மேல் ஆயிற்று.

குறைவு ரூபாய்க்கு என்ன செய்வது என்று சுவலையோடு யோசித்துக் கொண்டிருந்தேன்

அப்போது டாக்டர் தருமாம்பாள் அம்மாள் வந்து ''ஒரு உண்டியலின் சீல்உடைந்திருந்தது; அதில் காசும் குறைந்திருந்தது'' என்று தெரிவித்தார்கள்.

உடனே விசாரணை தொடங்கியது.

என் தொண்டன்

அக்காலத்தில் மற்ற ஊர்களைவிட சென்னையில் உணர்ச்சியுள்ள தொண்டர்கள் அதிகமாக இருந்தனர். அவர்களில் என்மீது தணிப்பட்ட பற்றுகொண்ட தொண்டர்கள் சிலர். அவர்களில் ஒருவர் ''அண்ணா அவர்கள் உங்களை கவிழ்த்து உங்கள் பதவியைக் கைப்பற்ற முயற்சி செய்துவருகிறார். நான் விடப்போவதில்லை'' என்று என்னிடம் அடிக்கடி கூறிவந்தவர்.

அவரை தி.ஆ.பெ. வி.யின் கையாள்என்று பலரும் கூறக் கேட்டு இருக்கிறேன்.

விசாரணையின் கடைசியில் உடைந்த உண்டியலைக் கொண்டுவந்து கொடுத்தவர் அவர்தான் என்று தெரிந்தது. திரு. என்.வி. நடராசன் சாட்சியம் கூறுகையில், ''அவர் கொண்டுவந்த உண்டியல் உடைந்திருந்தது உண்மைதான். ஆனால் காசுகளை எடுத்திருப்பார் என்பதை நான் நம்பவில்லை'' என்றார்.

இறுதியில்நான்கூறியதீர்ப்பு ''அவர் இனி உண்டியல் குலுக்கக்கூடாது; எந்த உண்டியலையும் தொடக்கூடாது என்பதே!'' இந்தக் கடுமையான தீர்ப்பு அத் தொண்டரின் உள்ளத்தைப் புண்படுத்தியிருக்கலாம். போய்விட்டார்.

தொண்டர் கூட்டம்

மறுநாள் காலை கட்சித் தொண்டர்களைக் கூட்டினேன்; உண்மையாகவும் நேர்மையாகவும் நடக்கும்படியும், கட்சி தொண்டர்களுக்குள் பொறாமையும் பூசலும் கூடாது என்றும் கூறினேன்.

பெரியார் பெல்லாரி சிறையில் இருப்பதால் எல்லாப் பொறுப்புக்களையும் தொல்லைகளையும் நானே தாங்க வேண்டியதிருக்கிறது. என் வியாபாரத்தையும் குடும்பத்தையும் கவனிக்க முடியவில்லை. இந்த பதவி எனக்குப் பெருமைதான். பலரும் புகழ்கிறார்கள். சிலர் குறை கூறுகிறார்கள். இடையில் நான் கட்சிப் பணி செய்கின்ற தொல்லைகளைப் பார்த்தால் இப்பதவியும் வேண்டாம்; இந்த பழியும் வேண்டாம் எனத் தோன்றுகிறது—எனக் கூறி, இதை விளக்க நான் கூறிய கதை இது:—

ஒரு ஆற்றங்கரையில் கழுதைகள் மீது ஏற்றிவந்த துணிப்பொதிகளை இறக்கிக் கொண்டு வண்ணார்கள் கழுதைகளை அவிழ்த்து விட்டு, துணிகளை துவைக்கச் சென்றார்கள்.

அப்போது போர்வீரர்கள் சிலர் குதிரை மீது ஏறிவந்து அதே ஆற்றங்கரையில் இறங்கி, தாங்களும் உணவு உண்டு அக்குதிரைகளையும் தேய்த்துக் குளிப்பாட்டி, கொள்ளும் வேகவைத்து குதிரைகளுக்கு அள்ளி அள்ளி வழங்கினர். இதைக்கண்ட சில கழுதைகள் ஒன்று சேர்ந்து ''நாமும் இக் குதிரைகளைப் போலத்தானே இருக்கிறோம். இவைகளுக்கு குளியல், தேய்ப்பு, உணவு, அணிகலன்கள் எல்லாம் இவ் வீரர்கள் வழங்குகிறார்களே! நமக்கு இவற்றில் ஒன்றுமில்லாவிட்டாலும் நமது எஜமானர்கள் உணவாவது வழங்கக்கூடாதா? நாம் ஓடிப் போய்விடுவோமோ என்று ஒரு காலையும் கட்டி, மேய்ந்துவா என்று விரட்டி விடுகிறார்களே. இது நியாயமா? நாம் இனி நம் எஜமானர்களிடத்திலிருந்து இவையெல்லாம் நமக்கும் வேண்டும் என்று போராடவேண்டும்'' என்று முடிவு செய்தன.

சிறிது நேரத்திற்கெல்லாம் எதிரிகள் பத்து பேர் குதிரையில் ஏறிவந்தனர்.

வீரர்களும்குதிரை மீதுஏறிச் சென்றனர். இருதரப்பிலும் சண்டை, குத்து, வெட்டு நடந்தன. சில குதிரைகள் இறந்தன.

சில குதிரைகளின் கால்கள் முறிந்தன. இவற்றையெல்லாம் கண்டு பயந்த அக்கழுதைகளில் ஒன்று-நண்பர்களே! இனி நமக்கு இந்த கொள்ளும் வேண்டாம்; குத்தும் வெட்டும் வேண்டாம், எனக் கூறியது.

அந்த நிலையில்தான் நானும் இருக்கிறேன் எனக் கூறினேன். தொண்டர்களின் கூட்டம் மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் இனிது முடிந்தது.

மறுநாள்

''கி.ஆ.பெ.வி.யின் கையாள்'' என்று கூறப்பட்டு வந்த அத்தொண்டர் அண்ணாவிடம் சென்று ''நீங்கள் அவர் பதவிக்கு ஆசைப்படுவதைக் கூட்டிக் காட்டியே கி.ஆ.பெ.வி. இக் கழுதைக் கதையைக் கூறி இருக்கிறார் என்று நினைக்கிறேன்.....அவர் இவ்வாறு பேசலாமா?'' எனக் கூறினாராம்.

அதற்கு அண்ணா அவர்கள், ''இது என்னைப் பற்றியது அல்ல. உன்னைப் பற்றிக் கூறியது. கொள்ளும் வேண்டாம் குத்தும் வெட்டும் வேண்டாம் என்பதைக் கேட்ட பிறகு நீ உண்டியல் குலுக்கவும் வேண்டாம். பழியும் வேண்டாம் என்று போகவேண்டியதுதானே'' என்று கூறி அனுப்பினாராம்.

மூன்று சொட்டு

இச்செய்தியை அத்தொண்டரே பின்பு கூறினர்.

இதைக்கேட்டபோது அண்ணா அவர்களின் பெருங் குணத்தை நினைத்தேன்; மகிழ்ச்சிப் பெருக்கால் ஒரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது. திரு. அண்ணா அவர்களின் உடல் சென்னை கடற்கரையில் உள்ள புதைகுழியில் இறக்கப்பட்டபோது அவர் செய்த பணிகளையெல்லாம் எண்ணி, என் கண்கள் நீரை உதிர்த்தன.

மூன்றுவதாக, இவைகளையெல்லாம் இன்று எண்ணி நினைக்கும்பொழுது என் கண்களில் நீர் சொட்டுகின்றனவு என் செய்வது?

அண்ணை பாடிய பாட்டு!

அபூர்வ ராகங்களையெல்லாம் ரசிக்கத் தெரிந்த அண்ணா அவர்களுக்கு லய ஞானமும், சுருதி உணர்வும் உண்டு.

இந்தத் தலைமுறையின் வழிபாட்டுக்குரிய நாயகனாய் மாறிவிட்ட அண்ணா, ராகமும், லயமும் வந்து இணைகின்ற பாட்டாகிவிட்டவர்.

1943— வாக்கில் 'சந்திரோதயம்' எனும் நாடகத்தை எழுதிய நேரத்தில் அவர் — மேடையேறி நடித்ததோடு பாடவும் செய்திருக்கிறார் எனும் செய்தி சற்று சுவையான ஒன்றாகும்.

சந்திரோதயம் எழுதப்பட்டபோது அண்ணா அந்த நாடகத்தில் தாமே நடிக்கவும் வேண்டும் என்று விரும்பினார். எனவே திருவத்திபுரத்தில் இந்நாடகத்தை தாமே நடித்து அரங்கேற்ற விரும்பினார்.

முயற்சி வெற்றி பெற்றது.

நடிப்புத்துறையில் தேர்ந்ததொரு நடிகர்போல் நடிக்கும் ஆற்றல் தமக்கு உண்டு என்பது நிச்சயமானதும், அண்ணா தொடர்ந்து நாடகங்களில் நடித்து சுயமரியாதை இயக்கத்தின் கருத்துக்களை நாடக உருவில் இயங்கச் செய்தார்.

பேச்சில் அவர்பெற்ற வெற்றிக்குச் சிறிதும் குறைவில்லாமல், நடிப்பிலும் அவருக்கு வெற்றி கிடைத்தது. வெற்றியென்றால் கருத்துப் பிரச்சாரங்களுக்கு நாடக மேடைகளைப் பயன்படுத்துவதில் கிடைத்த வெற்றிதான்!

இதன் நடுவே, பாடும் துறையிலும் வெற்றி தேடும் அவா அவருக்கு லேசாக எழுந்ததுண்டு.

திருவத்திபுரம், சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் சந்திரோதயம் நாடகம் நடத்தப்பட்டபோதுஅண்ணா கூட்டத்தோடும், தனியாகவும் பாடியிருக்கிறார். ஆனால் இதில் அவர் வெற்றிபெற அவருடைய குரல் ஒத்துழைக்கவில்லை!

குரல் ஒத்துழைக்காவிட்டால் என்ன? பாட நினைத்தவரே — இந்தச் சமுதாயத்தின் பாடலான பிறகு, அந்த ராகத்தில் அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறாரே!

அண்ணாவின் வெறுப்பு

1967—ல் அண்ணாவின் பிறந்தநாள் அன்று-பழங்கள், மாலை, இனிப்பு வகைகளைவிடவும் அண்ணாவைப் பார்க்க விருதுநகரிலிருந்து வி.வி.ராமசாமி சென்னைக்கு வந்திருந்தார். நேராக அண்ணாவின் இல்லம் சென்று அண்ணாவைக் கண்டார்.

''மக்கள் என்னவெல்லாம் அடைய வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்களோ, அவை அத்தனையும் கிட்டட்டும்!'' என்று வாழ்த்தி விட்டு விடைபெற்றார் வி.வி. ஆர்.

அப்போது பிறந்தநாள் வாழ்த்துக்கூற அண்ணாவின் இல்லத்துக்கு ஆளுநர் வந்திருந்தார். ஆளுநர் வந்து விட்டதால் பரபரப்புடன் எழுந்த வி.வி.ஆர். அவர்களை அண்ணா சற்று நேரம் இருந்து போகும்படி கூறினார்.

ஆளுநர், அண்ணாவை வாழ்த்திவிட்டு விடைபெற்ற சமயம், 'நடிகர்' அண்ணாவைக் காண வந்தார். அண்ணாவுக்கு மாலை அணிவித்து விட்டு அவர் அண்ணாவின் காலடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். எழுந்தார். ஏதோ பேச விரும்பி நின்றார்.

அப்போது அண்ணா சட்டென்று வி.வி. ஆருடன் பேசத் தொடங்கிவிட்டார்.

அண்ணாவிடம் என்ன பேச நடிகர் விரும்பினாரோ அண்ணா அதைக் கவனிக்கவேயில்லை. நடிகர் சற்று நேரம் காத்திருந்துவிட்டு, அண்ணா தம்மோடு பேச விரும்பவில்லை என்கிற அலட்சியத்தைப் புரிந்து கொண்டு மெல்ல பொத்தாம் பொதுவில் கையைக் கூப்பி வணக்கம் செய்துவிட்டு விடுவிடு என்று வெளியேறிச் சென்றார்.

தம்முடைய இல்லத்தை விட்டு நடிகர் போய்விட்டார் என்பதைத் தெரிந்த பிறகுதான் அண்ணா தமது பேச்சை முடித்து, வி.வி. ஆருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

இப்படி 1967 — வாக்கிலேயே அண்ணாவின் நெஞ்சில் ஒரு உறுத்தலாக நெருடிக் கொண்டிருந்த முள் தான் அந்த நடிகர்!

நெஞ்சில் நிலைத்த நினைவு

தில்லை வில்லாளன்

அண்ணாவுடன்இருந்தபோது நெஞ்சில் நிலைத்து நிற்கும் நிகழ்ச்சிகள் எத்தனையோ நிகழ்ந்திருக்கின்றன. அவற்றில் இது ஒரு சம்பவம். இன்றும் ஏங்கித் தவிக்கும் என் நெஞ்சில் நிலைத்துவிட்ட சம்பவம் இது.

எம். ஏ. படித்து முடித்த உடனே அண்ணாவுடன் சென்று நிழல்போல் ஒட்டிக் கொண்டேன். குறிப்பிட்ட வேலை ஏதுவுமில்லை.

இப்படியே நாட்கள் ஓடித் கொண்டிருந்தன.

எனக்கோ இன்னின்ன வேலைகள் என்னுடையவை என்று திட்டமிடப்படவேண்டும்; அவைகளை என்னிடமே ஒதுக்கிவிடவேண்டும் என்று ஆசை.

இதுதான் கனவு — எதிர் காலக் கோட்டை.

ஆனால் அண்ணு எதையும் அப்படி முறைப்படுத்தி விடுவதில்லை.

எனக்கு இந்த நிலை மிகவும் சலிப்பையும், ஏமாற்றத்தையுமே தந்தது.

ஆகவே ஒருநாள் ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் வழக்கப்படி என் 'மனதை' வடித்து எழுதினேன்.

என்ன எழுதினேன் என்பது இன்று சரியாக நினைவில்லை. ஆனால் அதில் நான் எதை எழுதினேன் என்பதை மட்டும் சுருக்கமாக நினைக்கிறேன்.

அந்தச் சுருக்கம் இதுதான்:

''அண்ணு!

'நானும் தங்களைப்போலவே எம். ஏ. படித்தவன். தங்களுடன் நான் எந்த வேலையும் இல்லாமல் இருப்பது எனக்குச் சங்கடமாக இருக்கிறது. என் பட்டப்படிப்பு எந்தவிதப் பயனுமின்றி வீணாகிறது.''

—இப்படி நான், திராவிட நாடு அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த நண்பர் கிருட்டினமூர்த்தி என் பவரிடம் எழுதிக் கொடுத்து அண்ணு வந்தால் கொடுத்துவிடும்படி சொல்லி விட்டு யாருக்கும் தெரியாமல் சென்னைக்கு வந்துவிட்டேன்.

சென்னையில் என் நண்பர் ராமானுசம் இன்ஷ்யூரன்ஸ் அலுவலகத்தில் வேலை பார்த்துவந்தார். அவரிடம் வந்து அவரது அலுவலக அறையிலேயே படுத்து விட்டேன்.

மாலை—

அண்ணு சி. வி. ராஜகோபால் அவர்களுடன் சென்னைக்கு வந்து ராமானுசத்தின் அலுவலகத்திலேயே நேராக நுழைந்துவிட்டார்.

அண்ணுவைப் பார்க்க எனக்கு ஒரு பக்கம் வெட்கம்; மறு பக்கம் பயம்!

கடிதம் எழுதுகிறபோது இருந்த துணிவு — இப்போது அவரை நேரில் பார்த்ததும் பலவித உணர்ச்சி மாற்றங்களை உண்டாக்கி, முடிவில் ஒரு திகிலையே ஏற்படுத்தி விட்டது.

அண்ணு நான் எதிர்பார்த்ததுபோல் எதுவும் பேச வில்லை.

''வில்! ஊருக்குப் போகலாமா?'' என்றார்கள். அவ்வளவுதான். அவர் பின்னாலேயே போய் காரில் உட்கார்ந்து கொண்டேன்.

அதுப்றம் எதுவுமே அண்ணு பேசவில்லை; வேறெதையெல்லாமோ பேசிக் கொண்டிருந்தார். நாங்கள் காஞ்சி சென்று விட்டோம்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு—அண்ணு தன்னுடைய நெருங்கிய நண்பர்களிடமெல்லாம்—''வில்லாளனும் என்னைப் போலவே — எம். ஏ. படித்தவன். அவனுக்கு எந்த வேலையும் நான் மகாருக்க வில்லை என்று குறைபட்டுக் கொள்கிறான். என்னுடன் இருப்பதே மிகப் பெரிய வேலை என்பதை அவன் தெரிந்துகொள்ளவில்லை!'' என்று கூறி வருத்தப்பட்டது தெரியவந்தது.

இதை அறிந்ததுமே — என்னுடைய மனதில் — அண்ணாவின் அன்பு எத்தகைய தோர் மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை இப்போது நினைக்கினும் நான் நெகிழ்ந்து போகிறேன்.

அந்த அண்ணன் இன்று இல்லையே — என்று ஏங்க வைக்கும் இந்த நிகழ்ச்சி என் நெஞ்சில் நிலைத்த நினைவாகும்.



1949 — ம் வருடம் டிசம்பர் 25 —ம் நாள் தூத்துக்குடியிலே வி. வி. ராமசாமி தலைமையில் நீதிதேவன் மயக்கம் நாடகம் நடந்தது.

அந்த நாடகத்திலே அண்ணு அவர்கள் இராவணனாகவும் பேராசிரியர் நீதிதேவனாகவும் நடித்தனர். நீதிதேவன் அவையிலே நிறுத்தப்பட்ட இராவணன் தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களையெல்லாம் மறுத்துவைத்து இராமன் புரிந்த தவறுகளையெல்லாம் எடுத்துக் கூறி நீதிதேவனிடம் நீதி கேட்கிற கட்டத்தில் —

அண்ணுவின் வாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த பேராசிரியர் — அவ்வாதத்தின் கருத் தோட்டத்திலே மெய்மறந்து நின்று ரசித்துவிட்டு, நீதிதேவன் பேச வேண்டிய உரையாடலே மறந்துவிட்டார்.

உடனே அண்ணு, ''நீதி தேவனே! நீர் பேசமாட்டீர். ஆம்! நீதியும் தெறிமுறையும் உமக்கு மறந்து போய்விட்டன. ஆகவே நீர் பேச மாட்டீர்..!'' என்று கூறிச் சமாளித்தார்.

ஏற்கனவே நாடகம் பார்த்தவர்கள், இந்தக் கட்டத்தில் அண்ணு சமாளித்து பேராசிரியருக்கு வசனத்தை எடுத்துக் கொடுத்ததைப் புரிந்து கொண்டு நீண்ட நேரம் கைதட்டிப் பாராட்டினர்!

அளவான குடும்பம் அளித்திடும் இன்பம்!

- பத்தாண்டுக்காலத்தில் இந்தியாவில் 11 கோடி மக்கள் பெருகியுள்ளார்கள்!
- அடுத்த பத்தாண்டுக் காலத்தில் மேலும் 13½ கோடி மக்கள் கூடுதலாகலாம்!
- இப்படியே மக்கள் தொகை பெருகினால், எதிர்காலத்தில் இந்தியாவில் எண்ணற்றப் பிரச்சினைகள் தோன்றக்கூடும்!



அந்தப் பிரச்சினையிலிருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றிக்கொள்ள

இன்றே திட்டமிடுவது உங்கள் கடமையல்லவா?

தமிழ்நாட்டில்

374 கிராமக் குடும்ப நலத்திட்ட நிலையங்களும்,
149 நகர்ப்புற குடும்ப நலத்திட்ட நிலையங்களும்
உள்ளன

உங்கள் அருகாமையில் உள்ள குடும்ப நலத்திட்ட நிலையத்திற்குச் சென்று உங்கள் குடும்பத்தை அளவோடு அமைத்துக்கொள்ள ஆவன செய்யுங்கள்.

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

J. K. K. GROUP OF INDUSTRIES

...—00—...

* SUNDARAM SPINNING MILLS KOMARAPALAYAM
* KANDASAMY SPINNING MILLS, BHAVANI
* THE ALAGAPPA COTTON MILLS, RAJAPALAYAM
* PULLICCAR MILLS LIMITED, TIRUCHENGODE
* SRI RAMALINGA CHOODAMBIKAI MILLS LIMITED, TIRUPUR
* KANDASAMY WEAVING FACTORY & CO., KOMARAPALAYAM.

PIONEER EXPORTERS OF SINGLE AND FOLDED YARNS OF ALL COUNTS IN THE SOUTH

OUR EXPORTS FOR 1974 EXCEEDS RS. 4 CRORES.

	Spindles	Looms
INSTALLED:	1 22,800	342
PERMITTED:	1,38,600	1,050

Managing Partners:
J.K.K. ANGAPPAN
J.K.K. SUNDARAM
J.K.K. NATARAJAH
J.K.K. MUNIRAJAH

மனிதன் தன்னைச் சுற்றிலும் ஆராய்ந்து, சூழ்நிலையைத் தெளிந்து, தெரிந்து நடந்திடத் தூண்டும் ஏடுகளை எழுதியாக வேண்டும் தமிழில்!

பல புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ள மட்டுமல்ல, ஏற்கெனவே நமது மக்களுக்குத் தெரிந்திருக்கிற பல செய்திகளை மறந்துபோகச் செய்வதற்குப் பல புத்தகங்கள் தேவை.

—அறிஞர் அண்ணா

With Best Compliments from:

SAKTHI SUGARS LIMITED,

Green Lands,
8-28, Race Course Road,
COIMBATORE - 641018

With Best Compliments From

Seshasayee Paper and Boards Limited

ERODE- 638007

Manufacturers of :

- QUALITY WRITING PAPER
- PRINTING & PACKING PAPERS

Our specialities include

- DUPLEX BOARDS
- LIGHT WEIGHT POSTERS

இது உங்கள் திட்டம்; உடனே சேருங்கள்!

தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம்

இப்போது, அரசின் துணைக் கருவூலங்களிலும் உங்கள் மாதச் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்

நீங்கள் வேலை செய்பவராக இருந்தாலும் அல்லது சொந்தமாகத் தொழில் புரிபவராக இருந்தாலும், அரசு ஊழியர்களைப்போல் நீங்களும் கணிசமான ஓய்வூதியம் பெறலாம்.

உங்கள் நலனுக்காகவே தமிழக அரசு உருவாக்கியுள்ள இனிய திட்டமாம்—1974ஆம் ஆண்டு தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் உடனே சேர்ந்து பயன் பெறுவீர். மாதாமாதம் இடைவிடாமல் சிறு தொகை ஒன்றை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்தி வந்தால் பிற்காலத்தில் மாதா மாதம் ஓய்வூதியத் தொகை ஒன்று 30 ஆண்டு காலத்திற்குக் கிடைக்கும். இதைத் தவிர ஒரு கணிசமான தொகையும் மொத்தமாக அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் பங்கேற்கும் பிற வங்கிகளைப் போல் தமிழ்நாடு அரசின் துணைக் கருவூலங்களும் உங்கள் மாதச் சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்கின்றன.

திட்டம்	A	B	C	D	E	F	G
மாதசந்தாத் தொகை (ரூபாய்)	10	10	10	10	20	30	60
சந்தாக்கால அளவு (ஆண்டுகள்)	10	15	20	25	20	15	10
மாத ஓய்வூதியம் 30 ஆண்டுகளுக்கு (ரூபாய்)	20	35	60	100	100	100	100
மொத்த ரொக்கத் தொகை (ரூபாய்)	1500	2500	4000	5500	8000	8000	9500

- இத்திட்டத்தில் சேர வயது வரம்பு கிடையாது
- நுழைவுக் கட்டணம் கிடையாது
- சிறுவர் பெயரிலும் கூட கணக்குகளைத் தொடங்கலாம்
- மேலும் உங்கள் பணத்தை உங்களுக்காகவே முதலீடு செய்து அதற்குக் கிடைக்கும் வட்டியை பல்கிப் பெருக்கி உங்களிடம் திரும்பக் கொடுக்கும் பணியை தமிழ்நாடு அரசே ஏற்றுள்ளது.

விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
உங்கள் அருகிலுள்ள, இத்திட்டத்தில்
பங்கு பெறும் வங்கிகள், அரசின் துணைக் கருவூலங்கள்

அல்லது

இயக்குநர்
சமூகப் பாதுகாப்புத்திட்டம்
தமிழ் நாடு அரசு
4வது, மாடி, குறளகம் சென்னை-600001 தொலைபேசி : 20884

அந்தநாள் நினைவுகள்

என். வி. நடராசன்

சுயமரியாதை இயக்கத்துக்கு அஸ்திவாரம் பணமல்ல; பகுத்தறிவுதான். பகுத்தறிவின் துணை கொண்டுதான் சுயமரியாதை இயக்கம் வேரூன்றி வளர்ந்தது.

இந்த இயக்கத்தின் முன்னோடி தந்தை பெரியார். பெரியார் அவர்களைப் பற்றி சிலர் 'கஞ்சன்' என்றும், சிக்கனவாதி என்றும் கூறினர்கள்.

பார்க்கப்போனால் அவருடைய சிக்கனப்போக்குதான் இந்த இயக்கத்தை யாராலும் அசைக்க முடியாத அளவுக்கு பலமான தோர் இயக்கமாக வளர்த்தது என்றால் அதில் இரு வேறு கருத்தில்லை.

அவர் சிக்கனவாதியாக இருந்தார். ஆனால் சமுதாய சீர்திருத்தக் கருத்து ஆணித்தரமான கொள்கையாக அவரிடம் இருந்தது.

அவருடைய அயராத தொண்டின் பலனுக்குத்தான் மிக உயர்ந்த பதவிகளில் தூக்கி எறியவும் தயங்கிய கூட வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத்தின் அடிப்படை அவர் தன்னுடைய கட்சி



இயக்கத் தொண்டில் அண்ணாவுடன் என். வி. என்.

வில் பதவிகள் பெறும் வாய்ப்புகள் உண்டாயிற்று.

ஆரம்ப முதலே சமுதாய சீர்திருத்தம் முதலிய தொண்டுகளுக்காகவே இந்த இயக்கம் பாடுபட வேண்டும் என்று பெரியார் விரும்பினர். அடித்தளத்து மக்களின் உயர்வுக்காக அயராது பாடுபட்ட தந்தை பெரியார் அவர்கள் சமுதாய சீர்திருத்தப் பணிகளைத் தவிர வேறெதிலும் இயக்கம் பங்கேற்கக் கூடாது என்று விரும்பினர்.

அரசியலில் வெறுப்பு

அரசியல் துறையில் நுழைய அவருக்கு விருப்பமில்லை; ஏனென்றால் அரசியலும், தேர்தலும் பணநாயகத்தையே முன்னணிக்குக் கொண்டு வந்து விடுமென்று அவர் நினைத்தார்; பணநாயகம் சிந்திக்கும் சக்தியை அரசியல் என்ற போர்வையில் மறைத்துவிடும் என்பது அவரது எண்ணம்.

அதனால்தான் அவருக்கு தேர்தலிலும், அரசியலிலும் உற்சாகம் இல்லை. என்றாலும் இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்த சூழ்நிலைகள்—அரசியல் பின்னணிகள் எதிலும் தொடர்பு கொள்வது அன்றிருந்த நிலைமையில் சமுதாயப் பணிகளுக்கு அவசியமும் ஆனதால்—பெரியார் அவர்கள் பிடிப்பற்றதோர் பற்றினையே அரசியல் மீது காட்டி வந்தார்.

சமுதாயப் பணியே முழுப் பணி

சமுதாயப்பணிகள் என்று வரும்போது அதன் குறுக்கே வரும் அரசியலை பெரியார் வேட்பாளர்களையே கூட இதற்காக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தது உண்டு.

சமுதாயப் பணிகளில் அயற்சி காணுமல் பாடுபட்டு வந்த அவருக்குச் சில நேரங்களில் தனது பொதுவாழ்வைப் பற்றிய பிரச்சினைகளில் தளர்ச்சியேற்பட்டதும் உண்டு.

எந்த மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடுகிறோமோ அந்த மக்களே இன்னும் விழிப்படையவில்லையே என்ற காரணத்தால்தான் பெரியாருக்குச் சலிப்பு ஏற்படும். ஆனால் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்கள் மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தரத்தில் இன்னும் மேலோங்காமல் உள்ள மக்களைப்பற்றி அவர் சிந்திக்கும்பொழுது மீண்டும் உற்சாகத்தோடு பணியாற்ற முனைவார்.

சட்டமோ அல்லது மதமோ மக்களுக்கு நல்வாழ்வு தரக் கூடியதாக இருக்கவேண்டுமே தவிர — மதத்திற்காக மக்கள் பலியாகக்கூடாது என்பதில் திட்டவட்டமான எண்ணத்தை அவ்வப்போது எடுத்துக் கூறுவார் அவர்.

தன்னை ஒரு அரசியல் வாதி என்று மக்கள் கூறுவதைவிடத் தன்னை ஒரு சீர்திருத்தவாதி என்று அழைப்பதையே உற்சாகமாக வரவேற்று வந்தவர் பெரியார்.

குறை கூற இயலாதவர்

அரசியலில் தாங்கள் நிபுணர்கள் என்று எண்ணுபவர்கள் கூட பெரியாரின் பொதுத் தொண்டில் குற்றம் குறை சொல்லமுடியாது.

தன்மான இயக்கத்தை நடத்தும்பொழுது அவர் தனிச் சிறப்போடு விளங்குவார். ஆனால் பல்வேறு அரசியல் வாதிகளுடன் தொடர்பும், நட்பும் கொண்டிருந்தாலும் தம்முடைய கொள்கையைச் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் தமது பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார்.

மற்றும் சிலர் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி குத்தலாகப் பேசுவார்கள். அதற்குக் காரணம் எந்த அரசாங்கம் அமைந்தாலும் அந்த அரசாங்கத்தை அவர் தீவிரமாக ஆதரித்ததுதான்; ஏன் அவ்வாறு ஆதரிக்கிறார் என்பதை சரிவர புரிந்துக் கொள்ளாமல் குற்றம் சாட்டுவது உண்டு. அதற்காக பெரியார் சிறிதும் தளர்ந்ததில்லை. நம்பிக்கையும் இழந்ததில்லை.

அதற்கு அவர் சொல்லும் காரணம் உண்மையிலேயே ஒப்புக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

இந்த நாட்டு மக்கள் மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விரைவில் விடுதலை பெறவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுள்ள பெரியார் அவர்கள் அரசாங்கத்தின் நியாயமான செயல்களை ஆதரிப்பதில் தவறில்லையே; அந்தக் காரணத்திற்காகவே அவர் அவ்வப்போது அமையும் அரசாங்கத்தை ஆதரித்து வந்ததுண்டு. அதன் காரணமாகவே சுயமரியாதை இயக்கத்தின் சில கொள்கைகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

தவறு கண்டால் கொதிக்கும் உள்ளம்

தம்முடைய சீர்திருத்தக் கொள்கையை எப்பொழுதும் அவர்கள் விட்டுக் கொடுத்ததில்லை.

பெரியார் அவர்களின் கொள்கைப் பிடிவாதத்திற்கு ஒரு உதாரணத்தை இங்கே கூறுகிறேன்.

நீதிக்கட்சியின் சார்பில் ஒரு தேர்தலில் சுந்தரராவ் நாயுடு வேட்பாளராக நின்றார்.

இதில் ஆரம்பத்திலேயே பெரியார் அவர்களுக்கு விருப்பமில்லை.

கத்தே ரெங்கையநாயுடு என்பவர் காங்கிரஸ்காரர். சமுதாயப் பணிகளில் அக்கறை கொண்டவர் என்றாலும் காங்கிரஸ் கட்சிக்காரர் என்பதால் அவரை எதிர்த்து நீதிக்கட்சிக்காரர் போட்டியிட வேண்டும் என்பதற்காக சுந்தரராவ் நாயுடுவை அத்தேர்தலில் போட்டியிடச் செய்து ரெங்கைய நாயுடுவை முறியடிக்கவேண்டும் என்று நீதிக் கட்சியிலிருந்தவர்கள் விரும்பினர்கள்.

இது அரசியல் நோட்டியாக அமையாமல் சமுதாயத்துக்குள் ஏற்பட்டபோட்டியாக இருந்தது.

இதைச் சிலர் தூண்டி விட்டிருந்தனர். இந்தத் தூண்டுதலுக்கு சுந்தரராவ் நாயுடு இரையானது பெரியாருக்குப் பிடிக்கவில்லை.



1945-ல் சென்னையில் நடைபெற்ற கருப்புச் சட்டை மாநாட்டில் பெரியார், அண்ணா, என். வி. என். முதலியோர்.

இந்தத் தேர்தலையொட்டி சென்னையில் வால்டாக்ஸ் அரங்கில் பிரச்சாரப் பொதுக் கூட்டமொன்று ஏற்பாடாகியிருந்தது.

இக்கூட்டத்தில் பெரியார் பேச வேண்டும். இதை எப்படிப் போய் அவரிடம் சொல்வது? அண்ணாவிடம் சுறி, எப்படியாவது பெரியாரை வந்து கூட்டத்தில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அண்ணா அவர்களும் எப்படியோ பெரியாரிடம் எடுத்துக் கூறிச் சம்மதிக்க வைத்தார்கள். பெரியார் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் விருப்பம் இல்லாமலேயே வந்தார்.

தந்தை பெரியார் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களைக் கண்டதுமே, சுந்தரராவ் நாயுடுவை ஆதரிப்பதற்குப் பதிலாக எதிரே உட்கார்ந்திருந்தவர்களை வைதீகர்களை-யெல்லாம் திட்டி விட்டுப்போய் விட்டார்.

இது சுந்தரராவ் நாயுடுவுக்குப் பெரிய சங்கடத்தை உருவாக்கிவிட்டது.

1937-லே சென்னை பெத்துநாயக்கன் பேட்டையிலிருந்து மாநகராட்சி உறுப்பினர் தேர்தலுக்கு நீதிக் கட்சியின் சார்பில் அண்ணா நிறுத்தி வைக்கப்பட்டபோது நடந்தது இது:

காங்கிரஸ் சார்பில் அண்ணாவுக்கு எதிராக ஒரு பட்டதாரி நிறுத்தப்பட்டிருந்தார். அவருக்கு ஆதரவுப் பிரச்சாரம் செய்வதற்காக காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி அரிசனத் தெருக்களுக்கெல்லாம் வந்து மக்களிடம் வாக்குக் கேட்டார்.

என்னதான் காங்கிரஸ் காரர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிக்கு வந்தாலும், அவர்களிடம் தீண்டாமையும், ஜாதிய உணர்ச்சியும் அகலவில்லை என்பதை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உணரச் செய்தார் அண்ணா. அவர் செய்த யுக்தி அன்று காங்கிரஸ்காரர்களுக்குப் பெரிய பிரச்சினை களைத்தோற்றுவித்துவிட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களிடம் போய் அண்ணா கூறினார்: ''சத்தியமூர்த்தி பெரிய தலைவர், தீவிரக் காந்தியவாதி'' அவர் உங்கள் வீடு தேடி வந்து வாக்குக் கேட்கும் போது அவருக்கு மரியாதை காட்டும் வகையில் உங்கள் வீட்டிலிருந்து ஒரு குவளைத் தண்ணீர் கொடுங்கள். அல்லது இயன்றவர்கள் ஒரு வேளை சாப்பாடு சாப்பிடச் சொல்லுங்கள். நமது வீட்டில் சாப்பிட்டுத் தண்ணீர் குடிப்பவர்களை நாம் ஆதரிப்பதில் தவறு ஒன்றுமில்லை.''

இப்படி அண்ணா கூறியது ஆசாரத்தில் ஊறியவர்களைத் திணற வைத்துவிட்டது!

மறுநாள் காங்கிரஸ் வேட்பாளருக்குப் பிரச்சாரம் செய்ய வந்தவர்களைத் தாழ்த்தப்பட்ட தோழர்கள் சூழ்ந்து கொண்டனர்.

தங்கள் வீட்டில் சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

ஒருவர் கருவாட்டுக் குழம்பு பிசைந்த சாப்பாட்டினை ஒரு சட்டியிலே போட்டு தெரு வாசலுக்கே கொண்டு வந்து விட்டார்.

வேறுவழியில்லாமல் அந்தத் தோழர்கள் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். அதுகூட வேண்டாவெறுப்புடன்தான்.

என்ன உடன்பாடு என்பீர்கள். சைவ உணவு பரிமாறப்படுமானால் — தாழ்த்தப்பட்ட தோழர்கள் வீட்டில் சாப்பிடுவதாகக் கூறியதுதான் அப்போது சத்தியமூர்த்தியின் குழுவினர் செய்த உடன்பாடாகும்! ○

அழியாத காவியம் நீ!

புலவர் பொன்னிவளவன்

கோல்ஊன்றித் தள்ளாடிக் கொண்டிருக்கும் கிழவர்களும்
வாழ்நாளில் உனக்கெழுந்து மரியாதை தரநிற்பர்!
கால்இல்லை என்றுலும் கடலலைகள் எல்லாம்உன்
மேல்மரியா தைவைத்து மேல்எழுந்து நிற்குதண்ணு!

இருள்அடக்கும் செங்கதிர்போல் எதிர்ப்படக்கி வைத்தாய்; நூற்
பொருளடக்கம் நீ! மற்றோர் புகழடக்கம் உன்புகழ்முன்!
குறளடக்கம் உன்னுடைய குணங்களிலே! நீகொடுத்த
குரலடக்கம் எம்முடைய குரல்கொடுக்கும் ஓசையிலே!

கனவுகளில் உன்னுடைய கனிவுமுகம் வருகிறது!
நினைவுகளில் முதலிடம்உன் நினைவேதான் பெறுகிறது!
தினம்உனது நினைவெமக்குத் திறமையெலாம் தருகிறது!
மணமலர்கள் பலஉண்டு! மனமலர்நீ ஒருமலர்தான்!

விழிமூடும் முன்னுலே விழிப்புணர்ச்சி தந்தவனே!
மொழிக்கினிமை தந்தவனே! முன்னேற வைத்தவனே!
வழிகாட்டிச் சென்றவனே! வரலாற்றில் வாழ்பவனே!
அழியாத காவியம்நீ! அணையாத செங்கதிர் நீ!

சிறந்த நாள் எதுவென்றுல் செந்தமிழர்க் கெல்லாம் உன்
பிறந்த நாள் தான் அண்ணு! பேரறிஞன் உனை நாங்கள்
மறந்த நாள் இல்லை! எங்கள் மனச்சுவரில் உனது படம்!
இருந்த நாள் எல்லாம் நீ எமக்காக வே இருந்தாய்!

வீட்டின் இருள் விரட்டும் விளக்கைப் போல் நமது தமிழ்
நாட்டின் தரித்திரத்தை நாள் தோறும் விரட்டிவந்தாய்!
ஏட்டில் படுத்திருந்த எழுத்தெல்லாம் நீ கொடுத்த
சூட்டில் எழுந்திருந்து சொன்னகதை ஏராளம்!

பொங்கும் இனிமை எங்கும் தங்கிட...

புகழ்பெற்ற 'பாரி' கம்பெனி நிறுவனத்தாரின் போற்றக் கூடிய பணி — எத்தனை மக்களின் வாழ்க்கையிலும் இனிப்பூட்டுகிறது பாருங்கள்!

கரும்பு பயிரிடும் விவசாயிக்கு:

அமோக விளைச்சல் தர — தரமான கரும்பு வகைகளைப் பயிரிட ஆலோசனையும் கூறி — தேவையான உரமும் கொடுத்து — பாழாகாது பயிரைக் காக்க பூச்சி மருந்தையும் தந்துதவி — செழிக்கும் பயிரால் கொழிக்கும் செல்வத்தைப் பெற— பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கையிலும்...

சமுதாயத்திற்கு:

நிழல்தரும் ஆலமரம்! ஆயிரத்திற்கும் மேலாகத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கி, பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் நிதி உதவி வாரி வழங்கி, மக்கள் 'நல்வாழ்வு இல்லங்களையும்' துவக்கி மாவட்டம் மூலம் நாடு செழிப்புறவும்...

பணியாற்றும் ஊழியருக்கு:

இரண்டாயிரத்திற்கும் மேலாகப் பணியாற்றும் ஊழியர் குடும்பங்களில் மகிழ்ச்சி பொங்க, பேணி வரும் தொண்டோடு, முடிந்த அளவில் தந்தையுடன் மகனும், வாழையடி வாழையென பணியாற்ற வாய்ப்பை அளித்தும், தொழிலுறவுடன் குடும்ப உறவும் வளர கல்வித்திட்டங்களைப் போற்றி, அத்தாட்சியாக அரசிடமிருந்து பல பல பரிசுகள் பெற்று பெருமையுடன் நடத்தும் நிர்வாகத்திலும்.....

அரசுக்கு:

ஒத்துழைப்போடு ஆண்டுக்கு ஆண்டு நன்முறையில் லாபத்தோடு செயல்பட்டு கோடிக்கணக்கில் வரிப் பணமாகவும் இதர வகையிலும் அரசுக்கு அள்ளித் தருவதிலும்.....

பொதுமக்களுக்கு:

ருசியில் சிறந்த இனிப்பின் சிகரமான "பாரியின்" சர்க்கரையை, பானமாகவோ— பலகாரமாகவோ சுவைக்கும் அத்தனை பேர் நாவும் சொல்லும் வகையிலும்

Parry's

ஈ.ஐ.டி.-பாரி லிமிடெட்
சர்க்கரைப் பிரிவு
சென்னை/நெல்லிக்குப்பம்

"பாரி" நிறுவனம் செய்யும் பணியெல்லாம் இனிப்பேதான்!

EID 2201 TAM

தூயஉள்ளமேகோயில், நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம் மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை. ஏழை இதயத்திலே களிப்பூட்டலே பகவானுக்குத் தேர்த்திருவிழா!

—அறிஞர் அண்ணா

with Best Compliments from :

A.B.T.PARCEL SERVICE

226,Dr.Nanjappa Road
COIMBATORE- 641018

1946-

நடப்புச் சித்திரம்

1946-லே ஒரு நாள்...!

ஆர். சக்தி மோகன் கற்பனை

மத்தியில் அல்லது இறுதியில் — நினைவில்லை.

மாயவரத்திலே ஒரு பொதுக்கூட்டம்.

அதில் நான் பேசுவதாக ஏற்பாடு — சென்றிருந்தேன்.

உலக வரலாறே கண்டிராத அளவிற்கு, அற்புதங்கள் பல புரிந்து இந்திய விடுதலையைச் சாதித்த வீரத் திருமகன் நேதாஜியின் தலைமையில், இந்தியாவின் கிழக்கு முகப்பில் தீரப் போரிட்டு, அதிர்ஷ்டவசமாய் உயிர் மிஞ்சி, ஊருக்கு நான் வந்திருந்த புதிது.

வேற்றூட்சி இந்தியத்தை விட்டுப் பெயர்ந்தும், பெயராமலுமிருந்து கொண்டிருந்தது. ஆங்கில அதிகாரியின் தலைமையில் இடைக்கால சர்க்கார் செயலாடிக்கொண்டிருந்தது.

அப்பொழுதெல்லாம் எனக்கு ஒரு தனித் துணிச்சல் குடியடித்துக் கொண்டேடிருக்கும். வேற்றூட்சியை எதிர்ப்பதிலும், இந்திய விடுதலையைச் சந்திப்பதிலும், அதற்காக எந்தக் கொடுமைகளையும் ஏற்பதிலும் கொஞ்சம்கூடப் பின்படாத திண்மை என்னிடம் புரையோடிப் போயிருந்தது. நல்ல முறுக்கான பருவமுங்கூட. அதோடு ரணகளம் கண்டு வந்ததில் ஒரு பெருமிதம்!

அதிவேகமாக இருக்கும் பேச்சு.

அந்த மாயவரம் கூட்டம் மாபெரும் கூட்டம் — நானே அந்த அளவிற்கு எதிர்பார்க்கவில்லை.

அது காங்கிரஸ்மேடை. காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் கூட்டப்பட்ட கூட்டம். வன்முலும், நேதாஜி நிறுவிய சுதந்திர இந்திய தற்காலிக சர்க்காரில் அங்கம் வகித்து என்னைப்போலவே தாயகம் திரும்பி இருந்த, மாயவரம், ஆத்தூர் முக்கோம்பு, தில்லையாடி, பேரளம், நிரவி, நன்னிலம், பூந்தோட்டம், கொடிக்கல் பாளையம், திருவாரூர் நண்பர்கள்தான் ஏற்பாடெல்லாம்.

அந்தக் கூட்டத்தில் நான் ஒருவன்தான் பேச்சாளன். அவ்வளவு பெரிய கூட்டம் தமது ஆர்வத்தை அடக்கம், அமைதி மூலம் கர்ட்டிக் கொண்டிருந்ததால், எனக்கு அலாதியானதொரு ஆவேசம் கொந்தளித்து 'ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் முழக்கித் தள்ளிவிட்டேன்.

அன்று மாயவரத்தில் நடை பெற்ற சிறப்புக் கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றிவிட்டுத் திரும்புகிற வழியில் அறிஞர் அண்ணு அவர்கள், நான் பேசிய கூட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நின்று எனது பேச்சைக் கேட்டிருந்திருக்கிறார் — எனக்குத் தெரியாது. அப்பொழுது தி. மு. க. தோன்றவில்லை. அறிஞர் அண்ணுவைப்பற்றி எனக்குஅதிகம்தெரியவும்தெரியாது. அவரது எழுத்தாற்றலை படித்துப் பரவசித்திருக்கிறேன். அவர் கொண்டிருந்த கொள்கை கோட்பாடுகளை, மக்களிடம் படரவிடுவதில் அவர் கையாண்ட வாகவமான எழுத்து நடையில் லயித்திருக்கிறேன். ஆனால் நேரடியாகப் பார்த்ததில்லை. அவரது மேடைப் பேச்சுக்களைக் கேட்டதுமில்லை. கேள்விப்பட்டதுதான்.

கூட்டம் முடிந்து. இரவு பத்தரைமணிக்கு ஒரு ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார்கள். பெரிய ஓட்டல்தான். மூன்றுவது மொட்டைமாடியில் கூரையால் வேயப்பட்ட 4—5 அறைகள். அதில் ஒன்று தான் கிடைத்திருக்கிறது. நான் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அந்த அறை மூங்கில் தட்டியால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அதற்குள் பலகைகள் பெயர்ந்த ஒரு கட்டில். அதன்மேல் ஒரு கோரைப்பாய் அதுவும் தையல் கழன்று கோரையின் செதில்கள் முள்ளுருவும் பெற்று நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தன. பஞ்சு புறப்பட்ட தலையணை ஒன்று. மூன்று கால் கொண்ட நாற்காலி ஒன்று. இந்தப் பழைமைப் பந்தாவுக்குப் புதுப் பொலிவு கொடுப்பதற்காகவோ, என்னவோ ஒரு மேஜை விசிறியைத் தொங்க விட்டிருந்தார்கள். அந்த விசிறி சுழலும். ஆனால் காற்று வராது. இவ்வளவு வசதிகள் நிறைந்த அந்த அறையின் தரையில் உட்கார்ந்து நண்பர்களோடு பேசி கொண்டிருந்தேன். நேரம் போனது தெரியவில்லை. திடீரென்று அறிஞர்வர்கள் தமது சகாக்கள் சிலர் புடை சூழ நான் தங்கி இருந்த அறைக்குள் வந்தார். வந்த வுடன், இன்று பொதுக் கூட்டத்தில் பேசியது யார்? என்றார்.

நான்தான், என்று எழுந்து நின்றேன்.

அருகே வந்த அறிஞர்வர்கள், நீண்டநாள் நெருங்கிப் பழகிய மாதிரியான அன்புற வோடு, ''தம்பி, இன்று உனது பேச்சை ஒரு மணி நேரம் கேட்டேன். அவ்வளவும் நல்ல விளக்கங்கள். தமிழுக்கு இவ்வளவு வேக சக்தி கொடுக்க முடியும் என்பதை அறிந்து மகிழ்ந்தேன்'' என்று முதுகைத் தட்டிவிட்டு, ''நாளைக் காலை என்னோடு டிபன் சாப்பிட வேண்டும்'' என்று முடிவான கட்டளையும் இட்டார்.

எனக்கு ஒரே புதிர்! அறிஞர்வர்களே நான் அதற்கு முன் பார்த்ததே இல்லை. அவருடைய உருவப் படத்தைக் கூட பத்திரிகைகள் மூலம் பார்த்ததில்லை. திடீரென்று தோன்றி, முகமறியாத என்னை நெஞ்சார வாழ்த்திய வர் யாரென்று தெரிய வேண்டாமா? உடன் வந்தவர்களும் அறிமுகப்படுத்தவில்லை. அவரும் கூறவில்லை. நான் தான் கொஞ்சம் தயக்கத் துடன்—

'தாங்கள்?..'என்று இழுத்தேன். அதற்குமேல் வார்த்தை வரவில்லை.

''நானு! என்னைத் தெரியவில்லையா? நான்தான் சி. என். அண்ணுதுரை'' — என்றார்.

எனக்கு நெஞ்சு வியர்த்து விட்டது! உடலெல்லாம் ஒரே புல்லரிப்பு! எல்லா வகையான சிறப்புகளும் அவரைத் தழுவுவதற்கு நெருங்கிக்கொண்டிருந்த காலம்தான் அதுவேயன்றி, புகழெல்லாம் ஒன்று திரண்டு அவரை மேவி, அவரை முழுமையாக்கிவிட்ட தாசு அன்று கருத முடியாவிடினும் அறிவை அறியத் தெரிந்த— அன்பை அளவளாவத் தெரிந்த— ஆற்றலே மதிக்கத் தெரிந்த பகைமைகளே பாசங்களாக மாற்றிக்கொள்ள முடிந்த-

அறிவார்ந்த அசல் அறிஞர் தான் என்பதில் எவரும் மாறுபடவோ, வேறுபடவோ இயலாது என்பதை, அருமை சார்ந்த, அவரது அடக்கமான தோற்றமும் களங்கமில்லாத அன்புத் தேனிலே குழைத்தெடுக்கப் பட்ட வார்த்தைகளும், வெற்றியே நிறைந்த அவரது செவ்வாயிலிருந்து சுடர் சுடராய் வந்து விழுந்த பாங்கு களும் நிச்சயப்படுத்தி நிரூபித்தன!

அறிவுப் பட்டறையிலே பல தடவை புடம்போட்டெடுக்கப்பட்டு அறிஞரான அவர் சமீப எதிர்காலத்தில் மிகப் புகழ் பெறப்போகிறார்—மாநிலத்திற்கே முதல்வராகப் போகிறார் என்றெல்லாம் கற்பனைகூடச் செய்ய முடியாத வருடம் 1946! எனினும், பார்த்தவுடனேயே எவரவர்களின் அழைப்பை எதிர் நோக்கி காத்திருந்தேன். மணி 7....8—என்று ஓடிக் கொண்டிருந்தது. அழைப்பு வரவில்லை. பசி வேறு. 4, 5 காபி குடித்துவிட்டேன். அறிஞர்வர்களின் அறைப்பக்கம் எட்டிப் பார்த்தேன். உறங்கிக் கொண்டிருந்தார். நானும் காலை உணவு கொள்ளாமல் காத்திருந்தேன். 10 மணி சுமாருக்கு அறிஞர்வர்கள் அழைத்தார்கள். உடன் சென்றேன். ஒட்டலுக்குச் சென்றோம். அங்கு ஒரு டிலேட் பலகையில் பழைய சோறு போடப்படும் என்று எழுதித் தொங்கவிட்டிருந்தார்கள்.

அதைப் பார்த்த எனக்கு வியப்பாக இருந்தது. ஒட்டல்களிலுமா பழைய சோறு என்று வியந்தேன்.

காலை 10 மணிக்கு மேலாகி விட்டதால் டிபன் காலியாகி விட்டது. பழைய சோறு தான் மிச்சம். அறிஞர்வர்கள் சாப்பிடுவோமா என்றார். நான் மறுக்கவில்லை. உட்கார்ந்தேன்.

காய்ந்துபோன வாழை இலை. அதன் மேல் பிழியப் பட்ட பழைய சோறு.

இலைக்கு ஒன்று விகிதம் வீசம்படி நல்லெண்ணெய்— அறைக்குள்ளிருந்த மூட்டைப் பூச்சிகள் கேட்ட ரத்த தானத்தால்.

எப்படியோ கண்ணயர்த்தேன். பிறகு விழித்தேன். மணி 3. உறக்கம் கலைந்து விட்டது. அறிஞர்வர்களின் அறைப்பக்கமாவது போகலாமென்று சென்றேன். அவர் மாடியில் தலையணையை வைத்துக்கொண்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். சத்தமின்றித் திரும்பி விட்டேன். எப்படியோ விடிந்தது. நண்பர்களுடன் ஆற்றுப்பக்கம்போய் குளித்து விட்டு அறைக்கு வந்தேன். காலை உணவிற்கு அறிஞர்வர்கள் அழைத்தார்கள். உடன் சென்றேன். பார்த்தேன். பிழியப்பட்ட பழைய சோற்றில் ஒரு கலயத் தயிரை ஊற்றினார். — பிசைந்தார். பிறகு அதன் தலையில் நல்லெண்ணெயை ஊற்றினர் — அதையும் சேர்த்துப் பிசைந்தார்.

நானும் அதன்படி செய்தேன்.

அவர் உண்டார் —நானும் உண்டேன்.

கருப்பட்டியை என்ன செய்வதென்று தெரியவில்லை. அதையறிந்த அறிஞர்வர்கள், அவசியப்பட்டால் கருப்பட்டியில் கொஞ்சம் கடித்துக்கொள். நன்றாகஇருக்கும் என்றார்.எனக்கு வேடிக்கையாக இருந்தது.என்றாலும் அதன்படி செய்தேன்.

கெட்டித் தயிரையும், நல்லெண்ணெயையும் அபிஷேகம் செய்து கொண்ட அந்த பழைய சோறு, கருப்பட்டியின் தயவோடு உண்ண உண்ண சுவை பெருகிற்று. மிச்சமில்லாமல் இலைச் சோறு முழுதையும் உண்டு விட்டேன். அறிஞர்வர்கள் இலையைப் பார்த்தார்கள். சுத்தமாக இருந்தது. என்ன கொஞ்சம்கூட இலையில் வைக்காமல் சாப்பிட்டு விட்டாயே என்றார். மிகமிக நன்றாக இருந்தது — சாப்பிட்டு விட்டேன் என்றேன். என்றாலும் கொஞ்சமாவது இலையில் மிச்சம் வைக்கவேண்டாமா — என்றார். இலையில் மிச்சம்வைத்து எழுந்தால் எங்கள் பக்கம் திட்டுவார்கள். நீங்கள் மிச்சம் வைக்க வேண்டும் என்கிறீர்களே— இதில் ஏதேனும் சாத்திர தோஷமிருக்கிறதா என்றேன். சாத்திர தோஷம் ஒன்றுமில்லை. நடைமுறைத் தத்துவம் இருக்கிறது என்றார். என்ன என்றேன்!

''ஏழைகளைக் காப்பாற்ற எச்சில் இலையில் மிச்சம் வை'' என்றார், குலுங்கிய சிரிப்புடன்.

அந்த நடைமுறைத் தத்துவத்தை அப்படியே ஏற்றுக் கொண்டேன். அருமையான பிளாட்டின மொழியல்லவா! ஏழைகளைக் காப்பாற்ற எல்லோராலும் கையாள முடிந்த நடைமுறைத் தத்துவம் இதைவிட வேறேது?

போராட்டார்கள்'' என்று அண்ணுவிடம் தெரிவிக்கப்பட்டது. ஒருவர் பேச்சோடு பேச்சாக

அண்ணு பாதை

காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்களுக்கும் வரக் காளர்களைச் சந்திக்க அண்ணு சென்று கொண்டிருந்தார்.

இப்படிச் செல்லும் ஊர்களில் எல்லாம் மக்கள் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வரவேற்றனர். ஒரு கிராமத்தில் அண்ணு செல்வதற்கு முன்னதாக புதிய பாதை போடப்பட்டிருந்தது.

இதைக் கண்டதும் அண்ணு அந்த ஊர் மக்களிடம் ''இந்தப் பாதை எப்போது போடப்பட்டது?'' என்று கேட்டார்.

''தேர்தல் வருகிறதே அதனால் மிகச் சமீபத்தில் தான் இந்த ரோட்டைப் போட்டார்கள்'' என்று அண்ணுவிடம் தெரிவிக்கப்பட்டது. ஒருவர் பேச்சோடு பேச்சாக

''இந்தப் பாதைக்கு 'அண்ணு துரை பாதை' என்று பெயர் வைத்திருக்கிறோம்!'' என்றும் கூறினர். அண்ணு புன்முறுவலுடன் ''ஏன்?'' என்று கேட்டார்.

''நீங்கள் இந்தத் தொகுதியில் நிற்கின்ற காரணத்தால்தான் இவ்வளவு அவசர அவசரமாக காங்கிரசு ஆட்சி இந்தப் பாதையைப் போட்டிருக்கிறது; ஆக — இது உங்களால் கிடைத்த பாதை என்பதால் உங்கள் பெயரை வைத்திருக்கிறோம்'' என்று அதற்கு விளக்கம் சொன்னார் அவர்.

சூழ்ந்து நின்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

நமது
நெஞ்ச வீதிகளில்
நித்தம் உலா வரும்
அந்த அறிவுத் தேருக்கு
இன்று
ஆராரோ நாள்!

சிறகு முளைத்த இயற்கைக் கவிஞர்கள்
தம் இனிய குரல்களால்
நம் தமிழ்க்குயிலே வாழ்த்தி நடத்தும்
கவியரங்க நிகழ்ச்சிகளைச்
சோலை வானொலிகள்
சேர்வின்றி ஒலிபரப்புகின்றன!

கொடிகள் முதல் மரங்கள் வரை
அனைத்து
இயற்கைப் பத்திரிகைகளும்
அரும்புச் சொற்களெடுத்து
அண்ணனுக்கு
வாழ்த்துக் கவிதைகள் வரைந்துள்ளன!

காலைத்தாயின்
ஞாயிற்று மார்பு சுரக்கும்
ஒளிப்பால் குடித்து ஒளிரும்
பசுமைப் பிள்ளைகள்
தென்றலின் மௌனராகங்களுக்கேற்ப
மன்னனைப் பாராட்டி
நடன நிகழ்ச்சிகள் நடத்துகின்றன!

இருட்டால் திரிந்த
காகக் கட்டிகளாய்ப் பறக்க
ஒளிப்பறவை உற்சாகத்தோடு சிறகு விரிக்கும்
இந்த இனிய வேளையில்....

நம்மைப் பேசவைத்த
நம்மைப் பாடவைத்த
நம்மை எழுதவைத்த
நம்மை வாழ வைத்த
நம் அன்புத் தெய்வத்தை
நெஞ்சக் கோயிலில் நிறுத்தி
ஆத்திகத் தொண்டர்களாய்
வாழ்த்து மலரெடுத்து
அர்ச்சனை செய்வோம்!
அவனை மறந்த நாத்திகர்கள்
நாடியற்றுப் போவார்கள்!

ஆம்!
அவன் மீது பக்தி உள்ளவரைதான்
தமிழுக்கு வாழ்வு....
தமிழ்ச் சந்ததிக்கே வாழ்வு.
அண்ணன் வாழ்க!
அவர் தம் நினைவும் வாழ்க!



அண்ணாவும் மதுவிலக்கும்

திருவாரூர் முத்துராமன்

1967 ஜனவரித் திங்கள் கடைசி வாரம் பேரறிஞர் அண்ணா அவர்கள், மூன்று நான்கு நாட்களில் மூன்று, நான்கு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக, இரவு 7 மணியளவில் காஞ்சிபுரத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். காரில் நானும், சி. வி. ஆரும், இளங்கோவும் இருந்தோம். காரை சண்முகம் ஓட்டிக்கொண்டு வந்தார்.

கார், அமைதியாக, மாமண்டூரைக் கடந்து கொண்டிருந்தது. சி. வி. ஆர். அவர்கள் பேச்சைத் தொடங்கினார்கள்.

''அண்ணா, காஞ்சிபுரத்தில் பேராசிரியர் கூட்டம் நடக்க இருக்கிறதே தெரியுமா?''

''தெரியுமே! ஏன், சி.வி. ஆர். நீங்கள் கலந்து கொள்கிறீர்கள் இல்லையா?''

''இல்லை அண்ணா! நம்ம முத்துரமன், அந்தக் கூட்டத்தில் பேசப் போகிறாம்!''

''அப்படியா முத்துராமன்! நீயா, பேராசிரியர் கூட்டத்தில் பேசப் போகிறாய்?''

''சொல்லி இருக்கிறார்கள், பேச வேண்டுமென!''

''அப்படியா! பேராசிரியர் ரொம்பவும் கோபக்காரர்! ஜாக்ரதையாகப் பேச வேண்டுமே!''

''நான் பேசவே இல்லை அண்ணா!''

சிறிது நேரம் அமைதி நிலவியது. சி. வி. ஆர்க்கு அறிஞர் அண்ணா சொன்ன தன் பொருள் புரியுமோ, புரியாதோ! எனக்கு எதுவும் நினைக்க, அல்லது சொல்லத் தோன்றவில்லை. அண்ணா அவர்களது மௌனத்திலிருந்து, நான் அந்தக் கூட்டத்தில் பேச வேண்டியதில்லை என்று அவர் விரும்புகிறார் என முடிவு மேற்கொண்டுவிட்டேன்.

முதலாவதாக, ஆற்காட்டில் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆற்காட்டை அடைய இன்னும் நாலைந்து மைல்களே இருக்கும்! நான் தொடங்கினேன்.

''அண்ணா! மதுவிலக்குக் கொள்கையை ரத்துச்செய்து விடுவது பற்றி நீங்கள் யோசித்திருக்கிறீர்களா?''

அண்ணா அவர்கள் திரும்பிப்பார்த்தார்கள்! பதில் சொல்லப் போகிறார்கள் என எதிர்பார்த்தேன்! பார்வையில், 'அட ஏமாளியே!' என்று என்னை அழைப்பதாகத் தெரிந்தது. நான் அப்படித்தான் நினைத்துக்கொண்டேன்.

மீண்டும் மௌனம். இளங்கோவும் என்னைப் பார்த்தார்! ''வேண்டும், உங்களுக்கு!'' என்பதுபோல இருந்தது அந்தப் பார்வை!

அந்த இடைவெளியில் தான் மதுவிலக்குக் கொள்கைபற்றி அண்ணா அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும் என்பது என் முடிவு! ஆற்காடு கூட்டத்தில் அதுபற்றிப் பேசுவார்கள் என நம்பினேன்!

''முத்துராமன்!''

அண்ணா அவர்கள், திரும்பாமலேயே அழைத்தார்கள்.

''அண்ணா!''

''மதுவிலக்கை — ரத்துச் செய்துவிடலாம்! நியாயமும் கூட அது! ஆனால்....!

மறுபடியும் ஒரு நிமிட நேரம் அமைதி நிலவியது.

''ஆனால், அளவுக்கு மீறிய காங்கிரஸ்காரர்களுக்குப் போராட்டம் நடத்த ஒரு சந்தர்ப்பத்தை எதற்குக் கொடுக்க வேண்டும்?''

பதில் ஊன்றிப் பாருங்கள்! 1967 ஜனவரித் திங்கள் அது! ஆட்சியிலிருந்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்! அண்ணா அவர்களே ஆட்சியிலிருப்பது போல, மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, காங்கிரஸ்காரர்களுக்குப் போராட்ட உணர்வை எதற்குத் தூண்டவேண்டும்? என்று கேட்கிறார்! சரியாக 30 நாட்கள் ஆவதற்குள், அண்ணா அவர்கள் ஆளுங்கட்சியின் தலைவராகிவிட்டார்! இன்னும் ஒருவார காலத்தில் முதலமைச்சராக, ஆட்சிக் கட்டிலில் அமரப் போகிறார்!

அண்ணா அவர்களது தீர்க்கதரிசனம் மட்டுமே இந்தனைக்கு உரியதல்ல இங்கு!

இன்னொன்றும் இருக்கிறது.

மதுவிலக்குக் கொள்கையை டாக்டர் கலைஞர் அவர்கள் தள்ளிவைத்த காலத்தில் கூப்பாடு போட்டவர்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்று அது!

ஆனால், காலம் அந்தக் கருத்தின் பக்கம் அண்ணா அவர்களை அழைத்துச் செல்லவில்லை. முதலமைச்சரான பின்பு, நீலகிரியில் நடை பெற்ற ஒரு கூட்டத்தில் மதுவிலக்குப் பற்றிப் பேசினார்கள்! அந்தப் பேச்சின் சாரம்கூட, ரத்துச் செய்து தவறல்ல என்றுதான் இருந்தது!

எனவே, மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவின் கருத்து என்னவாக இருந்தது என்பதைப் பதிப்பித்துக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு அல்லவா! நெஞ்சை விட்டு நீங்கமுடியாத ஒரு நினைவு அல்லவா இது! மதுவிலக்குக் கொள்கையில், டாக்டர் கலைஞர் அவர்களது முதல் முடிவு தவறுதலல்ல என்பதற்கு நல்ல உதாரணமல்லவா!

அறிஞரவர்களின் கொள்கை, கோட்பாடுகளின் முழு அளவுக்கு உடன்பாடு கொள்ளாதவனாக நான் இருந்தாலும், அவர் அன்று கூறிய நடைமுறைத் தத்துவத்தை இன்றுவரை கையாண்டே வருகிறேன்.

வீட்டில் தட்டில் சாப்பிட்டாலும் வெளியூர்களில் இலையில் சாப்பிட்டாலும் கடைசியில் கொஞ்சம் மிச்சம் வைக்காமல் எழுந்திருப்பதில்லை.

அதன் பிறகு அறிஞரவர்களை நான் சந்தித்ததில்லை. தோழர் சம்பத் அவர்கள் தி. மு. க.விலிருந்து விலகி தனிக்கட்சி வைத்த கொந்தளிப்பான நேரத்தில் நான் எனது 'கண்ணகி' வாரப் பதிப்பில் ஒருபத்து வாரம் தோழர் சம்பத் அவர்களின் பிறந்த வீட்டு எதிர்ப்பை எதிர்த்து கடுமையாக விமர்சித்தேன். அக்கட்டுரைகளில் ஒவ்வொரு முறை அறிஞரவர்களின் திராவிடநாடு — அரங்கண்ணல் அவர்களின் அறப் போர், மற்றும் தி. மு. க. பத்திரிகைகள் பலவற்றிலும் பெயர்த்துப் பிரசுரித்தார்கள்: அப்பொழுது கண்ணகியின் கடுமையான விமர்சனம் தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டிருந்தது. அறிஞரவர்கள் அக்கட்டுரைக்கு, தன்னியாகவே ஒரே வரியில் ஒரு கார்டு எழுதி இருந்தார்.

'கண்ணகியின் குமுறல் தியதையெல்லாம் தூய தாக்கட்டும்' என்பதே அவ்வரி.

அப்போதைய தாளமுடியாத கொந்தளிப்பான நிலையிலும் கூட தியதை, தூயதாக்க விரும்பினரே யன்றி, தீர்த்துக்கட்ட விரும்பவில்லை அவர். அவ்வளவுக்குபிறரை அணைத்துச் செல்லும் பண்பு கொண்டிருந்த வர் அந்தப் பெருமகன். பிறகு அறிஞரவர்களை நான் நேரில் பார்த்தது, இந்திய தேசியத்தின், குறிப்பாக தமிழ்நாட்டு தேசியத்தின் — தெய்வீகத்தின் திருவாதிரை நட்சத்திரமாகத் திகழ்ந்த மாணிக்க மணித் தலைவர் பசும்பொன் தேவரவர்கள் தெய்வமான அன்று பசும்பொன் கிராமத்தில்தான். அவ்வட்டாரமே கொள்ளாத கூட்டம், பசும்பொன் கிராமத்தில் குவிந்திருந்தது. திரும்பக்கூட முடியாத ஜனநெரிசல். அறிஞரவர்கள் எங்கிருந்தோ திடீரென பசும்பொன் வந்தார். தாங்க முடியாத கூட்டத்திற்கு ஊடே மோடை நோக்கி வந்து கொண்டிருந்தார். நான் எதிர்ப்பட்டேன். வேதனையின் சுமை தாங்காமல் வாய்மூடி மௌனியாய் வந்த என் தோளைப் பற்றிய அறிஞரவர்கள் என் தலையை நிமிர்த்தி உற்று நோக்கினார். நானும் நோக்கினேன். பேச இயலவில்லை. தமது நெற்றியிலே எனது நெற்றியைப் பிடித்து இலேசாக முட்டச் செய்துவிட்டு மேடைக்குச் சென்றார்...

பின்னர் அவர் முதல்வரானார். முழுச் சிறப்பில் குலுங்கினார். நெஞ்சுக்குள் மகிழ்ந்து கொண்டேன்; நேரில் போய்ப் பார்க்க வில்லை, இனி என்றுமே பார்க்க முடியப் போவதுமில்லை.....

நாவன்மையால் லட்சோப லட்சம் மக்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட நம்குல நாயகன் அண்ணா அவர்களின் முதல் அரசியல் பேச்சு பற்றி டாக்டர் சிற்சபை இங்கே விளக்குகிறார்.

அண்ணா அவர்களின் கல்லூரிப் படிப்பு முடிந்து சென்னை, தங்கசாலை வீதியில் தொத்தாவுடன் தங்கியிருந்தார். வீட்டின் அருகாமையில் ஓர் மாடிக் கட்டிடம். அதன் மூன்றாவது அடுக்கிலே ஓர் அறை. அங்கே நண்பர் எஸ். அரங்கநாதன் என்பவர் சுயமரியாதை இளைஞர் மன்றம் ஒன்றைத் துவக்கிப் படிப்பகம் வைத்திருந்தார். அந்நாளில் அண்ணாவின் பொழுதுபோக்கு பெரும்பாலும் சுயமரியாதை இளைஞர் மன்றந்தான். நான் சென்னையில் குடியிருந்த இடமும் அதற்கு அருகில்தான். அண்ணாவின் பேச்சாற்றலையும், அறிவுத் திறனையும் பற்றி அன்பர் அரங்கநாதன் என்னிடம் அடிக்கடி கூறுவார்.

நீதிக்கட்சி செல்வாக்கு மிகுந்த காலம் அது. டாக்டர் சி. நடேச முதலியார் அதிலே புகழ்வாய்ந்தவர். அவருக்கு வலது கரமாக விளங்கியவர் அக்கால "நவமணி" ஆசிரியர் திருவாரூர் பக்கிரிசாமி. பெரும்பாலும் நீதிக்கட்சிக் கூட்டங்களை அவர்தான் ஏற்பாடு செய்வார். சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபந்தான் அந்நாளில் பெருந் தலைவர்களின் கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்ற இடம். நீதிக்கட்சியின் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து அதன் அழைப்பை டாக்டர் தருமாம்பாள் அவர்களுக்குக் கொடுப்பதற்காக எங்கள் இல்லத்திற்கு வந்தார் அன்பர் பக்கிரிசாமி. அதுபோது அண்ணாவைப் பற்றி அவரிடம் கூறி, அரசியல் மேடைகளில் அவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமெனத் தருமாம்பாள் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அன்பர் பக்கிரிசாமி அவர்கள் அண்ணாவைப் பற்றிக் கேட்டமாத்திரத்தில், மறுநாள் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறப் போகும் கூட்டத்திலேயே பேச வைத்துவிடலாமே என்றார். உடனே தருமாம்பாள் அவர்கள் அண்ணாவை அழைத்து வரச் சொல்லி நீதிக்கட்சி கூட்ட நிகழ்ச்சியைக் கூட்டி இதில் நீயும் பங்கு கொண்டு பேசவேண்டுமெனக் கூறவே, அண்ணா சற்று தயங்கி பெருந் தலைவர்கள் பேசும் கூட்டத்தில் என்போன்ற சிறுவனைப் பேசுவதற்கு அனுமதிப்பார்களா என்ற வினாவை எழுப்பினார். அதைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். நீ கூட்டத்திற்கு தவறாமல் வந்து விட வேண்டுமென்று கூறி — பக்கிரிசாமி விடை பெற்றார்.

மறுநாள் கல்லூரி மண்டபத்தில் பெருந்திரளான கூட்டம்: மேடையிலே நீதிக் கட்சியின் முக்கியத் தலைவர்களான சர்.ஏ.ப. பாத்ரோ, சர். கே. வி. ரெட்டி, சர். முகமது உஸ்மான், சர். ஏ. இராமசாமி முதலியார் மற்றும் பல திவான்பகதூர், இராவ்பகதூர் விருதுபெற்ற தலைவர்கள் அமர்ந்திருந்தனர். தலைமை வகித்தவர் யாரென்பது நினைவுக்கு வரவில்லை. தமிழிலே திருமதி அலர்மேலு மங்கைத் தாயாராம்மாளும் வேறு இரண்டொருவருமே பேசினர். மற்ற தலைவர்களெல்லாம் கையிலே குறிப்பு வைத்துக் கொண்டு ஆங்கிலச் சொற்பொழிவுகள் பேசி முடித்தனர். இறுதியாகத் தலைமை வகித்த பெரியவர், சி. என். அண்ணாதுரை எம். ஏ., பேசுவாரெனக் கூறவே பார்வையாளர்கள் அனைவரும் மேடையையே நோக்கினர். ஆனால், அண்ணா மேடையில் இல்லை. கூட்ட மத்தியிலிருந்து குட்டையான ஓர் உருவம், அரையிலே நான்கு முழ வேட்டியும், மேலே ஓர் ஜிப்பாவும் அணிந்தவர் மேடையை நோக்கிச் சென்றார். அவர்தான் பேசப் போகும் பேச்சாளர் என யாரும் நினைக்கவில்லை. தலைவர் அருகே சென்றதும், பேசலாமாவென்று அனுமதி கேட்டார். தலைவர், "நீயா சி.என்.அண்ணாதுரை" என்று ஆச்சரியத்துடன் வினவினர். ஆம் என்றதும், பேசுவதற்கு அனுமதித்தார்.

மேடையில் அமர்ந்திருந்த பெருந் தலைவர்களெல்லாம் யாரோ சிறுவன் பேசப் போகின்றான் என்ற அலட்சியத்தில் தங்கள் நாற்காலிகளை சற்று லேசாகத் திருப்பிக் கொண்டு நண்பர்களிடம் சொந்த விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தனர். அந்நாளில் ஒலிபெருக்கிகள் கிடையாது. அண்ணா அவர்கள் தனக்கு இயல்பாக அமைந்த சுனத்த தொனியில் ஆங்கிலத்தில் சொற்பொழிவைத் துவக்கினார். கையிலே குறிப்பில்லை. பேச்சிலே தடங்கலில்லை. ஆங்கிலச் சொற்களோ சாதாரண ஆங்கிலம் படித்தவர்கள் புரிந்து கொள்ளும் சொற்களில்தான். சுருக்குக்கள் கோர்த்த அரசியல் மேதைகளும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய சுருக்குக்கள். வாக்கியத்துக்கு வாக்கியம் மக்களின் ஆரவாரமான கையொலி. கூட்டத் தலைவர் முதலில் அண்ணாவைப் பேசும்படி அனுமதித்தது பத்து நிமிடங்கள். பத்து நிமிடங்கள் ஆனதும் அண்ணா தலைவரைத் திரும்பிப் பார்த்து முடித்துக்கொள்ளட்டுமா என்றார். தலைவர் அண்ணாவை மேஜையின் மீது ஏற்றிவிட்டுத் தொடர்ந்து பேசு என்று கூறினார். பொதுமக்களும் பேசு! பேசு! என்று சத்தமிட்டனர். அலட்சியமாக மேடையிலே அமர்ந்திருந்த தலைவர்கள், மிக உன்னிப்பாக பேச்சை ரசித்துக் கேட்டனர். பேச்சு முடிந்ததும் தலைவர் எழுந்துமிகவும் பாராட்டிப் பேசிவிட்டு, 'வருங்காலப் பெருந்தலைவன்' என்று வாழ்த்தினார். அவரது அமுதவாக்கின்படி அண்ணா அகில உலகத் தலைவராளார்.

ஏழைகளின் ஒரு ராகமாலிகா

நிக்குத் தெரியாத காட்டில் திகைத்துக் கொண்டிருந்த நம்மை தீபஸ்தம்பமாக நின்று வழிநடத்திச்சென்ற அண்ணு, இன்று கல் லறைத் தொட்டிலில் கண்மூடி உறங்குகின்றார். புகழுகமாக அபூர்வ ராகங் களே இசைத்துக் கொண் டிருக்கும் வங்க கடலோ ரம், விடியாத இரவுகளே விடியவைக்க ஒரு சூரிய உதயம் அஸ்தமனமாகி விட்டது.

அறிவுலகிற்கு அடையாளம் காட்டியஅண்ணல் அண்ணு அமரர் ஆகி பல நாட்கள் உருண்டோடிவிட்டன.

ஆனல் காலத்தால் அழி யாத கல்வெட்டாக அந்த காஞ்சித் தலிவனின் நினேவுகள் நமது இதயங் களே ஆக்ரமித்து இருக் கின்றன.

அண்ணு — தமிழகத்தின் வீதி களில் வெறும் சிலேயாக நிற்கவில்லே.

அவர் நமது இதயக் கோவில் களில் சிலேயாகி நின்று சிரஞ்சிவியாகிவிட்டார்.

அண்ணு வாழும்பொழுது கோபுர கலசமாக திகழ்ந் தார்.

இன்றும் அண்ணு கோபுர கலசமாகவே திகழ்கிறார்.

அண்ணு வாழும்போது ஒரு இமயமாக வாழ்ந்தார்.

இன்றும் அவர் இமயமாகவே உயர்ந்து நிற்கிறார். காற்று மண்டலத்தைப் போல அவரின் புகழ் எங்கும் வியாபித்து இருக்கிறது.

இந்த பிரபஞ்ச பூச்செடியில் எத்தனேயோ மலர்கள் பூத்தன. இன்றும் பூத்துக் கொண்டிருக்கின்றன. எல்லா மலர்களும் மணம் பரப்பும் மல்லிகையாவ தில்லே.

எல்லா மலர்களும் மாலே யாகி மங்கள விழாக்களே அணி செய்வதில்லே.

எல்லா மலர்களும் பொன் விரல்கள் தீண்டும் பாக்கி யம் பெறுவதில்லே.

அண்ணு — ம ல் லி கை யாக இருந்து மணம் பரப்பினர்.

அண்ணு — மாலேயாகி மங்கள விழாக்களே அணி செய் தார்.

அண்ணு — பொன் விரல்கள் தீண்டிய மலராகவே புகழின் உச்சியில் வாழ்ந் தார்.

அண்ணு காலதேவன் கரம் பட்டு இன்று நிரந்தர் நித்திரையில் ஆழ்ந்துவிட் டார்.

ஆனல் அவர் சருகாகவில்லே. மண்ணோடு மண்ணகி மறைந்துவிடவில்லே.

அண்ணு — சுயமரியாதைக்கா ரர்களின் பாரிஜாத மல ராக மணம் பரப்புகிறார்.

சாமான்யம் என்று சொல் லியே சரித்திரம் படைத்த சகாப்த தலிவன் அவர்.

தென்றல் வந்து போனதற்கு சுவடு இல்லே.

ஆனல் — அண்ணுவின் பொற் பாதங்கள் பதிந்த சுவடுகள் அப்படியே பசுமையாக இருக்கின்றன.

அண்ணு — ஒரு தென்னேட்டுக் காந்தி.

வடநாட்டுகாந்தி காங்கிரஸ் இயக்கத்தின் தலிவராக வாழ்ந்தார். ஆனல் இந்த தேசம் கட்சி அரசியலுக்கு அப்பாலே அவரை தேசப் தேசப் பிதாவாக வரித்துக் கொண்டது.

தென்னேட்டு காந்தி அண்ணு வும் தி. மு. கழகத்தின் தலிவர்தான். ஆனல் அரசி யெல் விமர்சனங்களுக்கு அப்பாலே தமிழ் இன தேசிய தலிவராக அண்ணு ஆராதிக்கப்படுகிறார்.

எங்கெல்லாம் தமிழ் இனம் வாழ்கிறதோ அங்கெல் லாம் அண்ணு நடமாடும் தெய்வமாக அங்கீகரிக்கப் பெற்று இருக்கிறார்.

அண்ணு — எட்மண்ட்பர்க்கை போல பேசினர்.

அண்ணுவின் எழுச்சி முரசத் தில் டெமாஸ்தனிஸ்கள் வீணே வாசித்தார்கள்.

சுந்தர்வ கானங்கள் கூட காற் றோடு காற்றுக மறைந்தன.

ஆனல் அண்ணுவின் மாலே பிரசங்கங்கள் — ஏசுநாத ரின் மலேப்பிரசங்கத்தைப் போல பலரை ஞானஸ்நா னம் செய்தது.

அண்ணு — ஊமைகளே பேச வைத்தார்.

அண்ணு — செவிடர்களே கேட் வைத்தார்.

அண்ணு — ரோம் நாட்டு சிச ரோவைப்போல் எழுதி னர்.

அவர் — வெறும் தமிழ் எழுத் துக்களே எழுதவில்லே. நாலரைக்கோடித் தமிழர் களேயே எழுதினர்.

அண்ணு — பிரெஞ்சு நாட்டு வால்டேரைப் போல் எழு தினர்.

அண்ணு — பெரிய பெரிய எழுத்துக்களே எழுதிய எழு தாளர் அல்ல.

அவர் — கருப்பு மை ஊற்றிய பேனுக்களில் சிவப்புப் புரட் சியை சிருஷ்டித்தார்.

தமிழகத்தின் வீதிகளில் அண்ணு நடமாட வி ட் ட சந்திரமோகனும், துரை ராஜும், ஆனந்தனும், பொன்னனும், ரத்தின மும், கு மா ஸ்தாவின் பெண்ணும், பார்வதி பி. ஏ.வும், சமூக சேவகி சாருபாலாவும், ரங்கோன் ராதாவும், முன் ஜாருக்கு மேற்பட்ட மற்ற நபர் களும் அண்ணுவின் பெரும் கதாபாத்திரங்கள் அல்ல.

அவர்கள், ஷேக்ஸ்பியரும், பெர்னட்சாவும், இப்ச னும், ஹோமரும் படைத் கதாபாத்திரங்கள் பேசாத சமூக பிரச்சனேகளே பேசி யவர்கள்.

புழுதி படிந்த ஓவியமாக காட்சியளித்த விதவை தாய்மார்களின் கண் ணீரை, துடைத்த ஜீவ னுள்ள மனிதர்கள் அண் ணுவின் கதாபாத்திரங்கள்.

நீசத்தனமான மிராசு மன பான்மையை, நிலப்பிரபுத் துவத்தை, முதலாளித்து வத்தை வேரோடு அறுக்க புறப்பட்ட அக்னி புயல் அண்ணுவின் கதாபாத்தி ரங்கள்.

ஜாதியத்தை, சனுதர்மத்தை, புராண குப்பைகளே, சூற் பனேக் சுடவுள்களே மூடக் கொள்கைகளே ஆயிரம் அடி குழிதோண்டி புதைக்க புறப்பட்ட ஞான பிரசவங் கள் அண்ணுவின் கதா பாத்திரங்கள்.

அண்ணு ஒரு சகாப்தம் அல்ல. அவர் — சகாப்தங்களின் சங் கமம்.

அன்னே தமிழை காப்பதற் காக அக்னி ஆறுகளே தாண்டியவர் அண்ணு.

மன்னர்களின் மடியிலே தவழ்ந்த தமிழை மக்கள் மன்றத்திற்கு கொண்டு வந்தவர் அண்ணு.

பண்டிதர்களாலே சிறை படுத்தப்பட்டு அந்தமான் தீவின் ஆயுள் கைதியாக இருந்த தமிழை பாமரன் மத்தியிலே நடமாடவிட்ட வர் அண்ணு.

மச்ச புராணத்தையும், மகா மகாலிங்க புராணத்தை யும் படித்துக் கொண் டிருந்த மக்களே மறு மலர்ச்சியின் தொட்டி லுக்கு கொண்டு வந்தவர் அண்ணு.

பகுத்தறிவு கொள்கைகளின் வெற்றிக்காக பாலேவனங் களில் பாத யாத்திரை நிகழ்த்திவர் அண்ணு.

பொதுவுடமை பூங்காவின் நிர்மாணத்திற்காக தன் னேயே உரமாக்கிக் கொண் டவர் அண்ணு.

தமிழகத்தின் தலே எழுத்தை தமிழன்தான் நிர்ணயிக்க வேண்டும் என்றுரைத்த தமிழ் இன த் த லே வ ர் அண்ணு.

மரணப் படுக்கையிலும் மறக் காமல் மாநில சுய ஆட்சிக் காக குரல் கொடுத்தவர் அண்ணு.

அண்ணு — ஒரு ராகமாலிகா. சங்கீத ஞானத்தோடு அவரை அணுகவேண்டும்.

கிளியோபாட்ராவின் அழகை அன்டனியின் கண்கொண்டு பார்க்கவேண்டும்.

இல்லங்களேப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — கருதீர்ராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி லகைகள் கண்ணேக் கவரும் வண்ண வண்ணப்பட்டு திஜுக்கள். தாகம் தணிக்க பதநீர். கலை மிகுந்த தேன். அகமார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய். உலுக்கு உறுதி அளிக்கும் பனேவெல்லம். மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனே சோப்பு, வெள்ளே வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு. சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள். தோல் பொருட்கள். வேலேப்பாடு மிக்க மணபாண்டங்கள். இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள். பிரம்பு. மூங்கிலான பொருட்கள் மலிவு விலே தீப்பெட்டிகள். அழைப்பிதழ் அச்சிட கைக்காதிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

கதர்தீர்ராப்ட்களிலும்

மலிவு விலேயில் கிடைக்கும். வாங்கிப் பயன் பெறுவீர்! கிராமக் கைவினேஞர்களே ஊக்குவிப்பீர்!

வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

அண்ணுவின் வேடிக்கைப் பேச்சுகள்!

மெரீனு தரப்பு காரில் செல்லும்போது அண்ணு உடன் செல்லும் தோழர் களிடம் வெகுளியாகவும் வேடிக்கையாகவும் பேசிக் கொண்டே வெடிச் சிரிப்பு களே உதிரச் செய்வதுண்டு.

ஒரு தடவை ஆள் நட மாட்டமே இல்லாத பாதை யில் கார் சென்று கொண் டிருந்த போது — ''இந்த வழியில் ஆளே மடக்கித் தாக்குவாங்களாமே!'' என்று சுரோட்டி சுந்தாவிடம் கேட்டார் அண்ணு.

''அவர்கள் மடக்கி என்ன பிரயோஜனம் அண்ணு? நம்மிடம்தான் பணம் காசு இல்லேயே?'' என்று பதில் கூறியிருக் கிறார் சுந்தா.

''அட, அதனுலே தான் கேட்கறேன் பெரிய மனு ஷங்க மாதிரி சட்டை துணி யெல்லாம் போட்டுகிட்டு காரிலே வரிங்களே ஏய்யா பணத்தை எடுத்தாறலேன்னு மடக்கி ஒதைக்க மாட் டானுகளா?'' என்று கேட் டுத் தமது செங்காவிப் புன்னகையை உதிர்த்தா ராம் அண்ணு.

வாழ்வில் ஓர் திருநாள்!

முருகு சுப்பிரமணியம்

1947 — ஆம் ஆண்டு தை முதல் நாள் 'பொன்னி' இலக்கிய ஏட்டினை வெளிக் கொணரத் திட்டமிட்டு முதல் இதழில் — அறிஞர் அண்ணாவின் கட்டுரையும், புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்அவர்களின் கவிதையும் இடம்பெறும் என்று பெரி தாக விளம்பரமும் செய்து விட்டோம்.

அண்ணாவும் கவிஞரும் நேரில் ஏற்கனவே சந்தித்த போது ஒப்புதல் அளித் திருந்தனர்.

பொங்கலுக்கு இன்னும் இரண்டு வாரமே இருந்தது. அண்ணாவின் கட்டுரையும் வரவில்லை; கவிஞரின் கவிதை யும் கிடைக்கவில்லை.

என் மாமா திரு. அரு. பெரியண்ணன்-பொன்னி இத ழின் வெளியீட்டாளர். அவ ருக்கு எந்தக் காரியத்தையும் கடைசி நேரத்தில் வெற்றி கரமாகச் செய்து முடிப்பது கைவந்த கலை.அந்த நம்பிக்கை யோடு பேரறிஞர் அண்ணா வின் கட்டுரையினையும், கவிஞ ரின் கவிதையினையும் அவர் ஆற அமர எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

எனக்கோ பத்திரிகையின் முதல் இதழ், குறிப்பிட்ட நாளில் தமிழகத்தின் எல்லா ஊர்களிலும் விற்பனைக்குக் கிடைக்க வேண்டும் என்ற துடிப்பு.

திரு. பெரியண்ணன் அவர்களின் எல்லைகட்டந்த பொறுமைக்கும், என்னுடைய அவசரத்திற்கும் அடிக்கடி மோதல் ஏற்படுவதுண்டு.

நாட்கள் மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்ததால் என் னால் பொறுமையாக இருக்க முடியவில்லை, புதுச்சேரிக்கும் காஞ்சிபுரத்துக்கும் நேராகப் போய் எழுத்தோவியங்களை கையோடு வாங்கி வந்துவிடு வது என்று புறப்பட்டேன்.

நல்ல வேளையாக அன்று புரட்சிக் கவிஞரின் கவிதை புதுக்கோட்டைக்கே வந்து சேர்ந்துவிட்டது. ஐம்பது சத வீதம் வெற்றி என்று பெரி யண்ணன் நிம்மதிப் பெரு மூச்சுவிட்டார்.

அண்ணாவின் கட்டுரை யும் அஞ்சலில் வந்துவிடும்; காஞ்சிக்குப் போக வேண் டாம் என்று என்னிடம் சொல்லிப் பார்த்தார்.

எனக்கு நம்பிக்கையில்லை. நான் திட்டமிட்டபடி காஞ்சிபுரம் திராவிட நாடு அலுவலகத்திற்கு மறுநாள் காலையில் போய்ச் சேர்ந் தேன். அப்போது பொங்க லுக்கு ஒரு வாரமே இருந் தது.

அந்தச் சமயத்தில், தற் போது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவராக இருக்கும் இராம. அரங் கண்ணல் அவர்கள் திராவிட நாடு இதழில், பணிபுரிந்து கொண்டிருந்தார்.

''அண்ணாவைப் பார்க்க வந் திருக் கி றே ன். ''பொன்னி'' இதழுக்குக் கட்டுரை வாங்கிச் செல்ல வேண்டும்'' என்று அவரிடம் சொன்னேன்.

அரங்கண்ணல் கடகட வென்று சிரித்தார். அதற் குக் காரணம் இருந்தது.

திராவிடநாடு இதழி லும் பொங்கல் மலர் வேலை கள் வேகமாக நடைபெற் றுக் கொண்டிருந்தன. அந்த மலருக்காக அண்ணாவின் கட் டுரைகளை எதிர்பார்த்து, அவர் இன்னும் எழுதிக் கொடுக்கவில்லையே என்று அரங்கண்ணல் உட்பட அங்கு இருந்தவர்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த அவதியில் பொன் னிக்குக் கட்டுரை வாங்க வந்திருக்கும் என்னைப் பார்த் தும், அவர் பரிதாபமாகச் சிரித்ததில் ஆச்சரியமில்லை.

அரங்கண்ணல் சொன் னார்: ''நேற்றிரவு முழுவதும் அண்ணா எழுதிக்கொண்டி ருந்தார். இப்பொழுது தூங் கிக்கொண்டிருக்கிறார். திரா விடநாடு மலருக்கு இன்னும் ஒரு கட்டுரையைக்கூட எழுதி முடிக்கவில்லை. குறைந்தது மூன்று கட்டுரைகளை எழுதித் தருவதாக அண்ணா கூறி யிருக்கிறார். இந்த நிலையில் பொன்னிக்கு அவர் எப்படி எழுத முடியும்?''

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் எனக்குப் பெரிய ஏமாற்றமாக இருந் தது. இருந்தாலும் அண்ணா விழித்தவுடன் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு புதுக்கோட் டைக்குத் திரும்புவோம் என்று அமைதியாக இருந் தேன்.

பகல் 12 மணி சுமா ருக்கு அண்ணா விழித்தவுடன், வந்திருக்கும் தகவலை அவரி டம் சொன்னார்கள். உடனே என்னை அழைத்து வரும்படி சொல்லவே, நானும் அவரு டைய அறைக்குச் சென்று வணக்கம் தெரிவித்தேன்.

ஆரம்பத்தில் நலமெல் லாம் விசாரித்த பிறகு, நான் வந்திருக்கும் காரணத்தை வெளியிட்டேன்.

''இதுபற்றி எனக்கு நினைவே இல்லாமல் போய் விட்டது!'' என்று கூறிவிட்டு அரங்கண்ணல் அவர்களைக் கூப்பிட்டு அனுப்பினர்.

அரங்கண்ணலும் வந்து சேர்ந்தார்.

நேற்றிரவு எழுதிய கட் டுரை எங்கே என்று அண்ணா அவரிடம் கேட்டார். அது இன்னும் முடியவில்லையே என்று அரங்கண்ணல் சற்று இழுத்தார்.

''சரி ; அ தைக் கொண்டு வா. முடித்துவிடு வோம்.'' என்று அண்ணா சொன்னார். அந்தக் கட்டு ரையில் மேலும் இரண்டு பக்கம் கையோடு எழுதி, ''இது இராவிட நாட்டுக்கு எழுதியது; இருந்தாலும் பர வாயில்லை; நீங்கள் எடுத்துச் செல்லுங்கள்'' என்று என்னி டம் கொடுத்தார் அண்ணா.

என்னையே என்னால் நம்ப முடியவில்லை. அரங்கண்ணல் முகத்தைப் பார்க்கவும் எனக்கு அச்சமாக இருந்தது. பகல் உணவை அண்ணாவுடன் சாப்பிட்டுவிட்டுத் தப்பித் தோம்; பிழைத்தோம் — என்று கட்டுரையோடு புதுக் கோட்டைக்கு வந்து சேர்ந் தேன்.

பொன்னியின் முதலிதழ், ''வாழ்வில் ஓர் திருநாள்'' என்னும் தலைப்புடன் அந் தக் கட்டுரையைப் பெரு மிதத்துடன் ஏந்தி வந்தது.

அண்ணாவிடம் கட்டுரை வாங்குவது என்பது அத் துணை எளிதல்ல என்பது எல் லாருக்கும் தெரிந்த உண்மை. அவரை எழுத வைப்பது மிகவும் கடினம். அதனால் பத்திரிகைக்காரர்கள் அண்ணாவிடம் கட்டுரை பெறுவத குப் பெரும்பாலும் முயற் எடுப்பதில்லை.

ஏற்கனவே, பத்திரி யில் அல்லது புத்தகங்க வெளிவந்த கட்டுரைகளை திரும்பப் போட்டு 'அண்ண கட்டுரை எழுதியிருக்கிறா என்று பேர் பண்ணில் வார்கள்.

இந்தப் பொதுமை நி மைக்கு மாறாக அண்ணாவிட மூலக்கட்டுரை ஒன்றை பெற்று வெளியிட்ட பெருமை பொன்னியைச் சாரும்.

அண்ணா— சூது வாது இ லாத குழந்தை உள்ள படைத்தவர். வேறெரு ப திரிகை ஆசிரியராக இரு தால், தமது பத்திரிகைக் எழுதி வைத்திருந்த கட் ரையை இன்னொரு பத்தி கைக்கு அதுவும் ஒரு புதி பத்திரிகையின் முதல் இ முக்கு இத்துணை தாராளமா ஒருபோதும் எடுத்துக் கொடு திருக்கமாட்டார்.

அண்ணாவின் உள்ளம் த கம் என்று சொல்வார்க அது முற்றிலும் உண்ம என்று அன்று உணர்ந்தே அந்தக் கட்டுரையை அண்ண வின் கரங்களிடமிருந்து நா பெற்ற நாள், எனது ''வா வில் ஓர் திருநாள்'' என் கூறுவது மிகையாகாது.

எனது பத்திரிகைத் துற வாழ்க்கையில் நான் மறக் முடியாத நிகழ்ச்சி இது.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் நடத்திய ''தமிழின் பெருமை'' நாடகம் என் னால் எழுதப்பட்டது. கோவை யில் இந்த நாடகத்தை கே. ஆர். ஆர். நடத்திக் கொண்டிருந்த போது பேரறிஞர் அண்ணா அவர் களுடன் எனக்கு நெருக்க மான நட்பு ஏற்பட்டது.

அதற்கு முன்னதாகவே என்னுடைய நாடகங்கள் சில வற்றை — என்னை அறிமுகம் இல்லாமலேயே — புகழ்ந் துரைத்தவர் அண்ணா. இதை யெல்லாம் ஏதோ என்னு டைய சுய விளம்பரத்துக் காக இப்போது எழுதுவ தாக யாரும் எண்ண வேண் டாம்.

அண்ணா அவர்கள் யாரு டன் பழகினாலும் குடும்பப் பாச உணர்வுடன் பழகக் கூடிய ஒரு தந்தையைப் போல் — தனயனைப் போல்— பழகக் கூடிய ஒரு தலைவர் என்று கூறுவதற்காகவே இவற்றையெல்லாம் மீண்டும். மீண்டும் நினைந்து எழுது கிறேன்.

என்னுடைய இரண்டா வது மகள் ராதாவின் திருமண வாழ்க்கை மலர்ச்சி யாக அமையவில்லை. அள வுக்கு மீறி நிலைமை கசப்பா னதும், வேறு வழியின்றி அவள் கணவனை விவாகரத் துச் செய்ய வேண்டிய நிர்ப் பந்தம் உண்டாகிவிட்டது.

ஊருக்கெல்லாம் நீதி கூறும் கதைகளை எழுதிய என் குடும்பத்தில் இப்படி ஒரு தர்மசங்கடம் உண்டான தைக் கேள்விப்பட்ட கலை யுலக நண்பர்கள் எல்லாரும் எனக்கு ஏதேதோ ஆறுதல் கள் கூறினார்கள்.

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி மூலம் இந் தச் செய்தியைக் கேள்விப் பட்ட அண்ணா அவர்கள், என்னை கே. ஆர். ஆர். அவர் களின் வீட்டில் ஒருநாள் சந் தித்தபோது, ''ராதாவின் எதிர்காலத்தை இப்படி வெறுமை சூழ விடுவானேன்? அவளை மேற்கொண்டு படிக்க வைப்பது தானே?'' என்று கேட்டார்.

''நான்காவதோடு அவள் படிப்பை நிறுத்திவிட்டாள், இப்போது திருமணமும் ஆன பிறகு எப்படி படிக்கவைப் பது?'' என்று யோசித் தேன்.

''தனியாகப் படிக்கச் சொல்லி பரீட்சை எழுதச் செய்யலாமே!'' என்று யோசனை கூறினார் அண்ணா. அதன்படி அவளை வீட்டில் இருந்தவாறே முதலில் படிக்க ஏற்பாடு செய்தேன். ஈ.எஸ். எல்.சி., எழுதினாள். அதன் பிறகு எஸ். எஸ். எல். சி., யிலும் தேர்வடைந்தாள்.

இந்த வளர்ச்சிக்குப் பி அவளைக் கல்லூரியில் சேர்த் படிக்கச் சொன்னேன். இ போது அவள் ''எம். ஏ பட்டம் பெறுவதற்குப் படி துக் கொண்டிருக்கிறாள்.

நான்காவது வகுப்புட தன் படிப்பை நிறுத்தி ராதா — இப்போது ஒ பட்டதாரியாகி, மறுபடியு தனது பட்டப் படிப்பை தொடர்ந்து கொண்டி கிறாள் என்றால் இதற்கு ஒ தூண்டுகோலாக அமைந்த அண்ணாவின் யோசனைதா என்று எண்ணும்போது எ கள் அனைவரின் மனப்பீட நிலையிலிருந்தும் அண்ணாவி உருவை எப்படித்தான் மற இயலும்?

தந்தையாக — தனயனு எப்படி நினைக்கினும் அண் வின் உருவை எங்கள் நெஞ்ச உருவகித்து விடலாம்; ஆ தகையதோர் குடும்பப் பாச துடன் எங்கள் அறிவுக் க கனைத் திறந்தவர் அண்ணா

படிப்பவர்கள் மன நெகிழும்படி எவ்வளவோ எழுதியிருக்கிறேன்; ஆன எழுதும்போதே என் மனச நெகிழச் செய்யும் நினைவ அன்று எழுதியவர் அண்ண அவர்கள்!

திசை காட்டும் திருவிளக்கு

முரசொலி ஆயம்

செய்தியாளர் ஒருவரின் பார்வையில் அண்ணு:

தந்தை பெரியாரைவிட்டுப் பிரிந்து, திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர்—தளபதி எனும் பொறுப்புக்கூட்டுத் துறந்துவிட்டுத் ''திராவிட முன்னேற்றக் கழகம்'', அறிஞர் அண்ணு அவர்களால், 1949—ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 17ம்தேதியன்று (தந்தை பெரியார் பிறந்த நாளும் அதுவே) கொட்டும் மழையில் சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காவில் தொடங்கிவைக்கப்பட்டது!

மழையில் முளைக்கும் காளான்

ஆரம்பக் கூட்டமே மழையால் ''கலகலப்பு'' இல்லாமல் போய்விட்டது! பெரியாரை எதிர்த்து கட்சி நடத்த முடியுமா? பெரியாரை எதிர்த்தவர்கள் எல்லாம், இருந்த இடம் தெரியாமல் எங்கோ மூலையில் கிடக்கின்றனர்! ஏதோ மழையில் முளைக்கும் காளானைப் போல் சீக்கிரமே பட்டுப் போய்விடும்!' என்றெல்லாம் அண்ணுவின் எதிர்கால அரசியல்பற்றிச் சிலர் ஆரூடம் கணித்து, அகமகிழ்ந்தனர், அப்போது!

நேர்த்தியும் கீர்த்தியும்!

ஆனால்...? அண்ணுவின் அரசியல், நேற்று முளைத்த மழையில் தோன்றி, நாளை பட்டுப் போகும் காளானுக்கு பட்டுப் போய்விடவில்லை. தமிழினத்தின் தன்மானத் தந்தை பெரியாரின் கொள்கைப்படிக் கோட்டையில் கோலோச்சிப் பெரியாரின் பெரும் பாராட்டினைப் பெற்றிடும் நேர்த்தியையும் கீர்த்தியையும் பெற்றிருக்கின்றது! ஏன்? எதனால்?

அண்ணு அப்படியல்ல

தந்தை பெரியாரைச் சில பல்ர் எதிர்த்துக் கட்சி நடத்த முடியாமல் மூலையிலே முக்காடிட்டுக்கொண்டு ஒய்ந்து விட்டனர் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுக்கும் அறிஞர் அண்ணுவுக்கும்பெருத்த வித்தியாசம் உண்டு.

பெரியாரைப் பயன்படுத்திப் பட்டமும் பதவியும், பகட்டானவாழ்வும்வசதியும் பெற்றிட முனைந்தவர்கள், பெரியாரின் சீரிய கொள்கையில் பற்றும் பாசமும் அற்றவர்கள், பெரியாரைத் தலைவராக மதித்து அவரிடம் ஈடுபாடு கொள்ளாதவர்கள் தாம், பெரியாரை எதிர்த்துப் புறமுதுகிட்டு, தோல்விகண்டு துவண்டனர். ஆனால் அண்ணு அப்படியல்ல!

குருவுக்குப் பெருமை

அண்ணு அவர்கள் பெரியாரை ஒருபோதும் எதிர்க்க வேயில்லை. இயக்கத்தின் நடைமுறைகளில் சிலபல கருத்துவேறுபாடுகளோத்தான் சிறிலை சமயம் இம்மாதிரி காயாக, மிகுந்த நாகூக்குடன் வெளிப்படுத்தி வந்தார். பெரியாரின் கொள்கைகளை நாட்டில் பரப்பி வேரூன்றச் செய்திடப் பெரியாரைவிடப் பக்குவமாக—ஆனால் உறுதியாக முனைந்து செயல்பட்டார் அண்ணு! அதில் வெற்றியும் கண்டார். பெரியார் தான் என்றும் அண்ணுவின் தலைவர். அவர்தாம் அவரது பிரதம சீடராக விளங்கினார், வாழ்ந்தார்! அதனால் அண்ணு அவர்கள் குருவையும் மிஞ்சிய சீடரானர்—குருவுக்குப் பெருமை தேடித்தந்தார்.

போட்டிதான், போர் அல்ல!

கால்பந்து, கைப்பந்து, கிரிக்கெட் முதலிய விளையாட்டுக்களில் பங்கேற்கும் இரண்டு குழுக்களுக்குமிடையில் ஏற்படும் போட்டா போட்டி உணர்வுதான் இரு கழகங்களுக்குமிடையில்இருக்கும்! காரியமாற்றுவதில் போட்டிதானே தவிர, ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடுவது அல்லவே. அல்ல என்றும் அண்ணு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாவில் பேசும் போது விளக்கினர்.

''திராவிட முன்னேற்றக் கழகம்'' திராவிடர் கழகத்தின் கொள்கைகளைக் கடைப் பிடிக்கும்; முன்னேறச் செய்யும். நடைமுறைபடுத்தும், மிகவும் பக்குவமாக! சமயத்தில் மூடநம்பிக்கைகளைத் தகர்ப்பதில் இருகழகங்களும் ''இரட்டைத் துப்பாக்கியாகவும் செயல்படும் நிலைமை ஏற்படும்'' என்றும் அறிஞர் அண்ணு அவர்கள் உறுதி தெரிவித்தார்.

உருவகங்கள் பலப்பல

திராவிடர் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருந்திடும் ஒட்டு, உறவு, பற்று பாசம் என்ன? எப்படியெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படும் என்பதனையும் அண்ணு அவர்கள் தி.மு. கழகத் தொடக்க விழா உரையில் பலப்பல உருவகங்கள் மூலம் தெளிவு படுத்தினர்!

அத்தர் கடை வைக்கிறேமே தவிர, தண்ணெய்க் கடை அல்ல!

அத்தர் கடைதான், இருகழகங்களும்! ஆனால் எண்ணெய்க்கடையிலோ, கடலை, தேங்காய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் என்று மாறுபட்ட, ஏன் முரண்பட்ட வகைகளும் உண்டு. ஒன்றுடன் ஒன்று கலந்தால் தரம் மாறும், குறையும். விளக்கெண்ணெய் கலந்தால் வீணாவும் விபரீதமாகிவிடும். எனவே புதிய அத்தர் கடை, திராவிடர் கழகக் கொள்கைகளைப் பரப்பும் பல்வகை அத்தர் விற்பனை செய்யும் கடைதான் திராவிட முன்னேற்றக்கழகமாகும். இது அண்ணு உருவகம்!

தண்ணீரும் பன்னீரும்

பன்னீருடன் தண்ணீர் கலப்பது போன்றுதான், திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக்கழகமும் செயல்படும் முறை இருக்கும். ஆனால், தண்ணீரும் இளநீரும் கலப்பது போன்றது அல்ல!

அப்பட்டமான பன்னீரை தெளித்தால், வாசனையை இனிமையாக நுகர முடியாது, நெடி வீசும்! பன்னீருடன் தண்ணீரைக் கலந்து தெளிக்கும் போது ஏற்படும் மனோகரமான மணத்தில் இலயிக்காதார் எவர்?

இளநீருடன் தண்ணீரைக் கலந்தால் இளநீரின் சுவை குறையும். சப்பிட்டுப் போய் விடும்! ஆனால் பன்னீருடன் தண்ணீர் கலந்தால் பன்னீரின் மணம் ஒவ்வொரு சொட்டிலும் இரண்டறக் கலந்து விடும்! அது மட்டுமா? பன்னீரின் மணம், மேலும் நறுமணமாகப் பரிமளித்துப் பரவிடுமன்றே?

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது திராவிடர் கழகக்கொள்கையெனும் பன்னீரை, நறுமணமாகப் பரிமளிக்கச் செய்து பரப்பிடும் தண்ணீராகத்தான் செயல்படும். இளநீரின் சுவையைக் கெடுக்கும் தண்ணீராக ஒருபோதும் இயங்கவே இயங்காது.

இப்படியொரு ஒருவகத்தையும் அண்ணு அவர்கள் இரு கழகங்களைப்பற்றி அந்த நாளில் குறிப்பிட்டார்.

ஒட்டு மாஞ்செடி!

இசைக் கச்சேரியில் சிறந்த மிருதங்க வித்வானும் கடவித்வானும் தனி ஆவர்த்தனம் வாசிக்கும் போது, இருவரும் ஏதோ பெரிய சண்டையில் ஈடுபடுவது போலத் தோன்றும். கச்சேரி ரசிக்கத்தான், தனி ஆவர்த்தனமே தவிர, வித்வான்களுக்குள் சண்டை ஏதுமல்ல! அதுபோலத் தான் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை எனும் இனிய கீதம் நாடெங்கும் பரவிட, இரு கழகங்களும் தனி ஆவர்த்தனத்தில் ஈடுபட்டுள்ளன!

மாஞ்செடிகளில் இரு வகைகளை ஒட்டுவித்து, புதிதாக மேலும் நல்ல உருவும் சுவையுமுள்ள மாங்கனிகளை உற்பத்தி செய்கிறோம். இதனை ஒட்டு மாஞ்செடி, ஒட்டு மாம்பழம் என்கிறோம். மாவகைகள் ஒட்டி, பலரும் விரும்பிடும் புதிய உருவும் சுவையும் பயனும் படைத்த ஒட்டு மாங்கனி தந்திடும் ஒட்டு மாஞ்செடியாகத்தான் திராவிட முன்னேற்றக்கழகம் உருவாகி உள்ளது.

இரு கழகங்களைப் பற்றிய அண்ணுவின் உருவகங்களில் இவைகளும் அன்று இடம் பெற்றன!

ஆலின் விழுதும் வாழைக்கன்றும்

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ''ஆலுக்கு விழுதேயன்றி, வாழைக்குக் கன்றல்ல!'' எனும் அண்ணுவின் அன்றைய உருவகப் படைப்பு எத்தனை தீர்க்க தரிசனமானது என பதைஎன்றும் எண்ணியெண்ணிப் பெருமிதப் படுகின்றேன்.

ஆலமரத்தில் புதிதாக விழுதுவிட்டால், அதனால் தாய் மரத்திற்குக் கேடு விளையாது. விழுது வளர்ந்து பூமியைத்தொட்டு,வேரூன்றி தாய் மரத்தைத் தூணைத் தாங்கி நிற்கும். பல்கிப்பரவி இளைத்து செழித்திட வாய்ப்பாக அமைந்திடும்.

வாழைமரத்தின் கீழே புதிதாக வாழைக்கன்று தோன்றுகிறது. வாழைக்கன்று, துளிர்த்துத் தழைத்துப் பூத்துக்காய்த்திடும் வாழைமரமாகும் போது நடப்பது என்ன? தாய்மரம், வெட்டப்பட்டு விடுகிறது! இது தவிர்க்க முடியாதது! தாய்மரம் வெட்டப்பட்டால்தான். வாழைக்கன்று தழைத்தோங்க முடியும் என்பது நடைமுறையாகிவிட்டிருக்கின்றது. கன்று தோன்றி தாய் மரத்தை அழித்தே விடுகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகமெனும் ஆலமரத்தின் விழுதாக, தாய்மரத்தைத் தாங்கி நிற்கும். அதன் கொள்கைகள் நிலைத்து நின்று, பல்கிப் பரவிக் கிளைத்துச் செழித்திடத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும். அதேசமயம் தாய்வாழை மரத்தையே தகர்த்து அழித்திடச்செய்யும் வாழைக்கன்றாக ஒருக்காலும் விளங்காது.

''ஆலுக்கு விழுதேயன்றி வாழைக்குக் கன்று அல்ல!''

பெரியாருக்கும் தமக்கும் உள்ள பிடிப்பினை இத் தூணை அழகாக அறிஞர் அண்ணு உருவகப்படுத்திக் காட்டினர்.

உருப்பட வைக்கும் அர்ச்சனை

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட போது, தந்தை பெரியார் அவர்கள் அண்ணுவையும், அவர்தம் வழிநடந்த கலைஞர், நாவலர், பேராசிரியர், சிந்தனைச்சிற்பி, மதியழகன், என்.வி.நடராசன் முதலியவர்களையும் பலபடத் தாக்கிப்பேசியும் எழுதியும் வந்தார்கள்.

பெரியாரின் தாக்குதல்களை அண்ணு அவர்கள் அவருக்கே உரித்தான தண்தமிழில் ''உருப்படவைக்கும் அர்ச்சனை'' என்றுதான் குறிப்பிட்டார்.

தந்தையும் தனயனும்

பெரியார் நமது தந்தை! தமிழினத்தின் தன்மானத் தந்தை! அவரது தனயர்கள்தாம் நாமெல்லாம். நமது தந்தை, நம்மை யெல்லாம்நல்லபடி ஆளாக்கி உருவாக்கி விட்டிருக்கிறார். அதேநேரத்தில் தந்தைப் பாசத்துடன், எப்போதும் மகனைப் பரிவுடன் தமது கட்டுக்கோப்பில், கெடுபிடியில் நடத்தி வருகிறார்! அதுமட்டுமல்ல, நம்மை ''உருப்படாதவர்கள்'' என்றும் அடிக்கடி அர்ச்சனை செய்தும் வருகிறார். இந்த அர்ச்சனை நம்மை நன்கு ''உருப்பட''வைக்கும் அர்ச்சனைதான்! விருப்பின்விளைவே தவிர, வெறுப்பின் வெளிப்பாடு அல்ல என்றார் அண்ணு!

கற்பனைக் கதையல்ல!

ஒரு தந்தை தனது மகனை ஒயாமல் 'உருப்படாதவன்' என்று அர்ச்சித்து வந்தான். மகனுக்கும் சுயமரியாதை உணர்வு இல்லையா? ஒருநாள் ''நான் உருப்பட்டுக் காட்டுகின்றேன்'' என்று உறுதி பூண்டு, தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு, தனிக் குடிசையில் வாழத் தொடங்கினான்.மகனைப்பிரிந்த ஆற்றுமையால் தந்தை வீசிய கடுஞ்சொல், அக்கம்பக்கத்தாரின் ஏளனம், ஏசல், பூசல் ஆகியவற்றை எல்லாம் அந்தப் பிரிந்து சென்ற மகன் பொறுமையோடு தாங்கிக் கொண்டான். தந்தை பெரிதும் மெச்சிடும் வண்ணம் உருப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே, தன்வீட்டுப் பெரியவரின் வாழ்வையே தூணாகக் கொண்டு விடாமுயற்சியுடன் பாடுபட்டான். நாளடைவில் வீடும் நாடும் மெச்சிடும் வண்ணம் உயர்வடைந்தான்—உருப்பட்டான். ஒருநாள் தந்தையின் முன் சென்று நின்றான். ''என்மகன் நல்லா உருப்படுவான்'' என்று எனக்கு அன்றே தெரியும்'' என்று மகனை அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார் அவனது தந்தை. இது கற்பனைக்கதையல்ல. தமிழகத்துக் குடும்பங்களில் நடைபெறும் நிகழ்ச்சிதான்.

பெரியாருக்குப் பெரும் பரிசு'

தந்தை பெரியாரை விட்டுப் பிரிந்த நாம், என்றும் பெரியாரின் பிரியத்திற்குரிய பிள்ளைகள்தாம்! எல்லோரும் எனது தம்பியரே! பெரியாரும் மெச்சிப் பூரித்து மகிழ்ந்திடும் வண்ணம், பெரியாரின்வழியில்,ஆலுக்கு விழுதாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காப்போம்! நமக்கும் ஒரு காலம் வரும் — அந்த நல்ல காலத்தை — பெரியாரும் பெருமிதப்பட்டுக் கொள்ளும்படி உருவாக்குவோம்! பெரு வெற்றிக்கொடியினை நாட்டுவோம்!

பெருவெற்றி, தன்மானக் கொள்கையின் தனிப்பெரும் வெற்றிக் கனியுடன், ஒரு நாள் தந்தை பெரியார் முன் செல்வதைதான் போகிறேன். தண்டனிட்டு, வெற்றிக் கனியினைத் தந்தை பெரி

யாருக்குப் பரிசாக அளிக்கத்தான் போகிறேன்! அப்போது "பயல்கள் பரவாயில்லே! எம்பேரைக் காப்பாத்திட்டாங்க!" என்று தந்தை பெரியார் பெருமிதப்பட்டு ஆனந்தக் கண்ணீர் வடிப்பதைக் கண்டு களிக்கத்தான் போகிறேன். அந்த நாளை நோக்கி நடப்போம் என்று இராபின்சன் பூங்காவில் அறிஞர் அண்ணா அவர்கள் சூளுரைத்து நடக்கத் தொடங்கினர், திராவிட முன்னேற்றக் கழகத்தை இயக்கத்தொடங்கினர்.

கான்சர் விழிப்புணர்வு

ஒரு ஆண்மகனின் உடல், மன வளர்ச்சிக் கட்டத்தைக் காளைப் பருவம் என்பர். பதினெட்டு வயதினை எட்டிப் பிடித்தவனைக் கட்டிளங் காளை எனக் கூறிப் பெருமிதப்படுவர்.

1949-ம் ஆண்டு தொடங்கப் பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் படிப்படியாகவளர்ந்து பல்வேறு கட்டங்களைத் தாண்டியது. 1967-ம் ஆண்டு பதினெட்டாம் ஆண்டு கட்டிளங் காளைப் பருவத்தை எட்டியது — தமிழ் நாட்டின் தனிப் பெருங் கட்சியாக, ஆளுங் கட்சியாகப் பரிமளித்தது. தமிழாய்ந்த தமிழ் மகன் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தனிக் கழகம் கண்டு, பதினெட்டு ஆண்டுகளில் தன்மான ஆட்சியை கட்டிளங் காளையான திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக் கனியை, பெரியாருக்குப் பெரும் பரிசாகப் படைத்தார், அண்ணா!

நிறைகுடம் ஏந்திய நிறை கர்ப்பிணி

எடுத்த காரியத்தினை தொடுத்து முடித்து வெற்றி கண்டிட நிதானம் தேவை! எப்படிப்பட்ட நிதானம்? "நிறைகுடம் ஏந்திய நிறை கர்ப்பிணியின் நடையில் உள்ள நிதானம் நமக்குத் தேவை" என்று அண்ணா அவர்கள் அறிவுரை கூறி வந்தார்.

எத்தனையோ இக்கட்டான கட்டங்களிலும், ஏறுமாறான சூழ்நிலைகளிலும், கட்டுக்கடங்காத ஏசல், பூசல்களுக்கு இடையிலும், நிறைகுடம் ஏந்திய நிறை கர்ப்பிணியின்நடையிலுள்ள நிதானத்துடன் தி. மு. கழகத்தினை அறிஞர் அண்ணா அவர்கள் வழிநடத்திவந்தார். அதன் விளைவு! தன்மான அரசு எனும்பிள்ளைக் கனியமுதினைப் பெரியாருக்குப் பரிசாகப் பெற்றுத் தந்தார். பெரியாரின் பிரதம சீடராக, பெரியாரின் பூரிப்பிற்கும் பெருமிதத்திற்கும் உள்ளான பெருமகனைப் பரிமளித்தார், அண்ணா.

அணையா விளக்கு!

அண்ணா அவர்கள் நடமாடும் திருவுருவாய் நம்முன் இல்லாவிடினும், அவர்தம் எண்ணங்கள் என்றும் நமக் கெல்லாம் வழிகாட்டும்.

வங்கக் கடற் கரையில், அண்ணாவின் சதுக்கத்தில், 'அணையா விளக்கு!' அண்ணாவின் அறிவொளியை, அன்பொளியை, அவர்தம் குடும்ப பாசத்தின் பேரொளியைத் திக்கெட்டும் பரப்பித் திசை காட்டும் கலங்கரை விளக்கு! அண்ணாவின் இதயத்தின் 'இதத்தை' தம்இதயத்தில் ஏந்தி நமையெல்லாம் வழி நடத்தும் அண்ணாவின் நல்லதம்பியாம் கலைஞர் ஏற்றிவைத்திட்ட திருவிளக்கு! தெளிவுட்டி நல்வழி நடத்தும் என வாழ்வோமே!

நினைவலைகளில் அண்ணா

வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

நம் வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழகத்தின் விடிவெள்ளி பேரறிஞர் அண்ணா, நம் பிறந்த மண்ணில் பழம் பெரும் வரலாற்று ஏடுகளை புரட்டி நமக்கெல்லாம்காட்டி, நம் சுவனங்களை அத்திசைக்கு ஈர்த்தவரும் அண்ணாவே. பள்ளிப் பருவத்தில் இருந்த நான், கழகத்தின் பால் பற்றுக்கொண்டு பணியாற்றிக் கொண்டிருந்த நான், பூலாவரி ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்று இருந்தேன். ஊராட்சி மன்ற அலுவலகத்துக்கு அழகான கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. இந்த கட்டிடத்தைத் திறந்து வைக்க அண்ணா அவர்களிடத்தில் ஒப்புதல் பெற்று விளம்பரங்கள் செய்யப்பட்டது.

1961—ம் ஆண்டு இறுதியில் சம்பத் கழகத்தைவிட்டு விலகிய மறுநாள் எங்கள் ஊராட்சிமன்ற கட்டிட திறப்பு விழா நிகழ்ச்சி. பேரறிஞர் அண்ணா மாநிலம் முழுதும் உள்ள தன் சுற்றுப்பயணங்களை ரத்து செய்து விட்டு, என் நிகழ்ச்சிக்கு வருகை தந்தார். அண்ணாவைக் காண சேலம் மாவட்டத்திலும், மற்றும் வேறுபல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான தோழர்கள் கூடி விட்டனர். அண்ணா சரியாக மாலை 4 மணிக்கு பூலாவரிக்கு வந்தார்.

அண்ணா பேசும்போது குறிப்பிட்டார், "தம்பி ஆறுமுகம், இளைஞர். இவருக்கு எதிர்காலம் உண்டு என்று பாராட்டிவிட்டு, என்னை வீட்டுப் பிரிந்து சென்ற தம்பிகள் இந்த வீட்டிற்குள் என்றைக்கும் வரலாம். கதவு திறந்தே இருக்கும்"

இந்தக் கருத்து மழையை பூலாவரியில் அண்ணா பொழிந்தது இன்னும் என் நெஞ்சில் பசுமரத்தில் அடித்த ஆணி போல் பதிந்துள்ளது.

தொடர்ந்து 1962—ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வீரபாண்டி தொகுதியில் என்னை கழக வேட்பாளராக அண்ணா அறிவித்தார்கள். தேர்தல் பிரச்சாரத்திற்காக என் தொகுதியில் உள்ள ஆட்டையாம்பட்டிக்கு மாலை 6 மணி அளவில் அண்ணா பேசுவதாக அறிவிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டனர்.

இரவு பூராவும் அண்ணா வரவில்லை. அண்ணா பேச்சை கேட்க வந்த மக்கள் மைதானத்திலேயே படுத்துத் தூங்கி விட்டார்கள்.

அண்ணா விடியற்காலை 4மணிக்கு வந்து மேடை மீலே உட்கார்ந்து கொண்டு, மேடையில் தூங்கிய ஒலி பெருக்கிக்காரரை எழுப்பி, தாம் வந்து விட்டதாக அறிவிக்கச் செய்தார்.

உடனே தூங்கியவர்கள் அனைவரும் "அண்ணா வாழ்க" என்ற கோஷத்துடன் எழுந்து அந்த நேரத்திலும் ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் அண்ணா பேச்சை கேட்டனர்.

அண்ணாவுக்காக முதல் நாள் தயாரித்து வைத்திருந்த உணவு மருளையாம் பாளையம் கிளைக்கழகக் கட்டிடத்தில் விடியற்காலை 5.30 மணியளவில் பரிமாறப்பட்டது.

சாப்பிட்டுவிட்டு தேர்தல் பிரச்சார கடைசிநாளான அன்று சென்னை கடற்கரை கூட்டத்தில் பேசப் போகிறேன் என்று சொல்லிவிட்டு காரில் சென்னையை நோக்கிப் பயணமானார்.

அன்று கடற்கரையில் நடந்த கூட்டத்தில் பேசும் போது கூட ஆட்டையாம் பட்டியில் நடந்த உபசரம் பற்றி அண்ணு குறிப்பிட்ட தாகஅறிந்த எங்கள் உள்ளம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது?

1962 தேர்தல் முடிவு கழகத் தோழர்களாகிய நமக்கெல்லாம் வேப்பங்காயாக கசந்தது.

காரணம், அண்ணு அவர்கள் காஞ்சியில் தோற்கடிக்கப்பட்ட செய்தி. நமது கழக சட்டமன்றஉறுப்பினர்கள் எல்லாம் சென்னை அழைக்கப் பட்டு அண்ணுவால் பாராட்டப்பட்டனர். அண்ணு அவர்களுடைய திருக்கரத்தால் திருவள்ளுவர் புத்தகம் வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுச் கொண்ட நிகழ்ப்பு என் நினைவுகளில் என்றும் நீங்காத ஒரு நிகழ்ச்சியாகும்.

1965-ம் ஆண்டு தர்மபுரி இடைத் தேர்தலுக்காக தேர்தல் நிதி திரட்ட என்னுடைய தலைமையில் சேலம் நகரத்தில், சிறப்புக் கூட்டம் நடைபெற்றதையும் அந்தக் கூட்டத்தில் நான் பேசியதற்கு பதில் கொடுத்து, அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலத்திற்கு எதிர்க் கட்சியாக இருப்பவர்கள், ஆளுங்கட்சியாக வருவதற் காகத்தான் கொள்கையை வைத்து மக்களிடத்திலே ஆதரவைத் திரட்டுகிறோம் என்று தைரியமாக சட்ட சபையிலேயே தெரிவிக்க வேண்டும் என்று பேசிய பேச்சுக்கள், அன்றைய சம் பவங்களை இன்னும் நினைத் தால், அண்ணு பேசிக்கொண் டிருப்பதாகவே நினைவுக்கு வருகிறது.

தர்மபுரி இடைத் தேர் தலில் எனக்கும், காலஞ் சென்ற முன்னாள் வேளாண் மைத்துறை அமைச்சர் அண் ணன் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பகுதியான நள்ளம்பள்ளி, தொப்பூர் பகுதியில் தேர்தல் அலுவலகத்தில் அண்ணு உட் கார்ந்துக் கொண்டு வெற்றி வாய்ப்பு நமக்கில்லை என் பதை தெரிந்தும் சுவைபட பேசிய பேச்சுக்கள் காலத் தாலும் மறக்க முடியாத ஒன்று.

1966ம் ஆண்டு இறுதியில், நான் வீரபாண்டி ஊராட்சி ஒன்றிய குழுத்தலை வராக இருந்த மன்றத்தில் அண்ணுவுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டபோது, வரவேற்பைபெற்றுக்கொண்ட அண்ணு எனக்கு கொடுக்கப் பட்டவரவேற்பை விட மகிழ்ச்சி தருவது என் தம்பிகளில் ஒருவரான ஆறுமுகம் இந்த மன்றத்தின் தலைவராக இருப்பதுதான் என்று பேசிய பேச்சு நிந்தனையை தூண்டக் கூடியதாகும்.

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை என்றும், வேறு ஒருவரை என் தொகுதியில் நிறுத்துங்கள், வெற்றி பெறச் செய்கிறேன் என்றும் கடிதம் மூலமாக அண்ணுவுக்குத் தெரியப்படுத்தினேன்.

இதைப் பார்த்த அண்ணு கிருஷ்ணகிரியில் நடைபெற்ற கழக மாநாட்டை முடித்துக் கொண்டு சென்னை செல்ல வேண்டிய அண்ணன் ஏ. கோவிந்தசாமி அவர்களை அழைத்து, சேலம் சென்று ஆறுமுகத்தைப் பார்த்து, அண்ணு கட்டளை என்று தேர்தல் வேலைகளை கவனிக்கச் சொல் என்று அண்ணன் ஏ. கோவிந்தசாமியிடம் சொல்லி அனுப்பியிருந்தார்.

விருகம்பாக்கம் மாநாட்டில் என் பெயரை அறிவிக்கவும் செய்தார். அந்தப் பரந்த உள்ளத்தில் எப்படிப்பட்ட நினைவுகள் அன்று தோன்றியிருக்கும் என்று என்னால் நினைக்க இயலவில்லை.

கடைசியாகஒன்றைதெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு சேலத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, சென்னை மருத்துவமனையில் இரண்டாம் வகுப்பு வார்டில் நான் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறேன். பேரறிஞர் அண்ணு அவர்கள் உடல் நிலை பாதிக்கப் பட்டு அதே பகுதியில் உள்ள 'ஏ' வார்டில் தனி அறையில் அனுமதிக்கப்பட்டார்.

கொடுமையான அந்த வியாதி அண்ணுவின் உயிரோடு,போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது.

தகுந்த சிகிச்சை செய்ய அமெரிக்காவிற்குச் செல்ல வேண்டும் என்று மருத்துவர்கள் முடிவு செய்து,கலைஞரும் அண்ணனைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கு இசைவு கொடுத்து அந்த நேரத்தில்அண்ணுவைப்பார்க்கஅவர் தங்கியிருந்த அறைக்குச் சென்றேன். மூக்கு வழியாக ரப்பர் குழாய் உடலுக்குள் செலுத்தப்பட்ட நிலையில் உட்கார்ந் திருந்தார். உள்ளே சென்ற என் மீது அவருடைய அகம் விரிந்த பார்வை நோட்டமிட்டதை நினைத்தால் மறக்க இயலுமா?

1959 — ம் ஆண்டில் சென்னை மாநகராட்சி, கழகத்தின் வசமான பிறகு தான் ரிப்பன் கட்டிடத்துக்குள் முதன்முதலாக அண்ணு நுழைந்தார். ஏன் தெரியுமா?

சென்னை மாநகராட்சி, கழகத்தின் கைக்கு வரும் முன்பாக நகராட்சி ஊழியர்கள் தங்கள் தொழிற் சங்கத்தின் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அண்ணுவை அழைத்தனர்.

அண்ணுவும் வருவதாக ஒப்புக் கொண்டார்.

சில நாட்கள் கழித்து அந்தத் தோழர்கள் சிலர் கண்ணீரும் கம்பலையுமாக அண்ணுவிடம் வந்து, "எங்களை மன்னிக்க வேண்டும் அண்ணு. நாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு முயற்சிகள் பல எடுத்துத் தங்களைப் பேச வைக்க வேண்டும் என்று எண்ணினோம். ஆனால், மேலதிகாரிகள் அதற்கு அனுமதி தரமாட்டோம் என்று கடுமையாக எச்சரித்துள்ளனர்" என்று கூறினர்.

அன்றையதினமே அண்ணு அவர்கள், "அப்படிப்பட்ட நகர் மன்றம் நமது தோழர்களால் அணிசெய்யப் படும் வரையில் நான் சென்னை மாநகராட்சிக் கட்டிடத்துக்குள்ளேயே நுழைவதில்லை!" என்று உறுதி ஏற்றார்.

கலைஞரின் அயராத உழைப்பு!

1959 — ல் கலைஞர் அவர்களின் அயராத உழைப்பினால், சென்னை மாநகராட்சி கழகத்தின் வசமானது.

இதற்காக அண்ணு, தம் கைப்பட கலைஞருக்கு ஒரு மோதிரத்தையும் அணிவித்துப் பாராட்டியது குறிப்பிடத்தக்கதாகும். கடைசி நிமிடம் வரையில் இப்படி கலைஞரை அண்ணு பாராட்டப் போவது எவருக்குமே தெரியாது

அண்ணாவோடு பாரதி எப்போதும்!

புதுக்கோட்டை பெரியண்ணன்

தும்பிலி நிறைந்து, நமது ஆக்கபணிகளுக்கெல்லாம் உறு துணையாக, வழிகாட்டியாக திற்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் பழக நேரிட்ட போதெல்லாம் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பலப்பல; அவை ஒவ்வொன்றும் எதிர் காலத்தில், கழகமும், அதன் தொண்டர்களும் எப்படிப் பணியாற்ற வேண்டுமென்று பறைசாற்றிக் கொண்டுள் ளன; அதிலும் கழகமும் அதன் தாணைத் தலைவர் தலைஞர் அவர்களும், மற்றத் தலைவர்களும் என்போன்ற அதன் லட்சோபலட்சம் தொண்டர்களும் ஏழை எளிய மக்களின் வாட்டத் தை நலிவைப் போக்கி அவர்களுடைய மேம்பாட்டுக் காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு நிற்கிறார்கள் என் பதற்குச் சான்றுள நிகழ்ச்சி களே ஏராளம்.

இதன் தொடர்பாக அண்ணா அவர்கள் கலந்து கொண்ட ஒரு பொது நிகழ்ச்சியில் நடைபெற்ற ஒன்றினை நினைவுகூர்வது சால வும் பொருந்தும்.

1967-ல் ஆலங்குடியை அடுத்துள்ள வெட்டன் விடுதி என்கின்ற கிராமத்தில் அப் பகுதிவாழ் மக்களின் நீண்ட கோரிக்கையாக இருந்த உயர் நிலைப்பள்ளியை ஆரம்பிக்க விழா ஏற்பாடாகியிருந்தது; அண்ணா அவர்கள் கல நிகழ்ச்சிகளில்கலந்து கொண்டு விட்டு வெட்டன்விடுதி விழா விற்கு வந்தார்கள். விழாப் பந்தலில் கூட்டம் வழிந் தோடியது. நாற்காலிகள் போடப்பட்டு பல முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள் முன்புறம் அமர்ந்திருந்தனர்;

அண்ணா அவர்களைக் காண அப்பகுதியின் அரிசன மக்கள், தாய்மார்கள் மற்றும் சுத்தல் உடையுட னும், நலிந்த நிலையிலும் காட்சியளித்த பலர் மேடை யின் இடப்புறத்தில் வெயி லில் நின்றனர். அண்ணா அவர்கள் மேடையை நெருங் கியதும் இவர்கள் முண்டி யடித்துக் கொண்டு ஆரவார மாக நின்றார்கள்.

மேடையில் ஏறிய அண்ணா அவர்கள் முதலில் அவர்கள் பக்கம் திரும்பி அவர்கள் நன்கு பார்க்கும் படியாக மேடை மறைவுத் தட்டியை அப்புறப்படுத்த செய்து அவர்களின் பால் கையை அசைத்து அவர்களு அன்பினை ஏற்று அமர்ந் தார்கள்;

பின்னர் நிகழ்ச்சியில் அண்ணா அவர்கள் பேச ஆரம்பித்த போது முதலில் இடப்புறம் நின்றிருந்த மக் களைப் பார்த்து "என்னைக் காண ஆவலோடு வெயிலை யும் பொருட்படுத்தாது நிற் கின்ற உங்களைக் காண நான் பெருமகிழ்ச்சியும் புத்துணர் சியும் அடைகின்றேன்; என் வருகையால் உங்களுக்கு நன்மையெல்லாம் வந்து விட்டது போல் மகிழ்ச்சி கடலில் ஆழ்ந்துள்ளீர்கள்;

ஆம்! உங்களது வறுமை யை, வாட்டத்தைப் போக்கி உங்களுக்கு வளமான எதிர் காலத்தை உருவாக்க நாங் கள் சூளுரைத்து அரசுப் பொறுப்பேற்றுள்ளோம்.

நாங்கள் உங்களது கஷ் டங்களைப் புரிந்துக் கொண்ட வர்கள் மட்டுமல்ல. நாங் களும் உங்களைப் போன்ற வர்களே. எங்கள் பணி உங்களுக்காகவே தொடங்கப் பெற்றுள்ளது என்று அவர் கள் பக்கம் பார்த்து பேசி விட்டுத்தான் விழாவில் தொடர்ந்து பேசினார்கள்.

மாமேதை அண்ணா அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் நமக்கு முன்னோடியாக அமைந்தவை என்றாலும், எந்நிலையிலும் அவர்கள் ஏழைக்காகவே வாழ்ந்து—என்றும் கழகத்தின் பணி இந்நாட்டின் ஏழை எளிய மக்களின் துயர் துடைத்து அவர்களை மேம் படுத்துவதற்குத்தான் அர்ப் பணிக்கப்பட்டுள்ளது என் பதை அவர்களது வாழ்நாள் முழுவதும் எடுத்துரைத்தார் கள் எனச்சொல்லி அண்ணா வின் அடிச்சுவட்டிலே என் போன்ற லட்சோபலட்சம் தொண்டரது பணி யையும் வழிபடுத்தி தாழ்த் தப்பட்ட எளிய மக்களின் வறுமையைப் போக்குவதை யே உயிர் மூச்சாகக் கொண்டு பணியாற்றும் நமது தாணைத் தலைவர், கலைஞர் அவர்களின் ஆணையை உயிரினும் மேலா கக் கொண்டு நிறைவேற்று வோம் என இப்புனித நாளில் அண்ணா அவர் களுக்குச் சொலுத்தும் காணிக் கையாக சூளுரை மேற் கொள்ளுவோம்;

டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எ.ஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான் படைப்புகள். நாளைய வடிவமைப்புகளில்

இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை. நாற்காலிகள். மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,
26, ஓயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014



"தமிழன் என்றொரு ...

6-ம் பக்கம் தொடர்ச்சி

பிறகு இலக்கியங்கள் தோன்றின.

ஆனால் தமிழ் இலக்கியத்தின் வயது?

——காலத்தையெல்லாம் கடந்து நிற்கிறது தமிழ் மொழி!

''இராவிட கூர்த்தமதி மொழித்துறையில் மட்டுமல்ல; இலக்கியத்திலும் ஒளிவிடுகிறது. இந்தியாவில் உள்ள அத்தனை இனங்களிலும் சமஸ்கிருதத்திலிருந்து விடுபட்ட கவிதை இலக்கியம் பெற்றிருந்தவர்கள் திராவிட மக்களுக்கு ஏற்றுக்காட்டாக இருக்கும் தமிழர்களே!''

——என்கிறார் பேராசிரியர் டி. ஆர். சேஷ அய்யங்கார்.*

திராவிடரைப் பற்றி — குறிப்பாக தமிழ் இலக்கியம் பற்றி ஒரு புறக்கணிப்பு ஏற்பட்டது வருந்தத்தக்கது என்கிறார் ஒரு பேராசிரியர்!

ஆரியக் கட்டுக்கதைகளாலும், சமஸ்கிருதத்திற்கு இந்தியப் பேராசிரியர்களும், ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களும் தந்த மதிப்பினாலும் இந்தப் புறக்கணிப்பு ஏற்பட்டது — என்று வருந்துகிறார் அந்தப் பேராசிரியர்!

அவர்தான் திரு. சேஷ அய்யங்கார்!**

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் மிகத் தொன்மையான தமிழ் நூல் தொல்காப்பியம்!

அதன் காலம் என்ன?

கி.மு. 1000 என்கின்றனர் சிலர்.

கி. மு. 4-ஆம் நூற்றாண்டு என்கிறார் திரு. சேஷ அய்யங்கார்.

திரு. நீலகண்ட சாஸ்திரியார் கி. மு. 600 என்கிறார்.

திரு. சீனுவாச அய்யங்காரோ கி.மு. 350என்கிறார்.

எப்படியோ சுமார் 2000 ஆண்டுகளிலிருந்து 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது தொல்காப்பியம்.

அது ஒரு இலக்கண நூல். ஒரு மொழி கனி குலுங்கிக் கொண்டிருந்த நேரம்தான் இலக்கண நூல்கள் தோன்றமுடியும்!

அந்தத் தொல்காப்பியக் கனி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றால் அந்தத் தருவில் காய்கள் தோன்றிய காலம் — மலர்கள் மலர்ந்த காலம் — மொட்டுகள் அரும்பிய காலம் — அந்தத் தரு அழகிய செடியாக முளைவிட்டிருந்த காலம் — இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கவேண்டும்?

அதனால்தான் கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி என்று தமிழன் ஏற்றிப் போற்றப்படுகிறான்!

தொல்காப்பியம் எழுதப்பட்ட நேரத்தில் 'அகத்தியம்' "மாபுராணம்' 'பூத புராணம்', 'இசை நுணுக்கம்', "களரியாவிரை', 'குருகு' "நாரை' — போன்ற இலக்கண நூல்களும் இருந்திருக்கின்றன.

12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த — சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய — அடியார்க்கு நல்லார் தன் காலத்திற்கு முன்பே அந்த நூல்கள் அனைத்தும் அழிந்து விட்டன என்று எழுதியுள்ளார்.

அகத்தியர்தான் தமிழ் வளர்த்தார் — என்பது சிலர் கூறும் செய்தி.

ஆனால் அகத்தியர் காலத்திற்கு முன்பே — அவர் இலக்கணம் சமைக்கப் பயந்த தற்கு முன்பே — தமிழர்கள் தங்கள் மொழியில் சிறப்பு மிகு இலக்கியங்களைப் பெற்றிருந்தனர் என்கிறார் திரு. சேஷ அய்யங்கார். ***

சமஸ்கிருதச் சொற்களைக் கையாண்டால் அதை எந்த முறைப்படி கையாளவேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

தமிழிலே சமஸ்கிருதம் புகுந்த நேரம் தொல்காப்பியர் காலம்தான். அதற்கு முன்பே சமஸ்கிருதம் புகுந்திருந்தால் தொல்காப்பியரின் முன்னோர்கள் அதற்கு வகை செய்திருப்பார்களன்றோ!

யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள கல்வியறிவில்லாத பட்டிக்காட்டு மக்கள் இன்றும்கூட தொல்காப்பியத்தைப் பின்பற்றி 'ருசி' யை 'உருசி' என்றும், 'ரத்தத்தை' 'இரத்தம்' என்றும் பேச்சுவழக்கில் உச்சரிக்கின்றனர் — என்று இலங்கைப் பல்கழகம் வெளியிட்டிருக்கிற 'இலங்கை வரலாறு' என்னும் நூலில் பேராசிரியர் எஸ். நடேசன். குறிப்பிட்டிருக்கிறார்!

''அரசர்களையும், அவர் கால வரலாறுகளையும் வரிசைப்படுத்திக்கூறும் வரிப்பு மொழி நூலில், கி. மு. 1000-இல், சாலமன் கலங்கள் ஏற்றிக் கொணர்ந்த வணிகப் பொருள்களைக் குறிக்கும் பட்டியலில், மயிலைக் குறிக்கவரும் மிகப் பழைய திராவிடச் சொல்லாகும்''

——என்கிறார் டாக்டர் கால்டுவெல்.

வடமொழி பேச்சு வழக்கின்றி அழிந்தது.

தமிழ்மட்டும் ஆயிரமாயிரம் ஆண்டுகாலமாக உயிருள்ள மொழியாக இருப்பதற்குக் காரணம் என்ன?

''தமிழகத்தில் வடமொழி பரவத்தொடங்கியபோது தமிழ்மொழியே சேர சோழ பாண்டியர்களின் ஆட்சிமொழியாய்ச் செல்வாக்குப் பெற்றிருந்தமையாலும், அந்த அரசுகள் நிலைத்து நின்று விளங்கினமையாலும் அது நிலை கலங்காமல் விளங்க முடிந்தது; எனவே, வந்த வடமொழி அதனுடன் சேர்ந்து அதன் நிழலில் விளங்கமுடிந்ததே தவிர, அதன் அரியணையைக் கைப்பற்ற முடியவில்லை.''

——இப்படிக் கூறுகிறார் டாக்டர் மு. வ.

ஆம்; அரியணையின் ஆதரவு இல்லாவிட்டால்—அல்ல, அல்ல; தமிழே அரியணையில் ஓமராவிட்டால் — அழிந்து விடாதோ, அம்மொழி?

நான் தமிழன்!

நாம் தமிழர்!

——இதை நினைக்கும்போது நம் உள்ளம் பூரிக்கின்றது!

நம் நாவில் தமிழ் வழங்கும் போது ஆயிரமாயிரம் ஆண்டுக்கால பாரம்பரியம் அங்கே நடமாடுகிறது!

உலகிலே மக்கள் இலை தழைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்த நேரம்; மனிதனைக் கொன்று மனிதன் தின்று உயிர் வளர்த்த நேரம். நாகரிகத்தின் உச்சிமிக்க கிளையிலே உட்கார்ந்து கொண்டிருந்தவன் தமிழன்!

தமிழனுக்குப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும்!

தமிழா! நீ எதை இழக்கக் துணிந்தாலும் பரவாயில்லை; ஆனால் தமிழன் என்ற 'சொரணை'யைமட்டும் இழந்துவிடாதே!

அதனால்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ''தமிழை அழிப்பது தமிழரை அழிப்பது'' — என்றார். அதனால்தான் அன்றே தமிழ்த்தென்றல் திரு. வி. க. கூறினார்:*

''தமிழ்நாடு என்றால் என்ன என்பதைப் பற்றி இரண்டோர் உரை பகர்கிறேன். தமிழ் என்பது நமது தாய்மொழி. நாடு என்பதற்கு ஆங்கிலத்தில் Land என்று மொழி பெயர்க்கிறார் சிலர். அது கூடாது. 'தமிழ்நாடு' என்பதற்கு 'Tamil Nation' என்று சொல்வேன். 'Nation' என்பதற்குத் தமிழென்ன?' என்று சிலர் எண்ணக் கேட்பதுண்டு. யான் 'நாடு' என்று சொல்லுவது வழக்கம். மனிதர்களின் பழக்க வழக்கம், கல்வி, அரசு, வாழ்வு, வீரம் இவைகள் எல்லாஞ் சேர்ந்த ஒன்றற்கு 'நாடு' என்று பெயர். இப்போழுது இவைகளில் நமக்கு என்னென்ன இருக்கின்றன? நமக்கு இப்பொழுது நாடு உண்டோ? நாம் நாடு அற்றவர்களாக இருக்கிறோம். காரணம் என்ன? தாய்மொழியினிடத்தில் இடையருத காதல் செலுத்தாமையாகும்.''

* திரு. வி. க., ''தமிழச் சோலை அல்லது கட்டுரைத் திரட்டு'', — முதற் பகுதி. 1959.



"...நீ தந்த விளக்கெடுத்து நடக்கின்றோம்
நெய்யிட்டுத் திரியிட்டு உதவுகின்றார் தமிழ் மக்கள்
கடுமழையில் அணையாமல் காற்றுக்கு நடுங்காமல்
கரம்பொத்திக் கைவிளக்கைக் காக்கின்றோம்!
வரம் ஒன்று தந்திடண்ணா!.. நான்
தவம் இருந்து கேட்கின்றேன்.
அடித்தளத்து மக்களுக்கு அடுக்கடுக்காய் சாதனைகள்
அண்ணா உன் வழியில் அயராமல் நடப்பதெல்லாம்
கண்ணால் ஒரு முறை நீ பார்த்து விட்டால் -எம்
கவலையெலாம் பறந்து போகும்.
தண்ணீர் முழு நிலவே தட்டாமல் நீ வந்துவிடு!
இந்த வரம் நீ தந்தால் இறவா வரம் பெற்றதுபோல்
இன்பத் தமிழகமே கூத்தாடும்— எங்கள்
துன்பமெல்லாம் தொலைந்து விடும்."

——கழகத் தலைவர் கலைஞர் [15-9-1975]

* T. R. Sesha Iyenger, "Dravidian India", p. 79

** Ibid, p. 87

*** Ibid, p. 81.

தி.மு. கழகத்தைத் துவக்குவதில்தான் கால தாமதம் செய்தாரே ஒழிய, துவக்கிய பின் அவர் நடத்திய சூறாவளிப் பயணம் சாதாரணமானதல்ல. "கூட்டத்துக்கு ஒத்துக் கொண்டு வராதவர்" என்று குற்றஞ்சாட்டப்பட்ட அண்ணாவைக் காண முடியவில்லை! மாதம் 30 நாட்களும் சுற்றுப் பயணம், சுற்றுப்பயணம் என்றே அலையலானார்.

ஒருநாள் அவருக்கு நல்ல களி. காய்ச்சல் இருப்பது போலக்கூட இருந்தது. இருமல் வேறு! வந்தவாசிக்கு அருகில் ஒரு திருமணம் அண்ணாவின் உடல்நிலையைக் கண்ட அண்ணாவை ஆளாக்கிய சிற்றன்னையான 'தொத்தா' அவர்கள், "இந்த உடம்போடு என்னப்பா? பேசாமல் படு" என்றார்கள்.

தொத்தா சொன்னதை அண்ணா எதையும் தட்ட மாட்டார். ஒரு 'கப்' சாப்பியைச் சாப்பிட்டு விட்டு, காரில் ஏறிப் போய் விட்டார் அண்ணா.

தொத்தாவுக்கு கோபம்! "என் பேச்சைக் கேட்காமல் உடம்பு இப்படியிருக்கப் போகிறானே இவன்? வீட்டில் எனக்கென்ன வேலை?" என்று கோபித்துக் கொண்டு அவர்கள் சென்னைக்குப் போய்விட்டார்கள். மாலையில் திரும்பய அண்ணாவுக்குச் சங்கடமாயிருந்தது.

ஈழத்தடிகளைக் கூப்பிட்டு, "தொத்தாவிடம், அவர்கள் பேச்சைக் கேளாமல் நான் போனதால், கடுமையான காய்ச்சல் வந்து படுத்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்! உடனே வந்துவிடுவார்கள்" என்று சொல்லி அனுப்பினார்; பொய்தான்!

தொத்தா இச்செய்தியைக் கேள்விப்பட்டதும் உடனே புறப்பட்டு வந்துவிட்டார். கூடத்து ஈசிச் சேரில் அண்ணா உட்கார்ந்திருந்தார். தொத்தாவைக் கண்டதும், அண்ணா சொன்னார்:

"தொத்தா, நான் கூட்டத்துக்குப் போகாவிட்டால் தான் காய்ச்சல் வரும். நீ சொல்லியும் போனேன். இருந்தாலும் — எனக்கு காய்ச்சல் போய்விட்டது பார்த்தாயா?" என்று கேட்டு விட்டு அண்ணா தம் அருகிலிருந்து அரங்கண்ணல் போன்ற தோழர்களைப் பார்த்து விட்டுப் புன்னகையுடன் மீண்டும் தொத்தாவிடம் கேட்டார்.

"எங்களைப் போய் தடுக்கிறியே!"

அண்ணாவின் குறும்புப் புன்னகையை மட்டும் தொத்தா அப்போது பார்க்க வில்லை; அண்ணாவின் கூடமை உணர்வையும் சேர்ந்துதான் கண்டார்!

———

பயன்பட்ட சூல ஆற்றலை தவறுக அரசியல் வியாபாரம் ஆக்கிட யோசனை சொன்னவர் யார் என்று இங்கே கூறத் தேவையில்லை! ஏனென்றால் அவர் இப்போது அண்ணாவின் பெயரையே தம்முடைய அரசியல் வியாபாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறவர்.

அண்ணா முதலமைச்சர் பொறுப்பேற்ற முதலாவது ஆண்டில் நடந்தது இது. கன்னியாகுமரியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொலைக் குற்றம் புரிந்து, அது நிரூபணமாகி தூக்குத் தண்டனையும் ஊர்ஜிதமாகிவிட்டது.

அரசு ஊழியரான அவருக்கு, அண்மையில்தான் திருமணமாகி இளம் மனைவியும் ஒன்றரை வயதுக் குழந்தையும் இருந்தனர்.

தூக்குத் தண்டனை ஊர்ஜிதப்படுத்தப் பட்டதுமே— அந்த இளைஞரின் மனைவி சிவகெங்கையிலிருந்த தனது சகோதரனிடம் மல்கிய கண்ணீருடன் ஓடோடிச் சென்றாள்.

கழகத் தோழனை அந்தச் சகோதரன், தம்முடைய நண்பர்களிடமெல்லாம் இதுகுறித்து அழுது கதறி, தனது இளம் தங்கைக்கும் அவள் குழந்தைக்கும் ஏற்படப் போகும் வெறுமையைப் பற்றி வேதனை பொங்க முறையிட்டிருக்கிறான்.

"கருணையின் வடிவான பேரறிஞர் அண்ணாதான் இப்போது முதலமைச்சர்; எதற்கும் போய் அவரிடம் முறையீடு செய்வோமே!" என்று சிலர் யோசனை கூறியதும், கழகத் தோழன் — தன்னுடைய உடன் பிறவாச் சகோதரனை அண்ணாவை நாடித் தன் தங்கையோடும் குழந்தையோடும் ஓடோடி வந்தான்.

தன் மைத்துனன் செய்த கொலை ஊர்ஜிதமான ஒன்றுதான். அதற்குத் தீர்ப்பாக தூக்கு தண்டனை நிறைவேற்றப்படவேண்டிய ஒன்று



செய்வதாகக் கூறினர்.

மறுநாள் காலையில் தன் மணவாளனைத் தூக்குக் கயிற்றில் இழந்துவிடப் போகிற துன்பத்தை நினைக்க முடியாமல் அந்த இளம் பெண் நெடுஞ்சாண்கிடையாக அண்ணாவின் காலில் விழுந்து எழுந்து, தன் பிள்ளையையும் அண்ணாவின் காலடியில் வைத்தாள்.

"அதுதான் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப் பார்க்கிறேன் என்று சொன்னேனே!" என்று கூறிய அண்ணா சட்டென்று எழுந்து புறப்பட ஆயத்தமாகிவிட்டார்.

அண்ணாவின் இரக்கமுள்ள மனத்தை அதிகம் சோதித்து விட்டதாக எண்ணிய அந்தக் கழகத் தோழனும், அவனோடு வந்தவர்களும் அண்ணாவின் பதட்டம் கண்டு தலை குனிந்து கொண்டனர்!

அந்த நேரத்தில்தான் இது நடந்தது. அண்ணாவின் காலடியிலிருந்த குழந்தை அவர் கால்களைப் பிடித்த வாறு நிமிர்ந்து அண்ணாவையே பார்த்துக் கொண்டிருந்தது. அண்ணாவால் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியவில்லை!

சட்டென்று என்ன எண்ணினாரோ — அண்ணா உட்கார்ந்துவிட்டார். கண்களைத் துடைத்துக் கொண்டார். சற்றுமுன் தம்மைக் காண வந்தபோது தோழர்கள் அணிவித்த மாலைகளின் இடையே தெரிந்த ஓர் ஆப்பிள் பழத்தை எடுத்துக் கொண்டு— "ஒரு கத்தியை எடுத்துவா" என்று பணியாளரிடம் கூறினார்.

கத்தியுடன் வந்த பணியாள் ஆப்பிளை வாங்கக் கையை நீட்டினான். இப்படிக் கொடு என்று பொருள் படும்படி கத்தியை வாங்கினார் அண்ணா. ஆப்பிளைத் துண்டாக்கிக் கொண்டு— தன் காலடியில் அதுவரையிலும் தன்னையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்த குழந்தையை எடுத்தார்.

அந்தக் குழந்தையின் கையில் ஆப்பிள் துண்டைக் கொடுத்துவிட்டு அதன் கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கொண்டே, "பி. எஸ்." என்றார்.

அண்ணாவின் தனிச் செயலாளர் வந்து நின்றார்.

"இந்தக் குழந்தையின் தகப்பனார் மீது நாளைக்கு நிறைவேற இருக்கும் தூக்கு தண்டனை ரத்துச் செய்யப்பட ஆவன செய்யுங்கள்!" என்று உத்தரவிட்டார் அண்ணா.

குழந்தையின் தாயும் — மாமனும் மீண்டும் அண்ணாவின் காலடியில் விழுந்தனர்.

குழந்தையைத் தாயின் கையில் கொடுத்துவிட்டு, "கவலைப்படாதே அம்மா! உன் கணவன் மீது தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படாது என்று உறுதியான பிறகே நீ இங்கிருந்து போகலாம்" — என்று கூறிவிட்டு எழுந்தார் அண்ணா. மாடிக்குப் போனார். அண்ணாவின் தனிச் செயலாளர் அன்று அண்ணாவின் வீட்டை விட்டு வேறெங்கும் செல்லவில்லை. அண்ணா அவர்களின் உத்தரவு நிறைவேற, தூக்குத் தண்டனை ரத்து உறுதி செய்யப்படும் வரையில் அவரால் எப்படிவெளியே போகத்தான் இயலும்?

அன்று இரவு மூன்றரை மணியளவிலேயே இது உறுதி செய்யப்பட்டது. அதுவரையில் அண்ணாவும் மாடியில் தூங்கவில்லை!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிய நினைவுகளில் என் நெஞ்சில் என்றென்றும்

பேரறிஞர் அண்ணாவுடன் சில நினைவுகள்

சிவகெங்கை சேதுராசன்

திருவண்ணாமலை இடைத் தேர்தல் நேரம்! ப.உ.ச. அவர்களுக்குப் போட்டியாக காங்கிரஸ்காரர் பத்ராசலம் பிள்ளை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்.

அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் தேர்தல் பிரச்சாரத்திற்காக திருவண்ணாமலைத் தொகுதியில் பங்கேற்றுச் சிறப்புச் சொற் பொழிவுகள் நடத்திக்கொண்டிருந்தனர். இப்போது நம்மோடு இல்லாத ஒருவரும் அப்போது இந்தப் பிரச்சாரத்தில் பங்கேற்றுச் சொற் பொழிவு(?) ஆற்றிட முன் வந்திருந்தார்.

ப. உ. சண்முகம் அவர்கள் இல்லத்தில் அனைவரும் கூடி திருவண்ணாமலைத் தேர்தல் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது — சட்டென்று அண்ணா அவர்களிடம் ஒரு யோசனை கூறப்பட்டது.

"வேட்பு மனுவைத் திரும்பப் பெற நாளைதானே அண்ணா கடைசி நாள்? பத்ராசலம்பிள்ளையிடம் காமராசர் பெசுகிற மாதிரி டெலிபோனில் நம்முடைய சிவகெங்கை சேதுராசனைப் பேசச் சொன்னால்ப. உ. ச. தேர்தல் எதுமெ இல்லாமலே ஜெயித்து விடுவாரே!"

தமது மூக்கைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே, அரியதோர் ஆலோசனையைக் கூறிய பெருமிதத்தில் அண்ணாவைப் பார்த்தார்- இதைச் சொன்னவர்.

அண்ணா, கலைஞர் அவர்களும், ப. உ. சண்முகம் அவர்களையும் ஒரு தடவை தன் விழிமேலிவ் பார்த்து விட்டு யோசனை கூறிய அந்த நபரின் மீது தாம் கொண்ட வெறுப்பையும் வெளிப்படுத்தி விடாமல் மிகவும்நாசூக்காகச் சொன்னார்: "சேதுராசன் மென் மேலும் வளரக் கூடிய ஒரு கலைஞன். அவனைப் போய் வீண் கிரிமினல் ஆக்கி விடாதே!"

அண்ணா இப்படிச் சொன்னதும் அந்த "நபரின்" முகம் சட்டென்று செவ்வாய்விட்டது.

கழகப் பிரச்சாரத்திற்குப் தான் — என்பது போன்ற வரை முறைகளில், இந்தக் கழகத் தோழன் இருவேறு கருத்துக்கொண்டிருக்கவில்லை. ஆனால், நிறைவேற்றப்படும் இந்த மரணத்தினால் வேறு இரண்டு உயிர்கள் பரிதவிக்க நேரிடுமே — என்பதுதான் அவனுடைய ஆற்றுமை!

அந்தக் கழகத் தோழன், தன் தங்கையுடன்அண்ணாவை வந்து பார்த்து முறையிட்டான். தன்னுடைய ஆற்றவொண்ணா துயரையும் மைத்துனனின் உயிரையும் நடுவே நிறுத்தி, தங்கையின் புதிர் வாழ்வையும் அவருடைய பிஞ்சு மகவினின் எதிர் நாளையும் பற்றி அண்ணாவின் வீட்டுக்கு வந்து முறையிட்டு எடுத்துக் கூறி மன்றாடினான்.

அண்ணா சிறிது நேரம் இதைக் கவனமாகக் கேட்டு விட்டு, தண்டனை ரத்துச் செய்யப்படுவதற்கு ஆவன

மறக்க இயலாத நிகழ்ச்சிகளில் இவை இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

அண்ணா அவர்களோடு பழக நேரிட்ட அனுபவங்களில் எண்ணிப்போன்ற தொண்டர்களின் உள்ளங்களைத் தடவி மீட்டிய பல்லாயிரம் சுவையனுபவங்கள்; அதைப் பெறுகிறவர்களுக்கு மட்டுமின்றி பெற்றவர்கள் மூலம் இவற்றை அறிகிறவர்களுக்கும் ஆழமான பொருளை உணர்த்தக்கூடியவை!

அவருடைய வழித் தோன்றலாய் கழகத்தை நடத்திச் செல்லும் கலைஞர் அவர்களைப் பற்றி — "கல்லக்குடி வென்றான்" என்ற தலைப்பில் நான் நடத்திய கலந்துரையாடலில் ஒன்றினைக் கேட்டுவிட்டு அண்ணா கூறியது இன்னும் என் காதுகளிலே ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது:

"'கல்லக்குடி கொண்டான்' என்னும் கலந்துரையாடலைக் கேட்டுவிட்டு இப்போது நினைத்தாலும் இப்படி ஒரு பயங்கரப் போராட்டத்துக்கா தம்பி கருணாநிதியை அனுப்பினோம்? என்று என் இருதயத்தையே ஆட வைத்துவிட்டான் — சேதுராசன்!"

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அண்ணா!

விவேகானந்தன்

1957 பொதுத் தேர்தலிலே வென்று தி.மு.கழகத்தின் சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் பதினைந்து உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் பிரவேசித்த காலம்!

காங்கிரஸ் கட்சி 150 உறுப்பினர்களைக் கொண்டு, காமராசர் தலைமையிலேயே மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைத்து, எதிர் வரிசையிலே பதினைந்தே உறுப்பினர்களுடன் அண்ணா அவர்கள் ஆட்சியைக் கலக்கிக் கொண்டிருந்த நேரம்!

சட்டப் பேரவையிலே கொண்டுவரப்படுகின்ற எந்த விவகாரமானாலும், எந்தச் சட்டங்களானாலும் அவைகளிலே கழகம் தனது கருத்தைச்சொல்லத் தவறியதில்லை; தயங்கியதுமில்லை. கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்திலேயும் கழக உறுப்பினர்கள் அதற்கான மாற்று நோக்கங்களையும் சொல்லாமலிருந்ததில்லை.

இன்று எதிர்க் கட்சிகள் தனிப்பட்டமுறையில் ஏசிப் பேசி மகிழ்வதையே நோக்கமாகக் கொண்டு காலத்தை வீணடித்து வருகின்றனவே — அத்தகைய போக்கு கழகம் எதிர்க்கட்சியாக இருந்த போது கிஞ்சிற்றும் கிடையாது.

காரணமற்றுக் காங்கிரஸ் காரர்களைப் பகைத்துக் கொள்வதை ஒருபோதும் கழக உறுப்பினர்கள் கைக்கொண்டதில்லை.

அன்று பதினைந்தே உறுப்பினர்கள் — பல்வேறு பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தார்கள். எல்லா விவாதங்களிலேயும் கலந்துகொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் இரண்டே இரண்டு பிரச்சினைகளிலே மட்டும் ஓட்டெடுப்புத் தேவை என்று வலியுறுத்தினர்.

காங்கிரஸ்காரர்களுக்கு இருந்த மெஜாரிட்டி ஊரறிந்தது. கழகத்தின் சார்பாக பதினைந்தே உறுப்பினர்கள். வாக்கெடுப்புக் கோரினால் என்னவாகும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனாலும் இரண்டே இரண்டு பிரச்சினைகளில் மட்டும் வாக்கெடுப்பை அண்ணா வற்புறுத்தினர்.

அதற்குக் காரணம், அந்த இரண்டு பிரச்சினைகளும் கழகத்திற்கு மட்டுமே உரிய பிரச்சினைகள் அல்ல, நாட்டுக்குரிய பொதுப் பிரச்சினைகள்!

அதிலே ஒன்று, இந்த நாட்டிற்குத் ''தமிழ்நாடு'' என்று பெயர் சூட்டவேண்டும் என்ற பிரச்சினை.

அதற்காக கழகத்தின் சார்பில் தரப்பட்ட வெட்டுப் பிரேரணையில் அனைத்து உறுப்பினர்களும் கருத்துக் கூறிய பின்னர் — அதற்குக் காங்கிரஸ்காரர்கள் மறுத்துப் பேசியான பிறகு, சட்டப் பேரவைத் தலைவர் எழுந்து, இந்த வெட்டுப்பிரேரணையை நீங்களெல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்கிறீர்களா என்றார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து கழகத்தின் சார்பில் சொன்னார்கள்: ''எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ''தமிழ்நாடு'' என்று பெயரிடும் பிரேரணையை மட்டும் நான் வாபஸ் பெறத் தயாராக இல்லை — அதன் பேரிலே ஓட்டெடுப்பு நடத்தவேண்டும்'' என்று கேட்டார்கள்.

எதிர் வரிசையிலே இருந்த கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், பிரஜா சோஷலிஸ்டுகள், மற்றும் காங்கிரஸ் சீர் திருத்தக் கட்சியினரும் கூட அண்ணா அவர்களது கோரிக்கையை ஆதரித்து ''ஆம், ஓட்டெடுக்கத்தான் வேண்டும்'' என்று குரல் கொடுத்தார்கள்.

ஓட்டெடுப்புக்கு விடப்பட்டதும் எதிர்த்தரப்பிலே இருந்த அண்ணா அவர்களைப் பின்பற்றி அத்தனை உறுப்பினர்களும் 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் தேவை என்பதற்காக எழுந்து நின்றார்கள்.

காங்கிரஸ் தரப்பிலே இருந்த 150 பேரும் ''தமிழ் நாடு வேண்டாம்'' என்பதற்கு எழுந்து நின்றார்கள்.

ஏன் இந்த ஒன்றின்பேரிலே மாத்திரம் அண்ணா அவர்கள் ஓட்டெடுப்பை வலியுறுத்தினார்கள்? அனைவருக்கும் தெரியும்தோற்றுப்போகும் என்று. ஆனால், யார் யார் தமிழர், தமிழ்நாட்டிற்குத் ''தமிழ் நாடு'' என்று சொல்கின்றவர்களது முகம்கள் யாவை? அவற்றை நாடு பார்க்கட்டும் என்பதை அடையாளம் காட்டத்தான் இந்தப் பிரச்சினையிலே மட்டும் வாக்கெடுப்பைக் கோரினார்கள்.

காங்கிரஸ் உறுப்பினர்களிலே திருத்தணிக்காகப் போராடிய தமிழ் உள்ளம் படைத்த வினயகம் போன்றவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு இது பிடிக்கும். இந்த நியாயமறிவார்கள். ஆனாலும் கட்சிக் கட்டுப்பாடு — அவர்களும் கூடத் தயங்கித் தயங்கி தலையைத் தொங்கப் போட்டபடியேதான் நின்றார்கள். இல்லையென்றால் காமராசர் விடுவாரா?

அண்ணா அவர்கள் சும்மா இருக்கவில்லை. வினயகமும் எழுந்து நிற்பதைப் பார்த்து— ''ஏனய்யா, நீ கூடவா?'' என்றார். அவர் அண்ணாவைத் திரும்பிப் பார்க்கவே அஞ்சியவாறு தலை குனிந்தபடி நின்றார்.

வயதான கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட இளம்பெண் அருவெறுப்புடன் கிழட்டுக் கணவனின் முகம் பார்க்கவும் சகியாது தரையிலேயே பார்த்து நிற்பது போல், வினயகம் போன்றவர்கள் குனிந்தபடி நின்றனர்.

அண்ணா அவர்கள் சும்மா இருக்கவில்லை. உட்கார்ந்த படியே காமராசரை நோக்கிக் கேட்டார். ''தமிழ்நாடு வேண்டாமென்று சொல்லுகிற தமிழர்கள் இவ்வளவு பேரை அழைத்துக்கொண்டு வந்தீர்களே, நல்ல சாமர்த்திய சாலி ஐயா நீங்கள்'' என்றார். அதற்கு அவர், ''பரவாயில்லை பார்க்கலாம், பார்க்கலாம்'' என்றார்.

அன்று பலபேர் கேட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே ஓட்டெடுத்ததாலே என்ன சாதித்து விட்டார்கள்? என்றெல்லாம் வக்கணை பேசினர்.

அண்ணா அவர்கள் அமைதியோடும், நிதானத்தோடும் சொன்னார். ''நாங்கள் உடனடியாக எதையும் சாதிக்க வில்லை. எதைச் சாதித்தோமென்றால் தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியிருக்கிறோம். அது இப்போது தெரியாது. 15 பேராக இருக்கிற நாங்கள் இந்தக் காலத்து வரலாற்றை எழுதவில்லை — எதிர்கால வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறோம்; கண்ணீரால் எழுதுகிறோம். எங்கள் வியர்வையால் எழுதுகிறோம். அது உலர்வதற்குப் பத்து ஆண்டுகள் பிடிக்கலாம். 20 ஆண்டுகள் பிடிக்கலாம் — ஆனால், எதிர்காலத்தில் நம்முடைய நாட்டினுடைய எதிர்காலத் தலைமுறைக்கு ஏற்படுகின்ற மன எழுச்சிக்கு உறுபடையாக அமையும்'' என்றார்கள்.

அண்ணா அவர்களின் தீர்க்க தரிசனத்திற்கேற்ப — பத்தே ஆண்டுகளில் கழக ஆட்சி ஏற்பட்டு, அண்ணா அவர்கள் கர்ஸ்தலிலேயே — அவராலேயே அந்தக் கனவு நிறைவேறியது.

இதுபோன்றே — இரண்டாவதாக அன்று அண்ணா அவர்கள் ஓட்டெடுப்புக் கோரியது கைத்தறியாளர் பிரச்சினையில்! அன்று — கைத்தறி நெசவாளர்களிடம் ஓட்டு வாங்கி வந்த காங்கிரஸ்காரர்களும் கைத்தறியாளர் பிரச்சினைக்கு எதிராக எழுந்து நின்றார்கள். அவர்களது முகத்திரை கிழித்துக் காட்ட அந்த ஓட்டெடுப்பு நன்கு உதவியது!

அர்த்த சாஸ்திரத்தை இயற்றிய கௌடில்யன் சொல்வானும் — ஒருவன் கண்ணை உன் விரல்களால் குத்துவதைவிட — அவனுடைய விரல்களைக் கொண்டே அவனுடைய கண்களைக் குத்தச் செய்'' என்று.

இது சாணக்கிய தந்திரம் என்பார்கள்.

இந்தத் தந்திரம் அண்ணாவுக்கும் தெரியும். காங்கிரஸ் காரர்களை அவர்களது விரல்களாலேயே அவர்களது கண்களைக் குத்திக்கொள்ளும் காட்சியைத்தான் இந்த இரண்டு பிரச்சினைகளில் செய்து காட்டினார் அண்ணா!

இத்தகைய ராஜதந்திரமும், தொலைநோக்குப் பார்வையும் தொடக்க முதலே அண்ணா அவர்களுக்கு உண்டு!

அறிஞர் அண்ணா அவர்கள் ஈரோட்டிற்கு வந்து தந்தை பெரியாருடன் சுயமரியாதை இயக்கத்தில் ஒன்றுபட்ட சமயம் அது!

எழுத்துப் பெரும் பசி கொண்ட சாமி சிதம்பரனார் அவர்கள் கும்பகோணத்தில் ''அறிவுக்கொடி'' திங்கள் மலரை இரண்டாண்டுகளாக நடத்தி நட்டப்பட்டுக் கொண்டிருந்த காலமும் அது தான். 1937-ஆம் ஆண்டு!

தந்தை பெரியார் அவர்கள் எங்கள் நிலைமையைக் கேள்விப்பட்டு, தந்தைக்கு மகன் மீது உள்ள உரிமை யுடன் வீட்டிற்கு வந்து, வீட்டையும் அச்சகத்தையும் விற்று வாங்கி இருந்த கடன் களைக்கொடுத்து, ஈரோட் டிற்கு அழைத்துச்சென்றார்கள்!

நாங்கள் ஈரோடு சென்ற போது அன்புமிக்க அண்ணா வின் சிறிய தாயார் (தொத் தா) அவர்களையும், அண்ணா அவர்களையும் சகோ தரியார், ராணி அண்ணாத் துரையையும் பார்த்தேன்.

ஈரோட்டில் ஐயா குடும்பத் தோடு நாங்களும் சேர்ந்து ஒரு பெரும் குடும்பம் ஆகி விட்டோம்!

''குடிஅரசு'' நிர்வாகத்திலும் கட்சி வளர்ச்சிப் பொறுப்பி லும் ஐயா அவர்களுடன் இணைந்துஉற்சாகத்துடன் அறி ஞர் அண்ணா அவர்களும், தமி ழறிஞர் சாமி. சிதம்பரனாரும் பங்கேற்றார்கள்.

கட்சி வளர்ச்சிச் சொற் பொழிவுகளும், பத்திரிகைச் செய்திகளும் புதிய திருப்பத் தில் வளர்ச்சி யடைந்து வெற் யுடன் நடந்து கொண்டி ருந்தது. தந்தை பெரியார் அவர்களின் பொறுப்பில் கவலையற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தோம்.

தந்தை பெரியார் அவர்கள் ''விடுதலை'' நாளேடு ஆரம் பிப்பதற்காக சென்னைக்கு வந்தார்கள். ''விடுதலை'' நாளேடு ஆரம்பிக்கப்பட் டது. அதன் ஆசிரியர்களாக அண்ணா அவர்களும் சாமி சிதம்பரனார் அவர்களும் அமர்த்தப்பட்டார்கள்.

சித்தாதரிப்பேட்டையில் சாமி பண்டாரத் தெருவில் ஒரே வீட்டில் அண்ணாவின் குடும்பத்துடன் நாங்களும் சேர்ந்து வசித்து வந்தோம்; எங்களுக்கு குடும்பத் தலை வியாக, பொறுப்புள்ள அன்னையாக மதிப்பிற்குரிய தொத்தா அவர்கள் இருந்து வந்தார்கள்.

''விடுதலை'' அலுவலகம் பாலகிருட்டினபிள்ளைத் தெரு வில் இருந்தது. அலுவலகத் திற்கு ஆசிரியர்கள் இரு வரும் சேர்ந்துதான் செல் வார்கள். சேர்ந்துதான் வீட் டிற்கும் வருவார்கள். ஒரு வரை விட்டு ஒருவர் பிரிந்து போகமாட்டார்கள். வரும் பொழுதும் பேசிக்கொண்டே வருவார்கள். போகும் பொழுதும் பேசிக்கொண்டே தான் போவார்கள். ஓயா மல் பேசுவார்கள். அப்படி என்னதான் பேசிக் கொண் டார்கள் என்பதை அவர் களைத்தான் கேட்க வேண்டும்!

ஒரே வீட்டில் எங்கள் இரு குடும்பங்களும் வசித்த வந் தனர் அப்படி இருந்தும் நான் அண்ணா அவர்களுடன் பேசிய தில்லை. ஆடவர்கள் வீட்டில் இருந்தால்பெண்கள் இருவரும் வெளியில் வரமாட்டோம்.

எங்கள் தஞ்சை மாவட் டத்தில் எங்கள் அண்ணன் மனைவிமார்கள் மைத்துனர் கள் எதிரில் வரமாட்டார்கள். அவ்விதப்பழக்கம் எப்படியோ எங்களிடத்திலும் இருந்து விட்டது.

சென்னைக்கு வந்த பிறகு முதலில் அண்ணா அவர்களின் கடற்கரை பேச்சைக் கேட்க என்னையும் அழைத் துக் கொண்டு போயிருந்தார்கள். நான் மிகவும் வியப்புற் றேன்! அவ்வளவு பிர மாண்டமான கூட்டம்.

அண்ணாவின்சொற்பொழிவு — சொல்லடுக்கு, சரமாரி யாக வெளிவரும் அழகு மக்க கருத்துக்கள், வார்த்தை களின் தெளிவு, சொல் அலங் காரம். அடேயப்பா! இப்படிப் பட்ட ஒரு சாதுவா இப்படி பேசுகிறார்? என்று ஆச்சரியப் பட்டேன். இதுதான் எனக் குத் தெரிந்து மேடைப் பேச் சுக்களை கேட்கும் ஆர்வத் தையே உண்டாக்கியது என் றும் அது மிகையில்லை.

சில ஆண்டுகளில் ''விடு தலை'' நாளேட்டிலிருந்து ஒரே நாளில் இருவரும் பிரிந் தார்கள்.அண்ணா காஞ்சிக்குச் சென்றார்கள். நாங்கள் கும்பகோணம் சென்று வாழ்க்கை நடத்த வருமா னத்திற்கு வழிதேட அச்ச கம் ஒன்றினை வைத்தோம்.

ஆசிரியர்கள் இருவரும் கூட்டைவிட்டுப் பிரிந் து சென்ற இரு பறவைகள் போல் ஆனார்கள். பிறகு அண்ணா அவர்கள் எப்பொழு தாவது தஞ்சைக்கு வரும் பொழுது கும்பகோணத்தில் உள்ள எங்கள்- வீட்டிற்கும் வந்துவிட்டுச் செல்வார்.

பின்னர் நாங்கள் மீண்டும் சென்னைக்கு வந்தோம்.

சூளைமேடு சவராட்டிரா நகர்ப் பகுதியில் குடியேறி னோம். அங்கு நாவலர்அவர் கள் குடும்பமும் அதே தெருவில் இருந்தது.

மறுபடியும் இயக்கத் தோழர்கள் வருகை வளர்ந் தது. அண்ணா அவர்களும் வருவார்கள். அளவளாவிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் தி. மு. கழகம் ஆரம்பித் தார்கள்.

சாமி சிதம்பரனார் அவர்கள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டார்கள். திருவாரூர் சாரங்கபாணி அவர்கள் நடத்தி வந்த சிங் கப்பூர் தமிழ் முரசு நாளேட் டிற்கு வாரம் மூன்று நான்கு கட்டுரைகள் எழுதி கொடுப்ப தாகவும் ''லோகோபகாரி'' திங்கள் இதழின் ஆசிரியராக வும் எஸ். குருசாமி அவர்கள் ஓய்வு பெறும்போதெல்லாம் ''விடுதலை'' ஆசிரியராகவும் இருந்து ஓயாத எழுத்துப் பணியில் ஈடுபட்டு இருந்தார் கள்.

தந்தை பெரியார் வகுத்த கொள்கைவழிவாழ்ந்தஅண்ணா அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவதிலும், எழுத்துத் துறையிலும் மக்களுக்கு நல் வாழ்வுத் திட்டங்களை வகுக் கும் துறையிலும் சிறந்ததோர் தலைவராக விளங்கினார். அதில் சிறிதும் ஐயம் இல்லை.

''தமிழுக்குத் தொண்டு செய்தோர் தரணியில் சாவதில்லை.'' எனும் கருத் துக்கேற்ப வாழ்ந்தவர் அண்ணா.

அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த கொள்கை வழியில் பாங்குடன் நடந்து அரசு நடத்தி வரும் கலைஞர் தமிழ் மொழிக்குச் சிறப்புத் தந்து காத்தானைத் தலைவராவார்!

அண்ணா எள் என்பதற்குள் எண்ணெயாகச் செயலாற்றிக் காட்டியவல்லமை, திறமை; செய்வதைத் திருந்த செய்யும் ஆற்றல் பெற்றவர். கலைஞர் வாழ்க கலைஞர் ஆட்சி. வாழி மக்கள் நலன்கள் செழித் தோங்கி!

கட்டளைகளைக் கல்லில் பொறிக்க வில்லை-அன்புக் கலைஞரிடம் அல்லவா பொறித்துச் சென்றுள்ளாய்? தொடர்கிறோம், மேலும் தொடர்கிறோம்.....

கருத்து மேகங்கள்
கனிந்து சொல் நதியாய்ப்
பெருக்கெடுக்கப் பொழியும்

பேச்சுப் பெருமழையே!
உனது நாற்றங்காலின்
உன்னத நாற்றுகள்

தினமும் தன் மேகத்தைத்
தேடுகின்றன வாடுகின்றன
மரண பூமிக்கு

மகுடம் சூட்டியநீ-எங்கள்
மன பூமிக்கு-ஏன்
விதவை உடை நெய்தாய்?

இங்கு எமது,
மௌன காவியத்தில்,
அழுகைகளே சொற்களாயின

விம்மல்கள் பாட பேதங்களாய்
விரிகின்றனவே இன்னும்?
எனினும் அண்ணு

சோக மறவர்கள்
சோர்ந்து விடவில்லை--உனது
வேக மறவர்கள்--மேலும்

வேகம் அடைந்து விட்டனர்
ஏனெனில்,
நீ உன்,

கட்டளைகளைக் கல்லில் நீ பொறிக்க வில்லை - அன்புக்
கலைஞரிடம் அல்லவா பொறித்துச் சென்றுள்ளாய்!
தொடர்கிறோம் மேலும் தொடர்கிறோம்...

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை)

எண். 151. சேலம்-1.

தபால் பை எண். 171 தொலைபேசி எண் : 2402

★

கிளைகள் :- நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓம ஞர், தரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை , பெத்தநாய்க்கன்பாளை யம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம் நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.

-: வட்டி விகித அட்டவணை :-

கால் டெபாசிட்டுகள்:

ரூ. 5000–க்கும் அதற்குமேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	3¼%
ரூ. 10,000-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	3½%

சீசன் டெபாசிட்டுகள்:

ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும்

15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3%
46 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும்	3½%

பிக்செட் டெபாசிட்டுகள்:

ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு:

1.	91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள்	6%
2.	6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள்	6½%
3.	9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12மாதத்திற்குள்	7½%
4.	12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36மாதத்திற்குள்	8½%
5.	36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60மாதத்திற்குள்	9½%
6.	61 மாதத்திற்கும் அதற்கு மேலும்	10½%

நடப்புக் கணக்கு ½% சேமிப்புக் கணக்கு 6%

ரூ. 5,000–க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகர், *தலைவர்.*

தி. பாலசுந்தரம் பி. ஏ. - துணைப்பதிவாளர், நிர்வாக அதிகாரி.

பி. காசி- பி.எஸ்சி., எச். டி. சி., காரியதரிசி

MALCO

அதிக அலுமினியம் கிடைக்க வழி வகுக்கிறது மால்கோ

தி மதராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட், கோயமுத்தூர், இத்தாலி நாட்டைச் சேர்ந்த மான்டிகாடினி- எடிஸன் நிறுவனத்தின் தொழில் மற்றும் நிதிக் கூட்டுறவுடன் மேட்டூர் அணையில் ஒருங்கிணைந்த அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வருகிறது.

பிரைமரி அலுமினியம் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஒன்றான மால்கோ தற்சமயம் அலுமினியக்கட்டிகள், பாளங்கள், கம்பித் துண்டுகள், அலுமினியக் கலவைகள், பிராப்ரீஸீடிராதுண்டுகள் ஆகிய பல பொருட்களைத் தயாரித்து வருகிறது.

உற்பத்தி அளவை ஆண்டுக்கு 25,000டன்களாக உயர்த்தும் வகையில் தொழிற் சாலையை விரிவு படுத்தும் பணிகளை இப்போது மால்கோ மேற்கொண்டுள்ளது. ரோல்ட் பொருட்கள் மற்றும் எக்ஸ்ட்ரூன்களைத் தயாரிப்பதற்கான இயந்திரங் களும் நிறுவப்பட்டு வருகின்றன.

தி மதராஸ் அலுமினியம் கம்பெனி லிட்,

பதிவு அலுவலகம்: "ஜெயலக்ஷ்மி"

ரேஸ் கோர்ஸ், கோயமுத்தூர் 641018

FOR QUALITY, STRENGTH and DURABILITY

SANKAR CEMENT

THE INDIA CEMENTS LIMITED,
175|1, MOUNT ROAD
MADRAS-2.

Factories: Sankarnagar, Tirunelveli Dist.
Sankardrug, Salem Dist.